₹10

fmpb

# அறைகூவல்

Volume 54 | Issue 1 | January 2024

*தேவனாகிய கர்த்தாவே, தேவரீர் என்னை இதுவரைக்கும் கொண்டுவந்ததற்கு நான் எம்மாத்திரம்? என் வீடும் எம்மாத்திரம்? – 1 நாளாகமம் 17:16*

# நான் எம்மாத்திரம்?






# ஆரம்ப வரிகள்...

நாம் என்ன செய்கிறோம், எங்கு போய்கொண்டிருக்கிறோம் நம் வாழ்வை எவ்வாறு வாழ்கிறோம் போன்ற கேள்விகளை அவ்வப்போது நம்மை நாமே கேட்டுக்கொள்ள தவறினோமேயானால் நம் வாழ்வை முழுமையாக வாழ தவறுகிறோம். இஸ்ரவேல் சரித்திரத்திலே புகழ்பெற்ற, கோலியாத் போன்றோனை வீழ்த்திய, பல யுத்தங்களை ஜெயித்து, ராகத்தலைவனாகவும், சௌந்தரியமுள்ளவனாகவும், புத்திசாலியாகவும் இருந்த தாவீது இராஜா தேவன் அவருடைய வாழ்வில் செய்த நன்மைகள், கொடுத்த வாக்குத்தத்தம் மற்றும் செய்த உடன்படிக்கையை நினைத்து தேவ சமூகத்தில் அமர்ந்து ஆண்டவரை நோக்கி கேட்ட கேள்வி தேவனாகிய கர்த்தாவே, தேவரீர் என்னை இதுவரைக்கும் கொண்டுவந்ததற்கு **“நான் எம்மாத்திரம்?” என் வீடும் எம்மாத்திரம்?** – 1 நாளாகமம் 17:16 அவரின் சங்கீதங்களிலும் அண்ட சராசரங்களையும் தேவன் படைத்த படைப்பில் சிறு புள்ளி போன்று தன்னை **நான் எம்மாத்திரம்** (சங்.8) நாமும் நம்மை சுற்றி நடக்கிற சூழ்நிலைகளை பார்க்கும்போது, இப்புதிய ஆண்டினைக் காண தேவன் நமக்கும் நம் குடும்பத்தாருக்கும் உதவியிருக்கிறார் என்று எண்ணும்போது, தாவீதைப் போல **நான் எம்மாத்திரம்** என் குடும்பம் எம்மாத்திரம் என்று கேட்கத் தோன்றுகிறது அல்லவா? இயேசு கிறிஸ்துவின் சிந்தையில் இவ்வுலகத் தோற்றத்திற்கு முன்னமும், சிலுவையில் பலியாகும் போதும் நாம் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் அவர் சிந்தையில் இருந்தோம் என்பதை நினைக்கும் போது **நான் எம்மாத்திரம்** என்று கேட்க தோன்றுகிறது அல்லவா? வாழ்நாள்லெல்லாம் ஓடி ஓடி 2024-ம் ஆண்டுக்குள்ளயே வந்து நிற்கும் நாம் சற்று நிதானித்து நின்று திரும்பி பார்த்து தாவீதைப் போல கேட்க வேண்டிய கேள்வி என்னை இதுவரைக்கும் கொண்டு வந்தீரே “நான் எம்மாத்திரம்” என்பதே. பல நிந்தனைகள், போராட்டத்தின் மத்தியில் புதிதாக கட்டிய அரண்மனையில் அரியனையின் மீது அமர்ந்திருந்த தாவீதால் இந்த கேள்வியை கேட்காமல் இருக்க முடியவில்லை. அதையே நம் இயக்கத்தின் ஓட்டத்திலும் காண முடிகிறது நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் மூத்த அண்ணன்மார்ளைக் கொண்டு அற்பமாக ஆரம்பிக்கப்பட்ட இவ்வியக்கத்தில் தேவன் நடத்திவந்ததை திரும்பிப் பார்க்கும்போது பணித்தளத்திலிருந்தும் முன்னேற்றப்பணி தளங்களிலிருந்தும் தலைமைச் செயலகத்திலிருந்தும் அவர் செய்த, நடத்தின காரியங்களைப் பார்க்கும்போது எங்களைக் கொண்டு நடப்பித்தற்கு **நாங்கள் எம்மாத்திரம்** என்றுதான் கூற முடியுமே தவிர இது என்னால் முடிந்தது என்று ஒருவராலும் சொல்ல முடியாது. நம் இயக்கத்தின் பழைய பாடல் வரிகள் “நடத்தியவர் தேவன் நடந்ததென் உள்ளத்திலே (தனிப்பட்ட / இயக்கத்தில்) நம்பவும் முடியவில்லை அனுபவம் புதுமையதால்.” இந்த எல்லா ஆசீர்வாதத்திற்கும் நாம் பாத்திரவான்கள் இல்லை என்பதை நாம் ஆணித்தரமாக உணர்ந்து நாம் செய்ய வேண்டியது “சிந்தை தனில் தூய்மை செயலாற்ற லட்சியம் என்ற குறிக்கோளுடன் இந்த 2024-ம் ஆண்டிற்குள் நாம் தாழ்மையோடு நம் குடும்பமாகவும், இயக்கமாகவும் அடியெடுத்து வைப்போமானால் இவ்வாண்டின் இறுதியிலும் நாம் திரும்பி பார்த்து, இத்தனை மகத்தான காரியங்களை எங்கள் மூலம் நடத்தி முடித்தற்கு **நாங்கள் எம்மாத்திரம்** என்ற இதே கேள்வியை நாம் மறுபடியும் கேட்போம் என்ற விசுவாசத்தோடு தைரியமாய் 2024-க்குள் நாம் பிரவேசிப்போம்.

**இனிய புத்தாண்டு 2024 வாழ்த்துக்கள்!**

**– மெர்சி செல்வின்** *(தகவல் தொடர்புத்துறை)*

**உமது விரல்களின் கிரியையாகிய உம்முடைய வானங்களையும், நீர் ஸ்தாபித்த சந்திரனையும் நட்சத்திரங்களையும் நான் பார்க்கும்போது,**

**மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷ குமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன்.**

– சங்கீதம் 8:3,4

**“கிறிஸ்தவர்களுக்கு, மனத்தாழ்மை முற்றிலும் இன்றியமையாதது. அது இல்லாமல் சுய அறிவு, மனந்திரும்புதல், நம்பிக்கை மற்றும் இரட்சிப்பு எதுவும் இருக்க முடியாது.”**

– AW டோஸர்

**இப்படி மனப்பூர்வமாய்க் கொடுக்கும் திராணி உண்டாவதற்கு நான் எம்மாத்திரம்? என் ஜனங்கள் எம்மாத்திரம்? எல்லாம் உம்மால் உண்டானது; உமது கரத்திலே வாங்கி உமக்குக் கொடுத்தோம்.**

– 1 நாளாகமம் 29:14

**மனிதன் தன்னை தேவனின் மகத்துவத்துடன் ஒப்பிடும் வரை அவனது தாழ்வு நிலைப் பற்றிய விழிப்புணர்வால் போதுமான அளவு தொடப்படுவதில்லை.**

– ஜான் கால்வின்

## நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

**நமது தரிசனம்:**

சந்திக்கப்படாத இந்தியர்களை இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தால் சந்திப்பது.

**நமது ஊழியம்:**

தேசமக்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கூறவும், சமுதாயத்தை மறுரூபப்படுத்த உதவி செய்யவும் இந்தியத் திருச்சபைகளை அதிக அளவில் ஈடுபட வைப்பதற்கான நோக்கத்தைப் பகிர்ந்துகொள்வது.

இந்தியத் திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தனது சேவைப்பணியை நாடெங்கும் தொடர்கிறது. சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் ஆகிய இவர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச்சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள். இதில் நீங்கள் இணைவதோடு பிறரும் இணைய அறிமுகம் செய்யுங்கள்.

**feedbackfmpb@fmpb.org**
உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம்.

**அறைகூவல்**

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்**

**மாதம் ஒருமுறை மலரும் சத்தியப் பூ**

ஆசிரியர்: S. ஜாண் பெர்லின்

| | |
|---|---|
| தனிப்பிரதி ரூ.10/- | வெளிநாடு |
| ஆண்டு சந்தா ரூ.48/- | ஆண்டு சந்தா ரூ.480/- |
| ஆயுள் சந்தா ரூ.500/- | ஆயுள் சந்தா ரூ.5000/- |

*தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு*

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**

29, உயர்நிலைப்பள்ளி சாலை, அம்பத்தூர்,
சென்னை - 53. தொலைபேசி: 044-26570404
பேக்ஸ்: 044-26573353 கைபேசி: 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*

# பொதுச்செயலாளரிடமிருந்து...




சந்திக்கப்படாதவர்களை சந்திக்கும் இயக்கத்தின் பங்காளர்களே!

கிறிஸ்துவை மையமாகக் கொண்டு ஆசீர்வதிக்கப்பட்ட புத்தாண்டு அமைய ஜெபவீரர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் வாழ்த்துக்கள்.

2 சாமுவேல் 7:18 "கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் என்னை இது வரைக்கும் கொண்டுவந்ததற்கு, **நான் எம்மாத்திரம்? என் வீடும் எம்மாத்திரம்?"**- ஐ ஆதாரமாகக் கொண்டு **நான் எம்மாத்திரம்** என்பதனை இந்த புதிய ஆண்டின் கருப்பொருளாக தேவன் தந்திருக்கிறார். இதனுடன் சேர்த்து 1 நாளா.17:16-ல் தாவீது இதே காரியங்களைக் கூறுவதையும் இணைத்திருக்கிறோம். கர்த்தரின் ஆலயத்தைக் கட்டுவதற்கு திரளான செல்வங்களைக் காணிக்கையாக தாவீது கொடுத்த பிறகும் மற்றும் அவருடைய குடும்பத்தின் வளமான எதிர்காலத்தைப் பற்றி தீர்க்கதரிசி நாத்தான் மூலமாக கர்த்தர் தாவீதுக்குக் கூறின பிறகும், இதை ஒரு தாழ்மை யான அறிக்கையாக தாவீது சொல்கிறார். நம்முடைய தகுதியின்மையினையும் கர்த்தரின் தயவு மற்றும் இரக்கத்தையும் புரிந்துகொள்ள இப்புத்தாண்டில் கர்த்தர் நமக்கு அறிவுறுத்துகிறார். "நாம் நிர்மூல மாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை" என்று புலம்பல் 3:22 கூறுகிறது. இந்த புத்தாண்டில் நாம் சந்திக்கயிருக்கிற சவால்களை மேற்கொள்ளும் விதமாக அவருடைய மாறாத அன்பையும் கிருபையையும் நாம் அனைவரும் நினைவுகூரக்கடவோம்.

### மணிப்பூர் விஜயம்:

மணிப்பூரின் சமாதானத்திற்காக எப்போதும் ஜெபித்துக்கொண்டிருக்கிறோம். கடந்த நவம்பர் 19 மற்றும் 20-ம் தேதி களில் மணிப்பூரைச் சென்று பார்க்க தேவன் கிருபை செய்தார். அங்குள்ள சபை மூப்பர்களையும், முகாமிலுள்ள பாதிக்கப்பட்ட விசுவாசிகளையும் கண்டு பேச தேவன் உதவினார்.

### ஜெமி பாப்திஸ்து கூட்டமைப்புடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்:

நம் இயக்கத்தின் சார்பாக நாகலாந்து மாநிலத்தின் தலைநகர் திம்மாபூரில் நவம்பர் 21-ம் தேதி ஜெமி பாப்திஸ்து கூட்டமைப்பினுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட்டேன். ஊழியங் களில் நெருக்கமான உறவுடன் இணைந்து பணியாற்ற இந்த ஒப்பந்தம் பலனளிக்கும்.

### 216-வது செயற்குழு கூட்டம்:

கேரளா மாநிலம் ஆலப்புழா நகரில் நவம்பர் 25 மற்றும் 26 ஆகிய தேதிகளில் இயக்கத்தின் செயற்குழு கூட்டம் தேவனுக்கு மகிமையாக நடைபெற்றது. அநேகமாக அனைத்து செயற்குழு உறுப்பினர்களும் கலந்துகொண்ட இந்த உயர்மட்ட கூட்டதில் ஊழிய வளர்ச்சிக்கு அநேக தீர்மானங்கள் எடுக்க தேவன் கிருபை செய்தார்.

### வடகிழக்கு மண்டல ஊழியர்கள் கூடுகை:

ஜார்க்கண்ட் மாநிலத்தின் சோட்டாகக்ரி கிராமத்தில் நவம்பர் 30-ம் தேதி நடை பெற்ற வடகிழக்கு மண்டல ஊழியர்கள்

கூடுகையில் நான் பங்கு பெற்றேன். சுவிசேஷத்தை தேசத்தின் எல்லையெங்கும் எடுத்துச் செல்லும் தரிசனத்தில் பல்வேறு இடங்களிலிருந்து வந்திருந்த ஊழியர்கள் இணைந்த கைகளாக பணியாற்றி வருவதற்காக நன்றி சொல்கிறேன்.

### சந்தால் பிராந்திய சபை நிர்வாக கூட்டம்:

சந்தால் சாஹிப்கன்ஜ் பிராந்திய சபை ஆலோசனைக் கூட்டத்தில் தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்துகொள்ள தேவன் உதவி செய்தார். அனைத்து சந்தால் இனத்தாரையும் தேவப்பிள்ளைகளாக்கும் தரிசனத்தை சந்தாலின் திருச்சபை களுக்கும் விசுவாசிகளுக்கும் கொண்டுச் செல்ல கூட்டத்தில் பங்குபெற்றோர் தீர்மானித்தனர். இந்த தீர்மானம் அனைத்து விசுவாசிகளையும் உத்வேகம் அடையச்செய்ய ஜெபித்துக்கொள்ளுங்கள்.

### வெளிப்புற நற்செய்தி பயிற்சி மையத்தின் நிர்வாக கூட்டம்:

டிசம்பர் 1-ம் தேதி கைராபானியிலுள்ள வெளிப்புற நற்செய்தி பயிற்சி மையத்தின் நிர்வாக கூட்டம் நடந்தது. NELC-யின் முன்னாள் பிரதம பேராயர் மற்றும் தும்கா பேராயத்தின் பேராயர் அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

### வேற்று கலாச்சார தொடர்பு பயிற்சி:

கிழக்கு மற்றும் வடகிழக்கு மண்டல மிஷனரிகளுக்காக டிசம்பர் 1-ம் தேதி முதல் 5 வரை வேற்று கலாச்சார தொடர்பு பயிற்சி கொடுக்கப்பட்டது. 56 மிஷனரிகள் பங்குபெற்ற இந்த பயிற்சியில் நமது மூத்த மிஷனரிகள் பயிற்சி கொடுத்தனர்.

### செவிலியர் தங்குமிடம் பிரதிஷ்டை:

ஜார்க்கண்ட் மாநிலத்தில் சண்டிகோலா பகுதியில் அமைந்துள்ள சிநேகாலயா சுகாதார மையத்தின் புதிதாக கட்டப்பட்ட செவிலியர் தங்குமிடம் டிசம்பர் 4-ம் தேதி தேவநாம மகிமைக்கென பிரதிஷ்டை செய்யப்பட்டது. இப்பகுதியில் இந்த மக்களின் மீட்பிற்காக ஊழியம் செய்து தன் இன்னுயிரை ஈந்த திருமதி. அனிதா லிம்மாவின் நினைவாக இந்த புதிய கட்டிடத்திற்கு அனிதா விடுதி என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த கட்டிடம் கட்ட ஜெபித்து கொடுத்த ஈகையாளர்களுக்கும், இந்த பின்தங்கிய மாவட்டங்களில் உள்ள தேவையுள்ள மக்களுக்கு சேவை புரியும் மருத்துவர்கள் மற்றும் பிற ஊழியர்களுக்கு நன்றி கூற கடமைபட்டுள்ளோம்.

### காக்கிநாடா & விசாகப்பட்டினம் கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகள்:

காக்கிநாடா மற்றும் விசாகப்பட்டினத்தி லுள்ள நம் இயக்கத்தின் ஆதரவாளர்கள் மற்றும் ஜெபவீரர்கள் ஒன்றிணைந்த கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் தென் இந்திய முன்னேற்றப்பணி மிஷனரிகள் மற்றும் கௌரவ பணியாளர்கள் மூலமாக டிசம்பர் 9 மற்றும் 11-ம் தேதிகளில் நடத்தப் பட்டது. 2 இடங்களிலேயும் திரளான எண்ணிக்கையில் திரண்ட நமது ஆதர வாளர்கள் இதனை ஒரு குடும்ப நிகழ்ச்சியினை போல உணர்ந்தனர்.

### கல்வாரி பாப்திஸ்து திருச்சபையின் பிளாட்டினம் கொண்டாட்டம்:

டிசம்பர் 10-ம் தேதி விசாகப்பட்டின திலுள்ள கல்வாரி பாப்திஸ்து திருச்சபை தனது 75-வது ஆண்டு பிளாட்டினம் கொண்டாட்டத்தினை சிறப்பாக கொண்டாடியது. இந்த திருச்சபையின் மூலமாக பல்வேறு இயக்கங்களைச் சேர்ந்த 75 மிஷனரிகள் தாங்கப்படு கின்றனர். அதிலே நமது இயக்கத்தின் 21 மிஷனரிகள் ஆதரிக்கப்படுகின்றனர் என்பது குறிப்பிடதக்கது. அநேக திருச் சபை மற்றும் நற்செய்தி இயக்கங்களின் தலைவர்கள் கலந்துகொண்டு சிறப் பித்தனர். இந்திய தேசத்திற்கு நற்செய்தியை

எடுத்துச் செல்லும் சீரிய தரிசனத்தை இந்த திருச்சபை கொண்டுள்ளது சிறப்பானது.

### கீழ்க்கண்ட ஜனவரி 2024 நிகழ்ச்சிகளுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

**பஞ்சாப் விஜயம்:** ஜனவரி 1 முதல் 7 வரை பஞ்சாப் மிஷனரிகளை சந்தித்தல் CCC பயிற்சி கூடுகை ஃபரித்கோட் – பஞ்சாப் ஜனவரி 8 முதல் 12 வரை வடமேற்கு பகுதியிலுள்ள மிஷனரிகளுக்கு பயிற்சி நடத்தப்படும்.

**BAF நிர்வாக கூட்டம்:** சேலம் டேனிஷ்பேட்டையிலுள்ள பெத்தேல் விவசாயக் கூட்டமைப்பின் நிர்வாக கூட்டம் ஜனவரி 18-ம் தேதி நடக்கவிருக்கிறது.

**இயக்கத்தின் நிர்வாக குழு கூட்டம்:** ஜனவரி 20 மற்றும் 21 தேதி நமது இயக்கத்தின் நிர்வாக குழு கூட்டம் சென்னையில் நடக்கவிருக்கிறது.

**முன்னேற்ற பணித்தளங்களுக்கு விஜயம்:** கர்த்தருக்கு சித்தமானால் ஜனவரி 24 மற்றும் 25-ம் தேதி தமிழகத்தின் தென்பகுதியிலுள்ள முன்னேற்ற பணியிடங்களுக்குச் செல்ல வாஞ்சையாயிருக்கிறேன்.

**பெங்களூரு தொழில்முனைவோர் கூட்டமைப்பின் கூடுகை:** ஜார்க்கண்ட் மாநிலத்திலுள்ள ராஜ்மஹால் கிறிஸ்தவ ஆரம்பப்பள்ளிகளை ஆதரிக்கும் பெங்களூரு தொழில்முனைவோர் கூட்டமைப்பின் பிரதிநிதிகளைச் சந்தித்து இந்தத் திட்டத்தில் அவர்களது எதிர்கால பங்கு பற்றி ஆலோசிக்க ஆயத்தப் படுகிறேன்.

**சேலம் முன்னேற்றப்பணித்தள விஜயம்:** பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க ஜனவரி 27 மற்றும் 28-ம் தேதி நான் சேலம் முன்னேற்றப்பணி பகுதி களுக்குச் செல்கிறேன். இந்த மேற்கண்ட நிகழ்ச்சிகளில் கர்த்தர் எனக்கு பிரயாண கிருபையைக் கட்டளையிடவும் அவருடைய நோக்கத்தை நிறைவேற்றவும் இயக்கத்தின் ஊழிய வளர்ச்சிக்காகப் பயன்படுத்தப்படவும் ஜெபித்துக்கொள்ளுங்கள்.

### நியமனங்கள்:
### கீழ்க்கண்ட புதிய நியமனங்களுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்.

**மறைதிரு. முனைவர். ஜாண் ஜெசையா ஹாரீஸ்** தலைமைச் செயலகத்தின் செயலராகவும்

**மறைதிரு. ராபின்சன் ஹன்ஸ்தக்** வட இந்திய முன்னேற்றப்பணி செயலராகவும்

**மறைதிரு. வி.பி. ஜெபராஜ்** மனிதவள மேம்பாட்டு துறை செயலராகவும்

**திரு. எட்வர்ட் சாம்** சிறுவர் ஊழியத்தின் செயலராகவும்

**மறைதிரு. திம்மேஷ்** தென்மண்டல பணித்தள செயராகவும்

**திரு. கண்ணுசாமி தாமஸ்** சொத்து மற்றும் கட்டுமான செயலராகவும்

பொறுப்பேற்று உள்ளார்கள். தங்களுக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்பினை முழு விவேகத்துடனும் தியாகத்துடனும் நிறை வேற்ற இவர்களுக்காகவும் இவர்கள் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்

கடந்த 2023-ம் ஆண்டு முழுவதும் தாங்கள் அருளிய ஆதரவுகளுக்காக நன்றிக் கூற கடமைப்பட்டுள்ளேன். தேவன் தந்தருளிய இந்தத் தரிசன ஊழியத்தை முன்னோக்கி கொண்டுச்செல்ல உங்களது ஜெபம் மிகவும் உதவியாக இருக்கும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

தேவஊழியத்தில் தங்கள் சகஊழியன்,



**அருட்திரு. S. ஜாண் பெர்லின்**




## முன்னுரை:

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு குடும்பத்தின் அங்கத்தினர்கள் அனைவருக்கும் ஆசீர்வாதமான புத்தாண்டு அமைய வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சி கொள்கிறேன். கடந்த வருடம் முழுவதும் கர்த்தரின் உண்மைத்துவம் மற்றும் பாதுகாப்பு நம்முடன் இருந்தது. ஒரு அன்பான தகப்பனைப் போல் கர்த்தர் நம்மை கண்ணின் மணிபோல பாதுகாத்து நம்முடைய எல்லா தேவைகளையும் அருளிச்செய்தார். தேவைகளை நிறை வேற்றுகின்ற யெகோவாயீரே இந்த புது வருடத்திலும் நம்முடன் இருந்து ஆசீர்வதித்து வழிநடத்தி அவருடனான இனிய உறவிலே மேம்படச் செய்வார்.

## பின்னணியம்:

கர்த்தர், தாவீதை அவனுடைய எதிரிகளின் கைகளுக்குத் தப்புவித்து தேசத்தில் சமாதானம் அருளி அவனுடைய அரண் மனையில் குடியேறச் செய்த பிறகு, தாவீதின் மனதிலே கர்த்தரின் உடன்படிக்கைப் பெட்டி கூடாரத்திலே இருக்கும் வேளையில் தான் அரண்மனையிலே வாசம் செய்வது பொருத்தமானது அல்ல என்று தோன்றிற்று. (2சாமு.7:1) தீர்க்கதரிசி நாத்தான் கர்த்தர் தாவீதோடு இருக்கிறார் என்றும் அவர் இருதயத்தில் உள்ளபடி செய்யு மாறும் சொல்லி உற்சாகப்படுத்தினார். ஆனால் அன்றிரவு கர்த்தர் நாத்தா னுக்குக் கீழ்க்கண்ட காரியங்களை வெளிப் படுத்தினார் (2சாமுவேல் 7:5-16).

1. ஆலயத்தைக் கட்டுமாறு இஸ்ரவேலை அரசாண்ட யாருக்கும் கர்த்தர் சொல்லவே இல்லை
2. கர்த்தர் தாமே தாவீதை அரசராக்கி அநேக வெற்றிகளை அவருக்கு தந்தார்.
3. கர்த்தர் தாமே தாவீதின் பெயரை மேன்மைப்படுத்துவார்.
4. கர்த்தர் தாமே இஸ்ரவேலை நிலையான இடத்தில் நாட்டுவார்.
5. கர்த்தர் தாமே தாவீதுக்கு ஒரு வீட்டை ஏற்படுத்துவார்.
6. தாவீதின் வம்சத்தார் கர்த்தரின் ஆலயத்தை கட்டுவார்கள்.
7. தாவீதின் சிங்காசனம் என்றென்றைக்கும் நிலைநிறுத்தப்படும்.

## 2 சாமுவேல் 7:18-ன் விளக்கவுரை

அப்பொழுது தாவீது ராஜா உட்பிரவேசித்து, கர்த்தருடைய சமுகத்திலிருந்து; கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் என்னை இதுவரைக்கும் கொண்டுவந்ததற்கு, **நான் எம்மாத்திரம்? என் வீடும் எம்மாத்திரம்?**

கர்த்தர் நாத்தான் தீர்க்கதரிசி மூலமாக தாவீதுக்கு உரைத்ததற்குப் பதிலாக தாவீது, ஆண்டவரே **நான் எம்மாத்திரம்?** என்ற பதத்தை உபயோகப்படுத்துகிறார். இப்பதம் தாவீது ராஜாவாக ஆளுகையில் இருந்தாலும் ஒருகாலத்தில் மேய்ப்பனாக

இருந்ததை மறக்காத காரணத்தினால் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவதற்கு எந்த தகுதியும் தனக்கு இல்லை என்ற தாவீதின் எண்ண ஓட்டத்தை வெளிப்படுத்துகிறது. தாவீது தன்னுடைய அற்பமான ஆரம்பத்தையும், அரச குடும்பத்தில் பிறக்காவிடினும் எவ்விதமாய் கர்த்தர் அவரை ராஜாவாக ஏற்படுத்தினார் என்பதையும் நினைத்து, **என் வீடும் எம்மாத்திரம்?** என்கிறார்.

தேவரீர் என்னை இதுவரைக்கும் கொண்டு வந்ததற்கு, **நான் எம்மாத்திரம்?** என்பது தகுதியின்மையின் போது கர்த்தரின் மகத்துவத்தை, கிருபையை மற்றும் இரக்கத்தை அவருடைய வாழ்க்கையில் தாழ்மையுடன் ஏற்றுக்கொண்டதை வெளிப்படுத்துவதேயாகும்.

## நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் “நான் எம்மாத்திரம்” என்பதின் பிரயோகம்.

ஒன்றுமில்லாததிலிருந்து தாவீதை கர்த்தர் ஆசீர்வதித்ததுபோல, கர்த்தரின் பணியினை செய்து அவரின் விருப்பத்தினை நிறைவேற்ற நம் இயக்கத்தையும் தாழ்மையான ஆரம்பத்திலிருந்து மிகப் பெரிய இயக்கமாக ஆசீர்வதித்து இருக்கின்றார். FMPB-யின் இன்றைய நிலையும் தேவ நாம மகிமைக்கென நாம் என்ன செய்து இருக்கிறோம் என்பதும் கர்த்தரின் சுத்தமான கிருபை மற்றும் இரக்கமுமேயாகும். கற்பனைக்கெட்டா, கணக்கிலடங்கா கிருபைகளைப் பரலோக தகப்பனிடமிருந்து பெற நம்மில் யாவரும் தகுதியுடையவர் அல்லர். சர்வ வல்லவருக்கு முன்பாக மிகுந்த தாழ்மையுடன் பணிந்து குனிந்து தேவரீர் எங்களை ஆசீர்வதிப்பதற்கும் உம்முடைய ராஜ்யப்பணியில் உபயோகப் படுத்துவதற்கும் **நாங்கள் எம்மாத்திரம்?** என்று அறிக்கையிடுகிறோம்.

## கர்த்தர் ஆசீர்வதித்த விதம்

| 55 வருடங்களுக்கு முன்பு | இன்றைய ஆசீர்வாதம் |
|---|---|
| 1 பணித்தளம் | 347 பணித்தளங்கள் |
| 2 மிஷனரிகள் | 1000 மிஷனரிகள் |
| சுதேச ஊழியர்கள் இல்லை | 1300 சுதேச ஊழியர்கள் |
| 1 மக்கள் கூட்டம் | 264 மக்கள் கூட்டங்கள் |

இவைகளோடு சேர்த்து தேசத்தை சந்திக்கும்தரிசனத்துடன் கூடிய ஆயிரக் கணக்கான ஜெப வீரர்கள், ஆதரவாளர்கள், ஜெபக்குழுத்தலைவர்களை தேவன் தந்தருளி இருக்கின்றார்.

## கர்த்தரின் கிருபைக்கு நம்முடைய பதில்

தாவீதின் வருங்கால சந்ததியினர் பற்றி நாத்தான் மூலமாக தேவனால் சொல்லப்பட்டபோது, தாவீது மிகுந்த மனத்தாழ்மையுடனும், எண்ணிடலங்கா நன்றிகளுடனும் பதிலுரைக்கிறார். கர்த்தர் அவருடைய கிருபையிலும், தயவிலும் நமது இயக்கத்திற்கும், நம்முடைய தனிப்பட்ட வாழ்விலும் நிறைவேற்றின காரியங்களுக்காக நாம் சரியாக கீழ்கண்டவாறு பதில் செய்ய தாவீதின் செய்கை நமக்கு முன்மாதிரியாகத் திகழ்கிறது.

### 1. மனத்தாழ்மை

நம்மை தாழ்த்தி அனைத்து மகிமையையும் தேவனுக்கு கொடுப்பதே நமது முதன்மையான பதிலாக இருக்கிறது. அனைத்துக்கும் எஜமானனாக இருந்தும், அவருடைய நோக்கத்தை நிறைவேற்றி அவருக்கு மகிமையுண்டாக நம் மூலமாகவே இயக் கத்திலே காரியங்களைச் செய்கிறார்.

ஆலயம் கட்டுகின்ற காரியத்திலே **நான் எம்மாத்திரம்** என்று சொன்ன ராஜா தாவீது மீண்டும் 1 நாளா.29:14-ல் இவ்வாறாக சொல்கிறார். இப்படி மனப்பூர்வமாய்க் கொடுக்கும் திராணி உண்டாவதற்கு **நான் எம்மாத்திரம்? என் ஜனங்கள் எம்மாத்திரம்?** எல்லாம் உம்மால் உண்டானது; உமது கரத்திலேவாங்கி உமக்குக் கொடுத்தோம். மனப்பூர்வமாய்க் கொடுக்கும் திராணி உண்டாவதற்கு **நானும் என் மக்களும் எம்மாத்திரம்** என்று சொல்லி இஸ்ரவேலின் மக்களையும் சேர்த்துக்கொள்கிறார். கர்த்தரின் ஆலயத்தைக் கட்டும் பணிக்கு உதாரத்துவமாகக் கொடுக்கின்ற காரியத்தில் அரசவையின்அதிகாரிகள் மற்றும் சாமானிய குடிமக்கள் மத்தியில் காணப்பட்ட எழுச்சியின் சமயத்தில் தாவீது இவ்வாறாக அறிக்கையிடுகிறார்.

தங்கம், வெள்ளி, வெண்கலம், இரும்பு மற்றும் விலைமதிப்பற்ற கற்கள் ஆகியவை களை தாவீது உதாரத்துவமாய் கொடுத்தார். 1 நாளா.29:4-ன்படி தாவீது அவனுடைய தனிப் பண்டகசாலையிலிருந்து கொடுத்த 110 டன் தங்கம், 260 டன் வெள்ளி பொருட்களின் காணிக்கை திகைக்க வைக்கிறது தாவீதின் தியாகமான இந்தக் காணிக்கையினை கண்ணுற்ற அவனுடைய அலுவலர்கள் 190 மற்றும் 84 கிலோ தங்கம், 380 டன் வெள்ளி, 675 டன் வெண்கலம், ஏறத்தாழ 3800 டன் இரும்பு ஆகியவற்றை கொடுத்தனர். தலைவர்களின் மனப்பூர்வமான இந்த காணிக்கைகளைப் பார்த்து மக்கள் ஆனந்தித்தனர் என்று 1 நாளா.29:9-ல் சொல்கிறது. ராஜாவும் அவனுடைய அலுவலர்களும் சமர்ப்பித்த சமர்ப்பித்த காணிக்கைகள் கற்பனைக் கெட்டா விதத்தில் நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்தினாலும், நானும் என் மக்களும் உமக்கு கொடுப்பதற்கு எம்மாத்திரம் என்பதே தாவீதின் எண்ணமாக இருந்தது. கொடுக்கப்படுகிற சிறிய பங்கு பெரிய அளவில் காண்பிக்கப்படும் இக்காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் தாவீது தேவனுக்கு கொடுக்க முடிந்ததைக் குறித்து ஆனந்தித்தார் என்பதனை நினைவு கூறவேண்டும். நம்முடைய தகுதியின்மை யிலும் நாம் தேவனிடத்திலிருந்து பெற்றதை அவருக்கு கொடுப்பதில் தாழ்மையுடன் இருக்க வேண்டும்.

## 2. விசுவாசம்

கர்த்தரின் கிருபைக்கு நம்முடைய விசுவாசமே பதிலாக இருக்கிறது. கர்த்தர் எல்லாச் சூழ்நிலைகளிலும் நம்பப்படுகிறவரும், எந்தச் சூழ்நிலையும் அவரை மேற்கொள்ள இயலாது என்பதனையும் நம்மிடையே தேவன் செய்த பெரிய காரியங்கள் உறுதி செய்கிறது. எல்லாச் சூழ்நிலைகளிலும் நாம் தேவனை நம்ப முடியும். சகரியா 4:6 செருபாபேலுக்குச் சொல்லப்படுகிற கர்த்தருடைய வார்த்தை என்னவென்றால் பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்கிறார். சிறியதோ பெரியதோ தேவ ஆவியானவரின் ஒத்தாசையின்றி செய்ய இயலாது. எளிமை யான வார்த்தைகளில் சொல்ல வேண்டு மானால், எல்லா காரியங்களும் அவராலே மட்டுமே கூடும் என்பதே. 7-வது வசனத்தில் கர்த்தரின் தூதன் **பெரிய பர்வதமே நீ எம்மாத்திரம்?** என்று சவால் விடுவதைப் பார்க்கிறோம். நாம் எதிர்கொள்கிற சவால்கள், அதிகாரமிக்க இடங்களிலிருந்து வருகிற சிறிய, பெரிய பிரச்சினைகளாக இருக்கலாம். ஆனாலும் விசுவாசத்தில் நாம் பதிலுரைக்க முடியும் பெரிய பர்வதமே **நீ எம்மாத்திரம்?**

சகரியா4:6,7 செருபாபேலுக்குச் சொல்லப் படுகிற கர்த்தருடைய வார்த்தை என்ன வென்றால், பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்கிறார். பெரிய பர்வதமே, நீ எம்மாத்திரம்? செருபாபேலுக்கு முன்பாக நீ சமபூமியாவாய்.

## 3. ஒப்புவித்தல்

முழுவதுமாக எவ்வித நிபந்தனையுமின்றி நம்மிடம் இருப்பவைகளோடு அவரின் உபயோகத்திற்கு நம்மை ஒப்படைப்பதே அவருடைய கிருபைக்கு நாம் செய்கிற மூன்றாவது பதில். யோவான் 6:9 இங்கே ஒரு பையன் இருக்கிறான் அவன் கையில் 5 வாற்கோதுமை அப்பங்களும் 2 மீன்களும் உண்டு, அவைகள் இத்தனை ஜனங்களுக்கு **எம்மாத்திரம்** என்றார். கற்பனையை தட்டிவிட்டு பாருங்கள். 5000-க்கும் அதிகமான ஆண்கள் மட்டுமே உள்ள ஜனத்திரள், ஆனால் இருப்பதோ 5 அப்பங்களும் 2 மீன்களும் மாத்திரமே. இத்தனை ஜனங்களுக்கு எம்மாத்திரம் என்ற சந்தேகக் கேள்வி சீஷர்களின் மனதில் ஓடிக்கொண்டிருந்தது. எவ்வளவு இருக்கிறது என்பது கிறிஸ்துவுக்கு ஒரு காரியமே அல்ல, இருக்கின்றவைகளோடு ஒப்புவித்தல் தான் முக்கியமான ஒன்றாக கர்த்தருக்கு இருக்கிறது. நம்மிடம் இருப்பவைகளோடு நம்மை தேவனிடத்தில் ஒப்படைக்கும் வேளையில் சிறிய காரியங்களிலிருந்து பெரிய விளைவுகளை தேவன் செய்ய வல்லவராக இருக்கிறார். நம்மிடம் எவ்வளவு இருக்கிறது என்பதல்ல எவ்வளவு ஒப்படைக்கிறோம் என்பதே முதன்மையானது.

## 4. கர்த்தரின் செயல்களை ஏற்றுக்கொள்வது

கர்த்தர் செய்கிற மற்றும் அனுமதிக்கிற அனைத்தையும் அன்போடும், விசுவாசத்தோடும் ஏற்றுக்கொள்வதே கர்த்தரின் கிருபைக்கு மாறாக நாம் செய்கிற நான்காவது பதில். நாம் விரும்புகிற மாதிரி கர்த்தரின் வழிகள் இருக்கவேண்டிய அவசியமில்லை. சில சமயம் நம்முடைய வாழ்வில் தேவனின் இடைபடுதல் நம்மால் புரிந்துகொள்ள முடியாதவைகளாயும் அறிவுக்கு எட்டாதவைகளாயும் இருக்கின்றன. அப்.11:17 புறஜாதிகளுக்கு அருளப்படுகிற பரிசுத்த ஆவியின் வரத்தைப் பற்றி விவரிக்கிறது. பரிசுத்த ஆவி யூதர்களுக்கும் அப்போஸ்தலர்களுக்கும் மட்டுமே அருளப்படுகிற வரம் என்று நினைத்துக் கொண்டிருந்தார்கள். அனைவரையும் படைத்து சமமாக நடத்துகிற தேவன் பரிசுத்த ஆவியின் வரத்தை புறஜாதிகளுக்கும் அருளிச்செய்தார். இதனை புரிந்துகொண்ட பேதுரு, தேவனைத் தடுப்பதற்கு **நான் எம்மாத்திரம்?** என்றுக் கூறி அப்போஸ்தலர்களைப் புரியவைக்கிறார். தேவனையும் அவருடைய திட்டங்களையும் நாம் எதிர்க்க முடியாது. தேவனின் செயல்களுக்கு நம்முடைய வாழ்வை ஒப்படைப்பதே நாம் செய்கிற சிறந்த காரியமாக இருக்கும். இறந்த, நிகழ் மற்றும் எதிர் காலங்களை அவர் அறிந்திருக்கிறபடியினால் தேவனின் திட்டங்கள் மிகச் சரியானதாக இருக்கும்.

அப்.11:17 கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிற நமக்கு தேவன் வரத்தை அநுக்கிரகம் பண்ணினதுபோல் அவர்களுக்கும் இந்த வரத்தையே அநுக்கிரகம் பண்ணியிருக்கும் போது தேவனைத் தடுக்கிறதற்கு **நான் எம்மாத்திரம்?**

## 5. வேட்கை, ஆத்மீக தாகம்:

கிறிஸ்துவின் இதயத்தின் வேட்கையை பூர்த்தி செய்யும் வண்ணம் நம்முடைய இதயங்கள் ஆத்தும தாகத்தால் நிரப்பப்பட வேண்டும் என்பதே தேவகிருபைக்கு நாம் செய்கிற ஐந்தாவது பதில். கிறிஸ்து உலகெங்கும் சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க இறுதியாக கட்டளையிட்டார். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாக்கப்படுவான் என்று மாற்.16:16 கூறுகிறது. நாம் இரட்சிப்படையும் பொருட்டு தன்னுடைய ஒரே பேரான குமாரனை அனுப்பி உபத்திரவப்பட்டு சிலுவை மரணத்தை சந்தித்து இவ்வளவாய் அன்பு கூறுவதற்கு **நான் எம்மாத்திரம்** என்று நாம் புரிந்துகொள்ளும்போது அதே ஆத்தும தாகம் நம் இருதயங்களை நிரப்பி அதே தாகம் நம்முடைய முதன்மையான பணியாக மாற வேண்டும்.

மக்களின் நகைப்புக்கு இடமாகி அவர்களால் பரியாசம் பண்ணப்பட்டபோது இனி தேவனுடைய வார்த்தையை பிரசங்கிப்பதில்லை என்று எரேமியா தீர்மானம் பண்ணுகிறார். எரே.20:7 கர்த்தாவே, என்னை இணங்கப் பண்ணினீர், நான் இணங்கினேன்; நீர் என்னிலும் பலத்தவராயிருந்து என்னை மேற்கொண்டீர். நாள்தோறும் நகைப்புக்கு இடமானேன். எல்லாரும் என்னை பரிகாசம் பண்ணுகிறார்கள். ஆனால் 9-வது வசனத்திலே பேசாமலும் இருப்பேன் என்றேன். ஆனாலும் அவருடைய வார்த்தை என் எலும்புகளில் அடைபட்டு எரிகிற அக்கினியைப்போல் என் இருதயத்தில் இருந்தது. அதை சகித்து இளைத்துப்போனேன்; எனக்குப் பொறுக்கக் கூடாமற்போயிற்று.

அழிந்து கொண்டிருக்கிற ஆத்துமாக்களைக் குறித்து எந்தவிதமான பாரம் நம்மில் காணப்படுகிறது இந்த பாரத்தை செயல் படுத்துவதில் நம் பங்கு என்ன? சந்திக்கப் படாத மக்களை சுவிசேஷம் மூலம் சந்திக்கும் கர்த்தரின் இறுதி கட்டளைக்கு நாம் தருகிற முன்னுரிமை என்ன?

நமக்கு தகுதியில்லாவிடினும் தேவப் பிள்ளைகள் என்று அடையாளத்தை ஈந்திருக்கிறார். அதே வழியில் நமது இயக்கத்தையும் அவரின் நோக்கத்தினையும் நிறைவேற்ற மகிமையாக உபயோகப்படுத்தி வருகின்றார். இந்த அளவிடப்பட முடியாத அன்பிற்காக, கிருபைக்காக நாம் என்ன பதில் செலுத்துவோம்? தாழ்மையுடன் கூடிய விசுவாசத்தினாலும், அவருடைய செயல்களை நம்முடைய வாழ்வில் ஏற்றுக் கொண்டு, ஆத்தும பாரத்துடன் நம் வாழ்வை அவரிடம் ஒப்படைப்பதின் மூலம் நம் தனிப்பட்ட வாழ்விலும் இயக்கமாகவும் கர்த்தருடைய கிருபைக்குப் பதில் செய்ய முயற்சிக்க முடியும்.

ரோ.8:32 இவ்வாறாக எடுத்துரைக்கிறது, தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர் அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளா திருப்பதெப்படி? இந்த வாக்குத்தத்தத்தை உறுதியாகப் பற்றிக்கொண்டு நாம் 2024-ம் ஆண்டுக்குள்ளாகப் பிரவேசிப்போம். நாம் அனைவரும் நம்முடைய தகுதியின்மையில் அவரின் கிருபையையும் இரக்கத்தையும் எல்லா நேரங்களிலும் நினைவு கூறுவோம். கிறிஸ்துவை மையமாகக் கொண்ட புதுவருட வாழ்த்துக்கள்.

**- அருட்திரு. S. ஜாண் பெர்லின்**
FMPB - பொதுச் செயலாளர்



# மகிமைக்குள் பிரவேசித்தார்

கருங்கல் பணி மாவட்டத்தில் நீண்டகாலமாக, ஜெபக் குழுத்தலைவராகவும், ஆலோசகராகவுமிருந்து மிகவும் சிறப்பாக பணியாற்றிய திருவாளர் K. சிரில் ராஜ் அவர்கள் மானான்விளையைச் சேர்ந்தவர்கள் 14.11.23 அன்று தனது 81-வது வயதில் மகிமைக்குள் பிரவேசித்தார்கள். அவர் நல்லாசிரியாராகவும், மாவட்ட கல்வி அதிகாரியாகவும் சிறப்பாக பணியாற்றியவர். சமுதாயத்தில் நல்மதிப்பு உள்ளவராகவும் வாழ்ந்தார். அவர்கள் குடும்பத்தின் சார்பாக ஒரு மிஷனரிக்கு மற்றும் ஒரு குழந்தைக்கு ஆதரவு தொகையும் வழங்கி வந்தார்கள். அவர்கள் இழப்பு பணிமாவட்டத்திற்கும், குடும்பத்தினருக்கும் பேரிழப்பாகும். பிரிவால் ஆறாதுயரிலிருக்கும் அவரது மனைவி, இரு மகன்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுக்கு தேவன் ஆறுதலும், சமாதானமும் தந்து பெலப்படுத்த ஜெபிப்போம்.

# நிலத்திலே விழுந்த கோதுமை மணி!



## நமது மிஷனரி திருமதி. ஞானபுஷ்பம் சிகாமணி அவர்களின் மறைவு

(21.12.1946 - 13.11.2023)

திருமதி. ஞானபுஷ்பம் சிகாமணி அவர்கள், காலஞ்சென்ற நமது மிஷனரி திரு. ஞானசிகாமணி அவர்களின் மனைவி ஆவார். 1980-ம் ஆண்டு வரை தூத்துக்குடி மாவட்டம் தாரங்காதாரா கம்பெனியில் நல்ல பணிசெய்துகொண்டு, நமது இயக்கத்தின் திருச்செந்தூர் மாவட்ட ஜெபக்குழு பொறுப்பாளராக ஊழியம் செய்த இவரது கணவர் திரு. ஞானசிகாமணி அவர்கள், ஊழிய அழைப்பைப் பெற்று, தனது வேலையை ராஜினாமா செய்துவிட்டு நமது ஊழியத்தில் விரிவுப்பணி செய்ய இணைந்தபோது, திருமதி. ஞானபுஷ்பம், தனது கணவரின் அர்ப்பணிப்பை ஏற்றுக்கொண்டு, அவருக்கு ஊழியத்தில் பெரிதும் ஒத்துழைத்தார்கள். தனது 4 பிள்ளைகளையும் ஆவிக்குரிய விதத்தில் வளர்த்து, நமது ஊழியங்களைப் பெரிதும் ஜெபத்தினாலும், தியாகத்தினாலும் தாங்கினார்கள். அதோடு, இவர்களது இரு மகன்களான அருட்திரு. அறிவர். J.J. ஹாரிஸ் அவர்களையும், திரு. ஜாண்பால் ஹாரிஸ் அவர்களையும் ஊக்குவித்து நமது ஊழியத்திற்கென அனுப்பி வைத்தார்கள். இவர்களது ஆழ்ந்த அர்ப்பணிப்பும், நீடிய பொறுமையும், கடினமான சூழ்நிலைகளை கையாளக்கூடிய சகிப்புத்தன்மையும், இவரது கணவரையும், இரு மகன்களையும் நமது ஊழியத்தில் நிலைப்படுத்தியது. இவர்கள் தனது வாழ்வின் கடைசிகட்ட நாட்களை, மணிக்கணக்கில் வேதத்தைத் தியானம் செய்வதிலும், ஜெபிப்பதிலும் செலவிட்டு வந்தார்கள்.

பின்னர் இவரது இருதயம் பெலவீனப் பட்டதால், சிலவருடங்கள் இளைய மகளுடைய வீட்டிலும், சில மாதங்கள் மூத்த மகளுடைய வீட்டிலும், தனது இறுதி நாட்களை சென்னையிலுள்ள தனது மூத்த மகனுடைய வீட்டிலும் செலவிட்டு வந்தார்கள். இவரது இருதயம் மேலும் பெலவீனப்பட்டதால், நடந்த 2023 நவம்பர் 13-ம் தேதி மாலை 6 மணிக்கு தனது 77-வது வயதில் இறை அழைப்பைப் பெற்று இவ்வுலக ஓட்டத்தை இனிதே முடித்தார்கள். இவரது சரீரம் 2023 நவம்பர் 14-ம் தேதி கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அவரது சொந்த ஊராகிய குளத்துவிளையில், குடும்ப கல்லறை தோட்டத்தில் மாலை 3 மணிக்கு உயிர்த்தெழுதலின் நம்பிக்கையோடே அவரது கணவருடைய கல்லறைக்கு அருகில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அருமை தாயாரை இழந்து வாடும் குடும்பத்தின் பிள்ளைகளை நமது ஜெபங்களில் தாங்கிக்கொள்வோம்.

– அருட்திரு. அறிவர். J.J. ஹாரிஸ்



# பணித்தள விஜயம்

## ஈரோடு பணி மாவட்டம்

ஈரோடு மாவட்டத்திலிருந்து 28 பேர் கொண்ட குழுவாக அக்டோபர் 26-ம் தேதியன்று ஜம்மு ரயில் நிலையம் சென்றடைந்தோம். எங்களை நமது ஊழியர் அன்புடன் வரவேற்றார். 26-ம் தேதி மாலையில் ஊழியர்களோடு ஜெபிக்க தேவன் கிருபை செய்தார். 26 மாலை 6 மணிக்கு இந்தியா - பாகிஸ்தான் எல்லை பகுதியையும் அங்குள்ள ராணுவ வீரர்களையும் பார்வையிட தேவன் உதவிசெய்தார். அதைத் தொடர்ந்து எல்லைப்பகுதியான ஆர். எஸ். புரா பகுதியில் விசுவாசிகளோடு சேர்ந்து ஆராதிக்க தேவன் கிருபைசெய்தார். நாங்கள் எல்லைப் பகுதியைப் பார்த்துவிட்டு திரும்பின அரை மணி நேரத்தில் பாகிஸ்தான் ராணுவம் துப்பாக்கி சூடு நடத்தினர். அது ஜெபக்குழு அங்கத்தினர்களுக்கு மெய்சிலிர்க்கும் அனுபவமாக இருந்தது. 27 அன்று காலையில் நரோத் பணித்தளம் சென்று விசுவாசிகள் கூடுகையில் கலந்துகொள்ள தேவன் உதவிசெய்தார். குல்ஷன் என்ற சிறுவனுக்கு நடக்க முடியாமல் கண் பார்வையற்ற சூழ்நிலையில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து செய்த அற்புதத்தின் காரணமாக தேவன் அந்த மகனுக்கு பூரண சுகம் கொடுத்தார். அவர்கள் வீட்டில் வாரந்தோறும் கூடி ஆராதிக்கிறார்கள். 27 மாலை சாம்பா பணிதளத்தில் விசுவாசிகளோடு இரவு கூடுகையில் பங்குபெற தேவன் உதவிசெய்தார். 28 மற்றும் 29 ஆகிய தேதிகளில் காஷ்மீர் மற்றும் சோனாமார்க் போன்ற இடங்களில் தேவன் தந்த இயற்கை அழகைக்காண உதவிசெய்தார். தொடர்ந்து நவம்பர் 2-ம் தேதி காலை ஈரோடு வந்தடைந்தோம்.

இன்னும் ஜெபிப்போம், இன்னும் ஊக்கமாய் கொடுப்போம், திருச்சபைகளைக் கட்டுவோம் என்ற தீர்மானத்தோடு கடந்துவர தேவன் உதவிசெய்தார். எங்களை அன்போடு உபசரித்த அனைத்து ஜம்மு மிஷனரிகள், சுதேச ஊழியர்கள், விசுவாசிகள் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



# மகிமைக்குள் பிரவேசித்தார்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு விரிவுப்பணி ஊழியத்தில் விழுப்புரம் பணிமாவட்டத்தில் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக அதின் வளர்ச்சிக்கும், ஊழிய விரிவாக்கத்திற்கென தாராளமாக கொடுத்துவரும், தேசத்தின் மீட்பிற்கென்று பாரப்பட்ட ஜெபத்தோடு நின்றுவிடாமல், சிறப்பாக ஓர் ஜெப அறையைக் கட்டி அநேகரை அழைத்து ஜெபிக்க ஊக்கப்படுத்திய அன்பு அண்ணன் K. இம்மானுவேல் அவர்கள் கடந்த 03.09.23 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். மிஷனரிப்பணி ஊழியத்தில் ஸ்கேன் பணியில் அதிக உற்சாகத்துடன் ஈடுபட்டவர்கள். ஊழியரை தாங்கியும், பிற ஸ்கேன் அங்கத்தினர்களைக் கொடுக்கவும் ஊக்கப்படுத்திய வர்கள். தன் ஜெப அறையில் ஜெபங்கள் தொய்வின்றி நடைபெற வாஞ்சித்தவர்கள். நம் ஊழியகூடுகை நடைபெற எல்லா ஆதரவையும் கொடுத்தவர்கள். இவர்களின் பிரிவால் விழுப்புரம் FMPB ஆதரவாளர்கள், மற்றும் குடும்பத்தினர்களின் ஆறுதலுக்காக ஜெபித்துக்கொள்வோம்.

# நிலத்திலே விழுந்த கோதுமை மணி!



**அருட்திரு. நத்தானியேல் லோகராஜ்**
(1952 - 2023)

கிறிஸ்துவை அறியாத குடும்பத்தில் அருட்திரு. லோகராஜ் 1952-ம் ஆண்டு பிறந்து இந்து மத வைராக்கியத்துடன் பெற்றோரால் வளர்க்கப்பட்டார். சுகவீனத்தி னிமித்தம் சென்னை அரசாங்க மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருந்த தன் உறவினருக்காக ஜெபிக்க வரும் ஊழியர் ஒருவரின் அன்பையும் கரிசனையையும் கண்டு, இயேசுவைப் பற்றி அறிந்துகொள்ள ஆரம்பித்தார். சென்னை வேதாகம சங்கத்தி னுடன் தொடர்பு வைத்து இன்னும் அதிகமாக இயேசுவைப் பற்றியும் ஊழியத்தைப் பற்றியும், அறிந்துகொள்ள ஆரம்பித்தார். தெருக்களில் பாட்டு பாடி இயேசுவை அறிவிக்கும் ஊழியத்திலும் ஈடுபட்டிருந்த சில நண்பர்களுடன் சென்று தெருவில் தன்னுடைய சாட்சியைக் கூறி பிரசங்கம் செய்ய ஆரம்பித்தார். 1974-ம் ஆண்டு தன்னை கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்தவராக ஞானஸ்நானம் பெற்று, அருட்திரு. நத்தானியேல் லோகராஜ் தன்னார்வமாக ஊழியம் செய்ய ஆரம்பித்தார். 1975-ம் ஆண்டு நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் மிஷனரியாக இணைந்தார்.

இந்தி மொழி கற்க உத்தரப்பிரதேசத்தின் ஜான்சி நகருக்கு அனுப்பப்பட்டார். இந்தி மொழியின் ஆரம்ப கற்றல் முறையைக் கற்று தேர்ந்தவர். இயக்கத்தின் முதல் வட இந்திய மிஷனரியான அருட்திரு. ஹில்கியா அவர்களுடன் பணிச்செய்ய பஸ்தி பணித்தளத் திற்குச் சென்றார். உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான் என்று "எந்த இடம் எனக்குக் காட்டினும் இயேசுவே, அங்கே இதோ போகிறேன்" என்று பல இடங்களுக்குச் சென்று பணியாற்றியவர். 1981-ம் ஆண்டு செல்வி பேபி அவர்களை கரம்பிடித்து குஜராத் மாநிலத்தின் தென் பகுதியிலுள்ள குக்னா இனமக்கள் மத்தியில் பணிபுரிய வகைய் என்கிற ஊருக்கு குடும்பமாகச் சென்றார்.

அப்பொழுது குக்னா இனமக்கள் திரளாக இயேசுவை ஏற்றுக்கொண்டிருந்த காலம். அதே குஜராத்தின் தென்பகுதியில் வசித்து வந்த வசாவா இனமக்களைப் பற்றிய தரினத்துடன் அக்கல்குவா என்கிற புதிய பணித்தளத்தை திறந்து, உடன் ஊழியர் அருட்திரு. விக்டர் முருகேசனுடன் வசாவா மக்கள் மத்தியில் முன்னோடி மிஷனரியாக ஊழியத்தை 1988-ம் ஆண்டு ஆரம்பித்தார். அருட்திரு. நத்தானியேல் லோகராஜ் அன்று அந்த வசாவா இரட்டையர்கள் பற்ற வைத்த சுவிசேஷ தீ வசாவா இனமக்களிடையே பரவ ஆரம்பித்து இன்று பல்லாயிரம் விசுவாசிகளைக் கொண்ட பலமிக்க திருச்சபையாகத் திகழ்கின்றது. வசாவா மக்களின் மத்தியில் அநேக திருச்சபைகளை நாட்டி புதிய மிஷனரிகளுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தவர். வடக்கு குஜராத்தில் ஊழியம் செய்ய கட்ச் மாவட்டத்திற்கு அனுப்பப்பட்டார். சுவிசேஷத்திற்கு மிகவும் வறட்சியான பிரதேச மான கட்ச் பகுதியில் ஊழியஞ்செய்து குறுகிய காலத்தில் சிலரை கிறிஸ்துவின் மந்தையில் இணையவைத்து ஒரு

சபையை நிறுவி அதனை இன்னொரு ஊழியரிடம் கொடுத்துவிட்டு, இயக்கத்தின் கட்டளைக்கிணங்க சேலம் பெத்தேல் வேதாகமக் கல்லூரியில் பயின்றுவந்த நம் இளம் மிஷனரிகளுக்குப் பயிற்சி கொடுக்கச் சென்றார்.

குஜராத் மாநிலத்தின் பிப்பல்வாடா பணித் தளத்தையும் அங்குள்ள ஊழியர் பயிற்சி மையத்தினையும் பொறுப்பெடுத்து மீண்டும் அதனை திறம்பட நிறைவேற்றினார். இந்த இடைவிடா பணிகளுக்கு மத்தியில் வேதாகமத்தை ஆழமாகக் கற்றுத் தேறவும் பிறருக்குக் கற்றுகொடுக்கவும் B.Th., B.D., M.Th போன்ற படிப்புகளையும் சிறப்பாகக் கற்றுத் தேர்ந்தார். இறுதியாக, மத்தியப் பிரதேச மாநிலத்தின் போபால் நகரின் முன்னேற்றப் பணியினை பொறுப்பேற்றவர் தனது 37 வருட செம்மையான தேவபணிக்கு பின்னர் 2012-ம் ஆண்டு விருப்ப ஓய்வு பெற்று சென்னையில் தாம்பரம் பகுதியில் தங்கி ஊழியத்தினைத் தொடர்ந்தார். ஊழியத்தின் மத்தியில் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டிருந்த தனது மனைவி திருமதி. பேபி நத்தானியேல் அவர்களை கவனித்துக்கொண்டிருந்தவருக்கு பேரிடியாக புற்றுநோய் அவரையும் தாக்கிற்று. புற்றுநோய்க்கு சிகிச்சை எடுத்துக்கொண்டிருந்த அவரை கர்த்தர் தனது அன்பிற்கினிய ஊழியரை பரம இளைப்பாறுதலுக்குள்ளாக 2023-ம் வருடம் நவம்பர் 18-ம் தேதி அவரது 71-வது வயதிலே அழைத்துக்கொண்டார். தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, குஜராத்தி, குக்னா, வசாவா, மராட்டி ஆகிய மொழிகளில் திறம்பட கலந்துரையாடும் திறன் படைத்த அருட்திரு. நத்தானியேல் லோகராஜ் அவர்கள் உருவாக்கிய திருச்சபைகள் ஒளிவீசும் ஜீவ சாட்சிகளாக இருக்கின்றன. அவரால் பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர்கள் இன்னும் பல காலம் அவரது பெயரைச் சொல்லிக்கொண்டிருப்பார்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. புற்றுநோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் அவரது துணைவியார் திருமதி. பேபி நத்தானியேல் அவர்களுக்காகவும் அவர்களது வளர்ப்பு மகன் திரு. ஜாய்ஸ் ஷாலோம் அவர்கள் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக்கொள்வோம்.

**- அருட்திரு. டி. ஆபிரகாம்**




# மும்பை மிஷனரிப் பிரதிஷ்டை

நவம்பர் 4-ம் தேதி நடைபெற்ற மேற்கு மும்பை ஸ்கேன் கூடுகையின்போது 50 ஊழியர்கள் பிரதிஷ்டைச் செய்யப்பட்டனர். இக்கூடுகையானது போதகர்கள் S.R. மணி (மெதடிஸ்ட் - தானே), ஜஸ்டின் புஷ்பராஜ் (மெதடிஸ்ட்-போரிவிலி), ஜெபமணி (CNI-கோரேகாவ்) ஜான்ரோலன் (CNI-அனைத்து ஆன்மாக்கள் திருச்சபை) மற்றும் ராஜாமணி (மெதடிஸ்ட்-மீரா ரோடு) இவர்கள் தலைமையில் போரிவிலி தமிழ் மெதடிஸ்ட் ஆலயத்தில் வைத்து தேவநாம மகிமைக்கென்று நடைபெற்றது. பிரதிஷ்டைச் செய்யப்பட்ட ஊழியர்களை ஜெபத்தாலும் பொருளாலும் தாங்க முன்வந்த ஒவ்வொரு ஆதரவாளர்களையும் அவர்களின் குடும்பங்களையும் தேவன்தாமே ஆசீர்வதிப்பாராக.

**- அருட்திரு. R. அருள்மணி,** விரிவுப்பணி - மேற்கு மும்பை (மல்லாடு).

# மகிமைக்குள் பிரவேசித்தார்கள்



நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் வட சென்னை பகுதியில் 1983-ம் ஆண்டு முதல் 2016-ம் ஆண்டு வரை திருமதி. ரஸியா லில்லி அவர்கள் ஜெபக்குழுத்தலைவியாக ஊழியம் செய்து வந்தார்கள். இல்லங்களில் ஜெபக்குழுக்களைப் பொறுப்பெடுத்து நடத்தியும், பணித்தள விஜயங்களில் 1992-ம் ஆண்டு முதல் 2014-ம் ஆண்டு வரை தவறாது கலந்துகொண்டு, நமது ஊழியர்களை உற்சாகப்படுத்தி, ஜெபித்து வருவார்கள். எல்லா உபவாச ஜெபங்களிலும், ஆண்டுதோறும் நடைபெறும் நமது மாநில முகாம்களிலும் தவறாது கலந்துகொண்டு அநேகரை உற்சாகப்படுத்துவார்கள். இவர் தன்னால் இயன்றதை நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியர்களுடன் இணைந்து, தேசத்திற்காக ஜெபித்தும், நல்ல சாட்சியாக வாழ்ந்தார்கள். இவர்கள் கடந்த 2023 ஆகஸ்ட் மாதம் 30-ம் தேதியன்று தேவனுடைய ராஜ்யத்தில் நித்திய இளைப்பாறுதலுக்குள் தன்னுடைய 85-வது வயதில் பிரவேசித்தார். இவரை பிரிந்திருக்கும் பிள்ளைகள் குடும்பம் மற்றும் பேரப்பிள்ளைகள் ஆகியோரின் சமாதானத்திற்காக ஜெபித்துக்கொள்வோம்.



சேலம் மாவட்டத்திலுள்ள மேட்டூர் அணையைச் சேர்ந்த திரு. ராஜ்குமார் ராபின்சன் அவர்கள் கடந்த 45 ஆண்டுகளாக மேட்டூர் அணை மற்றும் கொளத்தூர் பகுதிகளில் நமது இயக்கத்தின் ஜெபக்குழு தலைவராகச் செயல்பட்டார். மேட்டூர் அணையில் நமது இயக்கம் காலூன்ற காரணமானவர். குடும்பமாக மிஷனரி மற்றும் குழந்தை ஆதரவாளராக இருந்தவர். பிறரையும் ஆதரவளிக்க உற்சாகப்படுத்தினார். தனது 3 பிள்ளைகளையும் இவ்வியக்கத்தின் முன்னேற்றத்திற்கான செயல்பாடுகளில் வளர்த்தவர். அநேக ஜெபக்குழுத்தலைவர், தலைவிகளை உருவாக்கினார். அநேக மிஷனரி தரிசனக் கூடுகைகளை நடத்தி சபைகளுக்குள் மிஷனரிப் பணியின் தாக்கத்தை உருவாக்கினார். கடந்த 25 ஆண்டுகளாக மேட்டூரிலுள்ள அனைத்து திருச்சபைகளையும் இணைத்து ஐக்கிய கிறிஸ்துமஸ் கீத ஆராதனையை நடத்தி, அதில் வரும் காணிக்கையை மிஷனரிகளின் கிறிஸ்துமஸ் வெகுமதிக்காக வருஷந்தோறும் அனுப்பிவைப்பார். பலமுறை குடும்பமாக பணித்தள விஜயத்தை மேற்கொண்டவர். இவர் கடந்த அக்டோபர் மாதம் 21-ம் தேதி தனது 76-வது வயதில் கர்த்தருக்குள் தனது ஓட்டத்தை முடித்தார். அவரது மனைவி மற்றும் பிள்ளைகளின் குடும்ப ஆறுதலுக்காகவும், அவர் விட்டுச்சென்றுள்ள ஊழியப்பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படவும் ஜெபிப்போம்.


**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு - வண்ணாரப்பேட்டை, வட சென்னை**

## குடும்பக்கூடுகை மற்றும் மிஷனரிப்பிரதிஷ்டை

**நாள்:** 28.01.2024 - ஞாயிற்றுக்கிழமை **நேரம்:** மாலை 5 மணி

**இடம்:** அக்ஷயா பார்ட்டி ஹால், GA Road, (TMB Bank அருகில்) சென்னை 21.

தொடர்பு: 98408 94257

## ஆலயப்பிரதிஷ்டை & பணித்தள விஜயம்

**சத்தீஸ்கட்**



கர்த்தருடைய பெரிதான கிருபையால் 21.10.2023 காலை சென்னை பெரம்பூரிலிருந்து நாங்கள் 5 பேராக புறப்பட்டு 22.10.2023 காலை சத்தீஸ்கட் மாநிலம் அம்பிகாபூர் ரயில் நிலையம் சென்று பகாட்பாரா ஆலய வளாகத்தில் நடைபெற்ற வாலிபர் கூடுகையில் கலந்துகொண்டோம் ஏறக்குறைய 200 வாலிபர்கள் கலந்துகொண்டனர். வாலிபர்களின் பாடல்கள், நடனம், குறுநாடகம் ஆகியவற்றை கண்டு தேவனைத் துதித்தோம். மாலை பத்தல்காவ் சிறுமியர் விடுதியில் தங்கியுள்ள பிள்ளைகளைச் சந்தித்தோம். இரவு கதம்பாராவிலுள்ள பிராந்திய அலுவலகத்தில் தங்கினோம். 23.10.2023 தென்டுபாராவில் எங்கள் விரிவுப்பணி பகுதி யின் மூலம் கட்டப்பட்ட புதிய ஆலயப்பிரதிஷ்டையில் கலந்துகொண்டோம். ஏறக்குறைய 300 பேர் கலந்துகொண்டனர். 24.10.2023 சுட்கிபாரா புதிய எருசலேம் சபை வளாகத்தில் நடைபெற்ற வாலிபர் கூடுகையில் கலந்துகொண்டோம் ஏறக்குறைய 400 வாலிபர்கள் கலந்துகொண்டனர். மாலை கதம்பாராவிலிருந்து ஜெருசகூடா சென்று அங்கிருந்து ரயில் மூலம் சென்னை வந்து சேர்ந்தோம். பணித்தள விஜயத்தில் எங்களுக்கு மிகவும் உதவிபுரிந்து, நன்றாகக் கவனித்த ஊழியர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துகொள்கிறோம். இந்த பணித்தள விஜயம் எங்களுக்கு மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது.

– கௌரவ விரிவுப்பணி செயலர், பெரம்பூர்.

## பணித்தள விஜயங்கள்

### ஒடிசா



இராயபுரம், தண்டையார்பேட்டைப் பகுதி அங்கத்தினர்கள் 11 பேர், ஒடிசா உத்கல் பிராந்தியத்திலுள்ள பணித்தளங்களைப் பார்வையிட கடந்த அக்டோபர் மாதம் 16-ம் தேதி புறப்பட்டுச் சென்றோம். அங்கு 8 கிராமங்களில் நமது மிஷனரிகள் மற்றும் விசுவாசிகளுடன் பயணித்து, ஊழியப்பலன்களைக் கண்டு, அவர்களுடன் சந்தோஷமாக ஆடி, பாடி தேவனைத் துதித்தோம். ஆலயம் கட்ட விசுவாசிகள் மூன்று இடங்களில் தியாகமாய்க் கொடுத்த நிலங்களில் நின்று தரிசனத்துடன், 'ஆலயம் துரிதமாகக் கட்ட ஆட்களை எழுப்பித் தாரும் இயேசுவே!' என்று பாரத்துடன் ஜெபித்து, கடந்துவந்தோம். 22-ம் தேதி ஞாயிறு ஆராதனை நமது சக்கடியிலுள்ள விடுதி யில் மிஷனரிகளுடனும், விடுதி மாணவிகளுடனும் ஆண்டவரை ஆராதித்தோம். அன்று மதியம் கனத்த இருதயத்தோடும், பாரத்தோடும் தரிசனமுள்ளவர்களாக " ஜுவாங்" மற்றும் "ஹோ" மக்களினங்கள் பரலோகத்தின் சொந்தமாக திறப்பில் நிற்போம் என்று தீர்மானித்து, அக்டோபர் 24-ம் தேதி சென்னை வந்து சேர்ந்தோம். தேவனுக்கே மகிமை!

– கௌரவ விரிவுப்பணி செயலர்கள், இராயபுரம் & தண்டையார்பேட்டை



## ஜார்க்கண்ட்

நாங்கள் கடந்த அக்டோபர் மாதம் 2023 அம்பாசமுத்திரம் விரிவுப்பணி மாவட்டத்திலிருந்து 09.10.23 அதிகாலை 12.30 மணிக்கு ஜான்சி சென்றடைந்தோம். அங்குள்ள மிஷனரி பயிற்சி மையத்தில் காலை 9.00 மணிக்கு உபவாச ஜெபத்தில் கலந்துகொண்டோம். பின்னர் 13.10.23 அன்று பர்ஹர்வா சென்றடைந்தோம். அங்கிருந்து பந்தேனி பணித்தளம் சென்று அங்குள்ள மால்தோ மக்களின் பிள்ளைகள் பயிலும் பள்ளியினைப் பார்வையிட்டோம். பின்னர் தம்னி பணித்தளத்திலுள்ள ஆலயத்திற்குச் சென்று அங்குள்ள விசுவாசிகளுக்காக ஜெபித்தோம். பின்னர் 14.10.23 அன்று ஹரிபூர் (LTI) தலைமையத்துவ பயிற்சி மையத்திற்குச் சென்றோம். அங்குள்ள மால்பஹாடியா இன விசுவாசிகளைச் சந்தித்து அவர்களுக்காக ஜெபித்தோம். 15.10.23 அன்று துர்காபூரிலுள்ள சிக்காரிபாடா பணித்தளத்தில் ஆண்டவருடைய கிருபையால் அம்பாசமுத்திரம் பணிமாவட்டத்திலுள்ள திரு. ஜெபமணி, திரு. ஐசக் அவர்கள் குடும்பத்தினர் கொடுத்த உதாரத்துவமான காணிக்கையினால் கட்டப்பட்டுள்ள தூய யோவான் ஆலயப்பிரதிஷ்டை ஆராதனையில் கலந்துகொண்டோம். எல்லா பணித்தளத்திலும் மிஷனரிகளின் அர்ப்பணிப்பையும், விசுவாசிகளின் வாஞ்சையையும் கண்டு ஆண்டவரை துதித்தோம். 17.10.23 அன்று இரவு எங்கள் சொந்த இல்லங்களுக்குத் திரும்ப தேவன் கிருபை செய்தார்.

– கௌரவ விரிவுப்பணி செயலர், அம்பாசமுத்திரம்.



## மகாராஷ்டிரா

2023-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 12-ம் தேதி பணித்தளப் பயணமாக வில்லிவாக்கம் பகுதியைச் சேர்ந்த அங்கத்தினர்கள் 5 பேர் மகாராஷ்டிரா மாநிலம் டெக்கான் பிராந்தியத்திலுள்ள பணித்தளங்களைப் பார்வையிடப் புறப்பட்டுச் சென்றோம். 3 கிராமங்களில் நமது மிஷனரிகள் மற்றும் விசுவாசிகளுடன் பயணித்து, ஊழியப் பலன்களைக்கண்டு, அவர்களுடன் மகிழ்ச்சியாக தேவனைப் பாடி, ஆராதித்து துதித்தோம். 14-ம் தேதி பந்தேவாகி கிராமத்தில் FMPB வில்லிவாக்கம் சார்பாகக் கட்டிக்கொடுக்கப்பட்ட தலைமைத்துவப் பயிற்சி மையத்தை தேவநாம மகிமைக்கென்று பிரதிஷ்டைச் செய்து திறந்து வைத்தோம். நமது ஆலப்பள்ளி விடுதி பிள்ளைகளுடன் செலவிட்ட நேரம் மிகவும் மகிழ்ச்சியையும், ஆன்மீக திருப்தியையும் தந்தது. 15-ம் தேதி ஞாயிறு ஆராதனை விட்டல்வாடி கிராமத்தில் விசுவாசிகளுடன் ஆராதித்து, அன்று மதியம் பாரத்தோடு தரிசனமுள்ளவர்களாக ராஜ், பிரதான் மற்றும் மாடியா கோண்ட் மக்களின் இரட்சிப்பிற்காக ஜெபிப்போம் என்று தீர்மானித்து, ஊழியர்கள் தலைமையில் மனரம்மியத்துடன் தந்த வரவேற்பு, உபசரிப்பு மற்றும் அனைத்து ஏற்பாடுகளுக்காக நன்றி சொல்லி அக்டோபர் 16-ம் தேதி சென்னை வந்து சேர்ந்தோம். தேவனுக்கே மகிமை!

– FMPB, வில்லிவாக்கம்.



# உத்தரப்பிரதேசம்

திண்டுக்கல் மாவட்டத்திலிருந்து 19 நபர்கள் கொண்ட FMPB-யின் ஜெபக்குழு தலைவர்களாக கடந்த அக்டோபர் 18-ம் தேதியன்று பஞ்சாப், ஹரியானா மற்றும் உத்தரப்பிரதேசத்தில் நடைபெறும் ஊழியங்களைக் காண சென்றிருந்தோம். அங்குச் சென்று நம் புதிய விசுவாசிகளோடு ஜெபிக்கவும், அவர்கள் மத்தியில் தேவன் செய்த வல்லமையான காரியங்களைக் கண்டு, கேட்டு தேவனைத் துதிக்கச் செய்தார். 19 நபர்களும் தங்கள் ஆவியில் அனல் மூட்டப்பட்டு, ஜெப பாரத்தோடு எங்கள் வீடுகளுக்கு வந்து சேர்ந்தோம். அங்கு நடைபெறும் ஊழியங்களுக்காய் தேவனைத் துதிக்கிறோம்.

– விரிவுப்பணி செயலர், திண்டுக்கல்.



# ஒடிசா

கடந்த அக்டோபர் மாதம் 14-ம் தேதி சென்னை அண்ணாநகர் பிராந்திய ஜெபக்குழு சார்பாக 10 பேர் ஒடிசா மாநிலத்திலுள்ள உத்கல் பிராந்தியத்தில் அமைந்துள்ள ஜஷ்ப்பூர், ரிமுலி பணித்தளங்களைப் பார்வையிடச் சென்றோம். அங்குள்ள ஹோ சந்தால் இனமக்களுடன் ஆராதிக்கவும், அவர்களது கலாச்சாரங்களை அறிந்துகொள்ளவும், சக்கிடி சிறுவர் விடுதியைப் பார்வையிட்டு அங்குள்ள நிகழ்வுகளில் கலந்துகொள்ளவும் தேவன் கிருபை பாராட்டினார். ஜமுட்டி கிராமத்தில் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவால் கட்டப்பட்ட முதல் ஆலயத்தைப் பார்வையிட்டு அங்கு நடந்த ஆராதனையில் விசுவாசிகளுடன் பங்கு பெற்றோம். 15.10.23 (ஞாயிறு) அன்று காலை அண்ணாநகர் ஜெபக்குழு மூலமாக கலிக்காபிரசாத் கிராமத்தில் கட்டப்பட்ட தேவ ஆலயத்தை கர்த்தருடைய மகிமைக்காகப் பிரதிஷ்டைச் செய்யப்பட்டது. அதிக மன நிறைவோடு விசுவாசிளுடன் ஆராதனையில் பங்குபெற்றோம். பாதுகாப்பற்ற சூழலில், மலைகள் வழியாகக் கடந்து சென்று நம்முடைய மிஷனரிகள் செய்யும் சுவிசேஷப்பணிகளைப் பார்வையிட்டு, அவர்களுக்காக ஜெபிக்கவும், மன்றாடவும் அதைப்பற்றி அநேகருக்கு எடுத்துக் கூறவும் ஊக்குவிக்கப்பட்டு 19-ம் தேதி சென்னை வந்து சேர்ந்தோம்.

– அண்ணாநகர், சென்னை.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. கோன்கா கிரி பாபு
திரு. கின் சாவ்ம்
திரு. மீனுகா அடப்பா மேத்யூ
திருமதி. சரிதா பால் சௌதரி ராஜேஷ்

## ஜம்மு

### ஜம்மு பிராந்தியம்: வசாவே எலேஷ் பிரபு & சுனிதா வெச்யா

**துதிக்க:** அசுத்த ஆவியின் பிடியிலிருந்து பிட்டுதேவி, அனிதாதேவி, நெட்டுதேவி, பூணம்தேவி, அனுராதா ஆகியோர் ஜெபத்தின் மூலம் விடுதலையாக்கப்பட்டு ஆலயம் வருகின்றனர். ஒரு மாதமாக காணாமல்போயிருந்த கோட்லி கிராமத்தின் இட்வாரி ஜெபித்ததின் விளைவாக சுகமாய் திரும்பி வந்துள்ளனர். ஜெபத்தின் மூலம் ரெபெக்காவிற்கு நல்ல வேலை கிடைத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கணவன் விட்டுச் சென்றதால் தனது இரு குழந்தைகளுடன் சிரமப்படுகிற அனுதேவிக்கு ஒரு நல்ல வேலை கிடைக்க; இரவில் தூங்க முடியாமல் கஷ்டப்படுகின்ற சக்ரோல் கிராமத்தின் சுனிதா சுகம் பெற; அகார்சக் கிராமத்தின் அஸ்வின் தன் பார்வையை திரும்பப்பெற; சபை விசுவாசிகள் தங்கள் உறவினர்களுக்கு கிறிஸ்துவை அறிமுகம் செய்து வைக்கும் முயற்சி வெற்றிபெற ஜெபிப்போம்.

### நௌஷேரா: சியான்லுன்தாங் ஸௌ டி. & லிங்நெய்ஹோய்

**துதிக்க:** லாம்பரி கிராமத்தில் ஆராதனைக் குழு புதிதாக ஆரம்பிக்க தேவன் உதவி செய்தார். மேலா கிராமத்தில் சுவிசேஷ கூட்டம் நடத்த 2 குடும்பங்கள் அழைப்பு விடுத்துள்ளனர். 2 குழந்தைகளுடன் வாழ்க்கையில் சிரமப்பட்டுக்கொண்டிருந்த விதவை திருமதி. பால் அரசாங்க பள்ளியில் வேலையில் சேர்ந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அன்ட்ரோலா, கல்யானா மற்றும் லம்பேரி கிராமத்தின் புதிய விசுவாசிகள் கிறிஸ்துவை தயக்கமின்றி அறிக்கையிட; கல்யானா கிராமத்தின் புதிய விசுவாசி வீர்திதேவிக்கு தேவன் குழந்தை பாக்கியம் கட்டளையிட; நமது விசுவாசிகள் தங்கள் உறவினர்களுக்கு கிறிஸ்துவை அறிமுகம் செய்து வைக்க ஜெபிப்போம்.

### சாம்பா: டேவிட் அய்யனார் & மன்பிரீத் கௌர்

**துதிக்க:** மூன்று நபர்கள் கிறிஸ்துவின் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கை யிட்டனர். சைதா மற்றும் பட்யாரி கிராமங் களில் சுவிசேஷத்திற்கு நல்ல வரவேற்பு காணப்படுகிறது. பெண்கள் கூடுகைக்குத் தவறாமல் அதிக அளவில் பெண்கள் வந்து கலந்துகொள்கின்றனர். நமது ஊழியத்திற்கு கோட்டா மற்றும் சக்மங்கா கிராமத்தலைவர்கள் உதவி வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சும்ப், பொங்வால், சுங்வாலி கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு நல்ல வரவேற்பு கிடைக்க; போட்டா கிராமத்தின் பல்வீர் அசுத்த ஆவியின் பிடியிலிருந்து விடுபட; வாகன விபத்தில் கையில் அடிபட்டு வேலைசெய்ய முடியாம லிருக்கும் பட்யாரி கிராமத்தின் ராம்பால் விரைவில் குணமடைய; ரேடியன் கிராமத்தில் நமது ஊழியத்தை எதிர்க்கின்ற நபர்கள் கிறிஸ்துவால் சந்திக்கப்பட ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. மேகலை செல்வி பிரபாகர்
திரு. நாத்தான் குமார் பெபர்தா
திருமதி. மஹாலே ஏமன்பேன் பாங்சிங்
திரு. முன்னா மொஹன்தியர், திரு. உப்தேஷ் குமார்
திரு. ரவுத் சுபாஷ்பாய் லானுபாய்

### நரோத்: ஜீவர் ஜோஸ்வா & ஷேத்ரிமயூம் பிரியா தேவி

**துதிக்க:** 7 ஆத்துமாக்களை சபையில் சேர்க்க தேவன் உதவிசெய்தார். ஹட்டி கிராமத்தின் தீபு தன் காலிலிருந்த கட்டியினால் நடக்க முடியாமலிருந்தபோது ஆலயம் வந்து ஜெபம் ஏறெடுத்ததினால் கட்டி இருந்த இடந்தெரியாமல் மறைந்து போனது. நின்று போயிருந்த தல்லோர் கிராம ஆலய ஆராதனை மீண்டும் துவங்கப்பட்டுள்ளது. குடா கிராமத்தில் சுவிசேஷத்திற்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுகவீனத்தால் பாதிக்கப்பட்டு ஜெபக்குழுவை நடத்த முடியாமலிருக்கும் ஜமில்செனக் கிராமத்தின் சகோதரி வாச்சம் குணமடைய; நானான் கிராம ஆலயக்கட்டு மானப்பணியை எதிர்க்கும் நபர்கள் மனந் திரும்ப; சுகவீனத்தால் படுத்தப்படுக்கையாக இருக்கும் குடா கிராமத்தின் சத்யா குண மடைய; கச்சுடா மாவட்ட கிராமங்களை சுவிசேஷத்தினால் சந்திக்க எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றிபெற ஜெபிப்போம்.

## ஹிமாச்சலப் பிரதேசம்

### ரோஹ்ரு: ஜாண்சன் சங்கர் & ஜெபராணி

**துதிக்க:** நேப்பாளி இனத்தைச் சேர்ந்த நமது புதிய விசுவாசிகளான சந்தோஷ் – சிர்ஜனா தங்கள் இன வழக்கமான, ஓடிப்போய் திருமணம் முடிக்கும் வழக்கத் திற்கு மாறாக கிறிஸ்தவ முறைப்படி ஊரார் வியக்க சாட்சியாக திருமணம் முடித்துக்கொண்டனர். செரளா மற்றும் லிம்ரா கிராம சபைகளில் வாலிபர் முகாம்கள் நடத்தப்பட்டன. வீட்டைவிட்டுச் சென்ற சுரேந்தரின் குடும்பத்தினரின் தீவிர ஜெபத் திற்குப் பிறகு 18 மாதங்கள் கழித்து அவர் தன் வீடு திரும்ப தேவன் கிருபை செய்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுனில், சந்தீப், அருண் மற்றும் கணேஷ்க்கு நல்ல வேலை கிடைக்க, சிறையிலிருக்கும் தன் மகன் கியான் சந்த், மனந்திருந்தி விடுதலையாக தந்தை ஜெபித்துவருவதை தேவன் நிறைவேற்ற; தைராய்டு, நீரிழிவு, ஆஸ்துமா போன்ற பல வியாதிகளினால் கஷ்டப்படுகின்ற விசுவாசி மஞ்சு பூரண குணமடைய ஜெபிப்போம்.

### தானேதார்: ஜெபர்சன் & காயத்ரி

**துதிக்க:** 10 இடங்களைத் தேர்வுசெய்து அங்கு ஜெபநடை மேற்கொள்ளப்பட்டது. 191 நபர்களுக்கு சுவிசேஷ கைப்பிரதிகள் கொடுக்கப்பட்டுள்ளது. நீண்ட நாட்கள் விரோதமாக இருந்த விமலா மற்றும் சந்திரா குடும்பம் சமாதானமாகி ஆலயம் வரத்தொடங்கியுள்ளனர். இளம் வாலிபன் தீபக்கின் திருமணம் கிறிஸ்தவ முறைப்படி கிராமத்தார் அனைவரும் வியக்கும் வண்ணம் நடைபெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புட்டி கிராமத்தில் கிறிஸ்துவை அறிக்கையிட தயாராக இருக்கும் மூன்று குடும்பங்களில் காணப்படும் தடைகள் நீங்க, புதிதாக விசுவாசத்திற்குள் வந்துள்ள கீதா தன்னுடைய குடும்பத்தாரையும் விசுவாசத் திற்குள் நடத்த; வரும் கடும் குளிர் காலத்தில் ஊழியர்கள் மற்றும் அவர்களது தற்போது பிறந்துள்ள கைக்குழந்தை பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.




## ஹிமாச்சல் பிராந்திய அலுவலகம் :

### த்சாங்சே சங்தம் & சுச்சானோ

**துதிக்க:** சுவிசேஷத்திற்கு செவிமடுத்த 45 குடும்பத்தினர் வீட்டில் ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. லக்ஷ்மியின் முழுக் குடும்பத்தையும் அலைக்கழித்த பிசாசின் தொந்தரவு விசுவாசிகளின் உபவாச ஜெபத்தின் மூலம் நீங்கினது. இப்பிராந்தியத்தில் பணிசெய்யும் மிஷனரி மற்றும் சுதேச ஊழியர் குடும்பங்களை மழைக் காலத்தில் பயணங்களின் போது தேவன் பாதுகாத்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசத்தில் பின்மாற்றமடைந்துள்ள ரோஷன்லால் தன் குடும்பத்தினர் ஆலயம் செல்வதை தடுக்கிறார். அவர் மீண்டும் கிறிஸ்துவின் அன்பிற்குள்ளாக வர; பரனு மற்றும் அட்டல் கிராமங்களில் ஆராதனை நடத்த இடம் கிடைக்க; எதிர்ப்புகளினிமித்தம் இடம் தர மறுக்கின்றவர்களை தேவன் விசுவாச பிடிக்குள் கொண்டு வர; சுனில்–மீரா குடும்பம் மீண்டும் விசுவாசத்தில் உறுதிப்படுத்தப்பட ஜெபிப்போம்.

## கர்சோக்:

### பவன் குமார் & பிரபாஷினி தேவி

**துதிக்க:** கம்பாரா மற்றும் காட் கிராமங்களில் புதிய தொடர்புகள் கிடைத்துள்ளன. ஜீப் ஊழியம் மூலம் 11 கிராமங்களில் நற்செய்தி பகிரப்பட்டது. ஜலாரி கிராமத்திலிருந்து தன்னார்வலராக ஊழியம் செய்ய ஜெய்ராம் முன்வந்துள்ளார். கிறிஸ்துவுக்காக சாட்சி கூறி கிராமத்தில் சுவிசேஷம் சொல்லி வரும் சகோதரி சொப்னாவிற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பசந்த்பூரில் ஊழியத்திற்கு இடையூறு செய்துவரும் சுனில்–மீரா குடும்பம் தேவனால் சந்திக்கப்பட; கம்பாரா மற்றும் காட் கிராமங்களில் விரைவில் ஆராதனைகள் துவங்கப்பட; மிஷனரியின் 5 வயது குழந்தைக்கு டெஹராடூன் பள்ளியில் இடம் கிடைக்க; நற்செய்தி அறிவிக்கப்பட்ட 11 கிராமங்களிலும் பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்ய ஜெபிப்போம்.

# பஞ்சாப்

## பட்டாலா:

### வால்வி நேதாஜி டாடு & கல்பனா

**துதிக்க:** சுமன் மற்றும் ரீட்டா குடும்பங்கள் புதிதாக ஆலயம் வருகிறார்கள். முக்ரி மோலா கிராமத்தில் இயேசு திரைப்படத்தை 500 பேருக்கும் அதிகமான நபர்கள் கூடி காண தேவன் கிருபைசெய்தார். நீண்ட நாட்கள் ஜெபத்திற்கு பலனாக ராஜேஷ் மற்றும் பீட்டர் குடும்பங்களை தேவன் குழந்தை செல்வத்தினால் ஆசீர்வதித்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** திவானிவால் கிராம ஆலய ஆராதனையை நிறுத்த முயற்சிக்கும் ஓய்வுபெற்ற ராணுவ வீரர் நிஷாந்த்சிங் மனந்திரும்ப; துப்சலி கிராம மக்கள் சுவிசேஷம் ஊருக்குள் அறிவிக்கக்கூடாது என்று விதித்துள்ள தடை நீங்க; கீழே விழுந்து கை முறிவு ஏற்பட்டிருக்கும் 6 வயது சிறுவன் ரோஷன் விரைவில் சுகம் பெற ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஐவி மார்கரெட் நிக்கல்சன்
திருமதி. பாக்கியம் கொர்நேலியு
திரு. பும்சோன்சின், திரு. லால் கிஷோர் முர்மு

## புத்லாடா:

### சஞ்ஜீப் ஆனந்த் & பிரஸ்துதா; பிரதாப் ரஹாங் & ரேஷ்மி

**துதிக்க:** ஐந்து நபர்கள் இயேசுவே மெய்யான தெய்வம் என்று அறிக்கையிட்டனர். பக்வான்சிங் புரா, மோர், சார்சிங், சக்ராம்சிங் கிராமங்களில் நடத்தப்பட்ட சத்சங் கூடுகையில் அநேகர் பங்கு பெற்றனர். 5 கிராமங்களில் திரையிடப்பட்ட இயேசு படத்தை சுமார் 1750 நபர்கள் கண்டுகளித்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டும் விம்சிங், லவ்ப்ரீத், ரோகித், முனேஷ், நானானே, மனோஜ் மற்றும் ராஜு இயேசுவை ஏற்றுக்கொள்ள; பதின்டா, பஹாதா தல்வான்டி, ராம்பூரா, சங்கட்மண்டி ஆகிய கிராமங்களில் இரவுக் கூட்டங்கள் ஆரம்பிக்கப்பட; குடிப் பழக்கத்தினால் ஆலயம் வருவதை நிறுத்தியிருக்கும் தர்சம், லக்ஷ்மண், ராதேசியாம், கரண், இந்திரேஷ் மற்றும் குல்தீப் குடியினை விட்டுவிட்டு மீண்டும் ஆலயம் வர ஜெபிப்போம்.

## பர்னாலா: பிதன் ஹன்ஸ்தா & பன்சூரி மோஹலின்

**துதிக்க:** இரத்த சோகை வியாதியினால் மிகவும் பலவீனப்பட்டு போயிருந்த தானியா ஜெபத்தின் மூலம் சுகம் பெற்று வருகிறார். ஊழியத்தின் விருத்திக்காக ஜெபித்தபோது தேவன் கீதா மற்றும் சுமன் ஆகியோரை தன்னார்வ ஊழியர்களாக எழுப்பியுள்ளார். 2 இடங்களில் இயேசு திரைப்படம் திரையிட்டப்போது திரளானோர் அதனைக் காண தேவன் கிருபை செய்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தகப்பனை இழக்கக் கொடுத்திருக்கும் பிந்தர்சிங் குடும்பத்தின் ஆறுதலுக்காக; மனைவியின் விசுவாசத்திற்கு மாறாக வீட்டிற்குள் சிலைகளைக் கொண்டுவந்து பூஜை செய்யும் மஞ்சு கௌரின் கணவரை தேவன் தொட; கிறிஸ்துவை அறிக்கையிட தயாராகி வரும் நானக்சிங், குர்சேவக்சிங், கோபிசிங் மற்றும் தேவ்சிங் இவர்கள் இன்னும் விசுவாசத்தில் பலப்பட ஜெபிப்போம்.

## மோகா:

### ஜஸ்டின் & சாராள் ஜான்சி ராணி

**துதிக்க:** குர்தீர்-வீர்பால் கௌர் குடும்பமாக கிறிஸ்துவை அறிக்கையிட்டனர். ஜலாலாபாத் கிராமத்தின் சீமா ஜெபத்தின் மூலம் காசநோயின் வீரியத்திலிருந்து சற்று குணமடைந்துள்ளார். விபத்தில் சிக்கி அதிக காயம் ஏற்படாமல் அமரீந்தர்சிங் பாதுகாக்கப்பட்டார். விசுவாசத்தில் பின் மாற்றமடைந்திருந்த மிட்டுசிங் குடும்பமாக ஆலயம் வந்து தங்களுடைய பாவத்தை அறிக்கையிட்டு மீண்டும் தேவ ஐக்கியத்துள்ளாக வந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சகோதரி கோல்டி ஆலயம் செல்வதை எதிர்க்கும் கணவர் மனந்திரும்ப; விசுவாசி ஷிலா கணவரின் கொடுமைகளிலிருந்து தப்பிக்க, கணவரும் விசுவாசத்திற்குள் வர; அஜித்வால் சபையினைச் சேர்ந்த பியனாத் அடையாளம் தெரியாத நபர்களால் தாக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவர் சுகமடைந்து வீடு திரும்ப; விசுவாச வாலிப பெண்கள் ரஜனி கௌர், ஜோதி, காஜோல் ஆகியோருக்கு இரட்சிக்கப்பட்ட வாழ்க்கைத்துணைகள் கிடைக்க ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. சுரேஷ் மால்தோ
திருமதி. இவாஞ்சலின் சாம்ராஜ்
செல்வி. மனிஷா லக்ரா
செல்வி. லிங்கிசாங்

### அஹ்மத்கட் மண்டி:

**கிருபா ரக்ஷனா பரே & ஷக்கினா**

**துதிக்க:** 2 பேர் கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். 2 வயது குல்தீப் சக சிறுவர்களோடு விளையாடிக்கொண்டிருந்தபோது ஆழமான தண்ணீர் தொட்டியில் தவறி விழுந்து வயிற்றுக்குள் நீர் புகுந்த நிலையில் தூக்கி எடுக்கப்பட்டு, சிகிச்சைக்குபின் காப்பாற்றப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** துல்கோட், ராம்பூர் மற்றும் மாலேத் கிராமங்களில் நின்று போயி ருக்கிற ஆராதனைக் குழுக்கள் மீண்டும் செயல்பட; லோகத்பீடி, கன்கன்வால் மற்றும் மக்ரன் காலன் கிராமங்களில் சுவிசேஷத்திற்கு வாசல்கள் திறக்கப்பட; வரும் மாதம் திட்டமிடப்பட்டிருக்கிற வாலிபர், பெண்கள் கூடுகைகள் சிறப்பாக நடைபெற ஜெபிப்போம்.

### மால்வா பிராந்தியம்:

**சித்தரஞ்சன் தான்டி & தெஜஸ்விதா**

**துதிக்க:** மல்லாபஸ்தி கிராமத்தில் புதிதாக பெண்கள் ஜெபக்குழுவொன்று ஆரம்பிக்க தேவன் கிருபை செய்தார். விக்கி ஜெபத்தினால் குழந்தை பாக்கிய மடைந்துள்ளனர். பிசாசு பிடித்து தூங்கவும், சாப்பிடவும் முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த சிந்தர் கௌர் ஆலயம் வந்து ஜெபித்த பிறகு பூரண குணமடைந்து வீடு திரும்பினதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வாலிபர்கள் கூடுகையை முன்நின்று நடத்திக்கொண்டிருந்த பஸ்கானா கிராம ரம்ஜோத் கௌர் திடீரென ஏற்பட்ட வயிற்றுவலியினால் அவதியுறுகிறார், உறவினர்கள் மற்றும் அருகிலுள்ளவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதினால்தான் இந்தப்பாடு என்று பயமுறுத்துகிறார்கள். ரம்ஜோத் கௌர் பூரண சுகமடைந்து கூட்டங்கள் மறுபடியும் நடத்தப்பட; பஸ்கானா கிராமத்தில் நமது ஊழியத்திற்கு விரோத மாகச் செயல்படும் ப்ரீத்சிங்கை தேவன் சந்திக்க ஜெபிப்போம்.

## ஹரியானா

**ரத்தியா: கார்த்திகேயன் & ஜெயந்தி**

**துதிக்க:** பெண்கள் கூடுகை, சத்சங் கூடுகை, ஜெபக்கூட்டம் போன்றவைகள் சிறப்பாக நடத்தப்பட்டன. போதை ஊசியின் ஆதிக்கத்திலிருந்து பல்விந்தர்சிங் விடுபட்டு ஆலய ஆராதனையில் கலந்து கொள்கிறார். சுதேச ஊழியரின் மகன் ஜோயல் மிகுந்த சுகவீனத்திலிருந்து குணமடைந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சோட்டர் சபையில் வாலிபர் மற்றும் பெண்கள் கூட்டம் விரைவில் ஆரம்பிக்கப்பட; சிறுநீரகம் பாதிக்கப் பட்டுள்ள குரு வீரேந்திரசிங் பூரண குண மடைய; ரவி, ரிங்கு, சுனில் மற்றும் அசோக் ஆகியோருக்கு நல்ல வேலை கிடைக்க; கர்ப்ரீத்-ஜெஸ்மர் குடும்பம் குழந்தைச் செல்வத்தினால் ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜென்னிஸ் J.B.

## ஜீவன் நகர்:

### அலியாக்கீம் ஜெனா & தீபிகா

**துதிக்க:** விசுவாசிகள் கூடி ஜெபித்தபோது சைலாராமின் வாலிப மகள் கமல் பிசாசின் பிடியிலிருந்து விடுதலையாக்கப்பட்டார். எல்லாக் கூட்டங்களிலும் புகுந்து சண்டையிட்டுக் கொண்டிருந்த பல் தேவின் மகன் அஜய்க்காக சபையினர் ஜெபித்தபோது தேவன் அந்த வாலிபனின் நடத்தையை மாற்றிப் போட்டார். இருசக்கர வாகனம் மோதியதால் காலில் அடிப்பட்டிருந்த மிஷனரி தீபிகா ஜெனா பூரண குணமடைந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஊழியம் வளர்ந்துகொண்டு வருவதால் ரணியா மையத்தில் ஊழியம் செய்ய அர்ப்பணிப்புள்ள சுதேச ஊழியர் கிடைக்க; சந்தீப், தனா, ஹர்மன், பீட்டா மற்றும் அஜய் இவர்களின் விசுவாசம் பலப்பட்டு கிறிஸ்துவை அறிக்கையிட; பிரவீன், நிம்ரத் மற்றும் ஹர்ப்ரீத் குடும்பங்களில் தேவன் ஆண் மகவை கட்டளையிட ஜெபிப்போம்.

## ஃபத்தேஹ்பாத்:

### டேவிட் எஸ். & ஜெப கிரேஸ்

**துதிக்க:** 2 பேர் கிறிஸ்துவை அறிக்கையிட்டு சபையில் உறுப்பினர்களாக இணைந்தனர். தேவ கிருபையால் ஜீதேந்தர்-குஷ்பு இவர்களின் திருமணம் கிறிஸ்தவ முறைப்படி பாட்டியா காலனி சபையில் மகிமையாக நடத்தப்பட்டது. தாரியாபூர் கிராமத்தின் கரிஷ்மாவுக்கு நல்ல முறையில் குழந்தைப் பிறக்க தேவன் கிருபைசெய்தார். அசோக் நகர் சபையில் விசுவாசிகளுக்கு ஆத்தும ஆதாய பயிற்சி சிறப்பாக நடத்தப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டும் ரவீந்தர், தேவிலால் மற்றும் மனோஜ் குடும்பங்கள் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ள; குருத்வாரா சௌக் பகுதியில் விசுவாசி ஜெசி குடும்பத்தை அதிகமாக எதிர்த்துவரும் பக்கத்து வீட்டுக்காரர் மனம் மாற; அசோக் நகரைச் சேர்ந்த ஜெசியின் காது பிரச்சினை தீரவும், அவரது வீட்டு சொந்தக்காரர் ஜெபக்கூட்டம் நடத்த அனுமதிக்கவும் ஜெபிப்போம்.

## ஹரியானா பிராந்தியம்:

### பி.ஜி. கிறிஸ்டோபர் & மேபல்

**துதிக்க:** திண்டுக்கல் மற்றும் வடசென்னை பகுதிகளிலிருந்து வந்திருந்த ஜெபக் குழுத்தலைவர்கள் ஊழியங்களைப் பார்வையிட்டு உற்சாகப்படுத்திச் சென்றனர். வாழ்க்கையின் ஆதாரத்திற்காக ஜெபித்துவந்த பூஜா, ஒரு தையல் மையம் திறக்க தேவன் கிருபை செய்திருக்கிறார். வைபிபூரின் சுபாஷ் சொந்தமாக வீடு கட்டி அதில் ஜெபக்கூட்டம் நடத்த தேவன் கிருபை செய்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது சுதேச ஊழியர் பிரேம்சந்த் காஸ்யாபாத் பகுதியின் சஜீவன் நகரிலுள்ள எதிர்ப்பாளர்களால் அதிகம் மிரட்டப்பட்டு வருகிறார். காய்ச்சலினால் பேச்சுத்திறனை இழந்த நமுனா கிராமத்தைச் சேர்ந்த 16 வயது ரீனா, மீண்டும் பேசும் திறனைப்பெற; பனக்கேடா கிராமத்தில் ஆலயம் கட்ட நிலம் கிடைக்க ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ரமேஷ்வர் தயாள் நிர்மல்

### தோஷம்: அஜய் பர்டே

**துதிக்க:** ஞாயிறு ஆராதனையை நடத்தி முடித்து திரும்பிக்கொண்டிருந்த வாலிபன் மித்லேஷ் வாகனத்திலிருந்து விழுந்தபோதிலும் அதிகம் அடிபடாமல் பாதுகாக்கப்பட்டார். போஜ்ராஜ் கிராமத்தின் மிண்டு குடும்பம் குழந்தை செல்வத்தினால் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டனர். சுகவீனத்தினால் ஆலய ஆராதனையில் பங்குபெற முடியாமலிருந்த சகோதரி க்யானி ஜெபத்தினால் நல்ல சுகம்பெற்று தற்போது ஆராதனையில் கலந்து கொள்கிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குளிர் காலத்தில் வியாதிப்பட்டு வேலைக்குச் செல்ல இயலாமலிருக்கும் பிரன் கிராமத்தின் பன்சிலால் நல்ல சுகம் பெற; பாலாவாஸ் கிராமத்தின் புதிய தொடர்பாளர் மஹான் குடும்பம் சந்தித்து வரும் தொடர் பிரச்சினைகளிலிருந்து விடுதலை பெற; குடித்துவிட்டு குடும்பத்தினர் ஆலயம் செல்வதைத் தடுக்கும் பார்சி கிராமத்தின் பன்சி தனது செயல்களிலிருந்து மனந்திரும்ப ஜெபிப்போம்.

### கலான்வாலி:
### விஜயகுமார் & ஜெபலா

**துதிக்க:** வாலிபர் கூட்டம் நடத்தப்பட்டு அதில் 20 பேரும், சிறுவர் கூட்டத்தில் 30 பேரும் கலந்துகொண்டு தேவ வழிநடத்துதல் பெற்றனர். நம்மைவிட்டு பிரிந்து சென்று ஊழியத்தில் குழப்பம் விளைவித்துக்கொண்டிருந்த கலான்வாலி கிராமத்தின் ராஜு கௌர் மீண்டும் மனந்திருந்தி நம்முடன் இணைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுதேச ஊழியரின் மாமியார் மொகிந்தர் கௌர் உடல் முழுவதும் புண்களால் அவதியுறுகிறார். விரைவில் அவர் குணமடைய; பஹு கிராமத்தின் புதிய விசுவாசி சத்பாலின் மகள் போலியோவிலிருந்தும், இவரது மனைவி காசநோயிலிருந்தும் சுகம் பெற; க்யானா கிராமத்தின் புதிய தொடர்பாளர்கள் பீசன்ட், பால் கௌர், அர்ஸ் கௌர் குடும்பங்கள் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

## உத்தராகண்ட்

### தினேஷ்பூர்: ராமசாமி ஜெரோம் & அந்தோணி ராஜம்

**துதிக்க:** ராம்சந்த்ரபூரில் சுவிசேஷத்திற்கு நல்ல வரவேற்பு கிடைத்து இரவுகூட்டம் புதிதாக தொடங்கப்பட்டுள்ளது. வேறு மாநிலங்களுக்கு வேலையினிமித்தம் சென்றிருந்த சபையின் விசுவாசிகள் நல்ல நிலையில் ஊர் திரும்பியுள்ளனர். புட்பாஜ் கிராமத்தில் புஷ்பா என்கிறவர் ஜெபத்தின் மூலம் அசுத்த ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** திருமணமாகி 5 வருடங்களாக குழந்தையின்றி தற்போது ஜெபக்கூட்டத்திற்கு வருகிற ராம்சந்த்ரபூரின் ராதாவிற்கு தேவன் குழந்தை செல்வத்தை அருளி செய்ய; சைடாலிகஞ் கிராமத்தில் நடைபெறுகிற ஜெபக்கூட்டத்தை நடத்திச் செல்ல ஆவிக்குரிய நபர் முன்வரவும், அங்கே ஆவியானவர் கிரியை செய்யவும் ஜெபிப்போம்.




**மல்தன்சோர்:**

**ஷிஷு பால் & அனிதா**

**துதிக்க:** இருவர் இயேசுவே மெய்யான தேவன் என்பதைக் கண்டுகொண்டனர். கரைல்பூரி கிராமத்தில் புதிதாக ஆராதனைக்குழு தொடங்க தேவன் கிருபை செய்தார். தீபா மற்றும் அனாஞ்சல் தீய ஆவியின் பிடியிலிருந்து ஜெபத்தினால் விடுவிக்கப் பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிவநாந்பூர், நாகிபாஸ், பிரும்மதாரா கிராமங்களில் கிடைத் துள்ள புதிய தொடர்பாளர்கள் இன்னும் தேவனை அறிந்துகொள்ள; கரண், இந்திராபால், குர்னால் மற்றும் அகிலேஸ் இவர்களின் இரட்சிப்புக்காக; மதன்நகர் ஆலயம் புதுப்பித்தல் பணி விரைவில் முடிவடைய ஜெபிப்போம்.

**பஸ்பூர்:**

**கிறிஸ்டியன் பிரகாஷ் & கோகனி சுமித்ராபேன்**

**துதிக்க:** ரெஹ்ட்ரா கிராமத்தின் திஷா சகோதரியின் விடாப்பிடியான ஜெபத் தினால் சுவிசேஷத்திற்குச் செவிகளை அடைத்துக்கொண்டிருந்த அவரது குடும்பத்தினர் ஒருவர்பின் ஒருவராக கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டுள்ளனர். 3 கிராமங்களில் வெளிப்புற சுவிசேஷம் அறிவித்தல் மூலம் நற்செய்தி பகிரப் பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பத்து வருடங்களாக நடக்க இயலாமலிருக்கும் பன்சார்தட் கிராமத்தின் சிம்ரன் சுகமடைய; போஜாசிங் குடும்பத்தின் வறுமை நீங்க; பன்சார்தட் கிராம பாப்புசிங்கின் சிறுநீரகப்பையிலுள்ள கட்டி மறைய; 3 கிராமங்களில் நற்செய்தி பிரதிகள் வாங்கிய 110 நபர்கள் அதனை படித்து உண்மை தெய்வத்தை அறிந்து கொள்ள ஜெபிப்போம்.

**கிச்சா:**

**பிபாபா பானி & பித்திகா**

**துதிக்க:** புதிதாக இந்தப் பணித் தளத்தைத் திறக்க தேவன் கிருபை செய்தார். 5 கிராமங்களில் நற்செய்தி பறைசாற்றப்பட்டுள்ளது. 2 புதிய தொடர்பாளர்கள் தங்கள் வீடுகளில் கூட்டம் நடத்த அழைப்பு விடுத்துள்ளனர். அன்ரோட் குடும்பம் ஊழியத்திற்கு மிகவும் உதவியாக இருக்கின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இந்த பணித்தளத்திலுள்ள 95 கிராமங்களிலும் சுவிசேஷம் சென்றடைய; இந்த பணித்தளத்தில் அதிகமாக வசிக்கின்ற பஹாரி இன மக்கள் சந்திக்கப்பட; அவர்கள் சுவிசேஷத்திற்கு நல்ல வரவேற்பு நல்க; சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டும் ரன்ஜித் குடும்பம் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள; ரான்கி குடும்பத்தில் நிலவும் பிரச்சினைகள் முடிவுக்கு வர ஜெபிப்போம்.




# ராஜஸ்தான்

## அல்வர் விடுதி:

**பங்காரு நாயுடு கர்ரி &**
**ஈமண்டி அனுராதா**

**துதிக்க:** தனேடா கிராமத்தில் புதிதாக நற்செய்தி பகிரப்பட்டது. தன் ஜெபத்தின் வல்லமையால் அனில்குமார் சொந்தமாக ஒரு ஆட்டோ ரிக்ஷா வாங்கியுள்ளார். சகோதரி டிங்கு தன் சட்டப்படிப்பை டெல்லியில் வெற்றிகரமாக முடித்துள்ளார். எதிர்ப்பு நிறைந்த சிர்மோர் கிராமத்தில் தற்போது நற்செய்தி பகிரபட்டபோது அநேகர் பொறுமையாக நின்று கேட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவை இரட்சகராக அறிக்கையிட தயாராகும் காஜோல், குஷ்பு, ரித்திகா, சொப்னா, சானியா, சிலோனி மற்றும் விக்கி இன்னும் விசுவாசத்தில் பலப்பட; நுரையீரல் பாதிக்கப்பட்டுள்ள சுதேச ஊழியர் சோகன்சிங் முற்றிலும் குணமடைய; சம்ரோடா மற்றும் காந்திகா கிராமங்களில் ஆலயக் கட்டுமானத்திற்கு நிலம் கிடைக்க ஜெபிப்போம்.

## காஜூவாலா:

**வி. குமார் & பெட்ரிசியா**
**தமிழ்ச்செல்வி**

**துதிக்க:** பக்கவாதத்தினால் பீடிக்கப்பட்டிருந்த சுகுணா வீட்டு வேலைகளை அவரே செய்யும் அளவிற்கு தொடர் ஜெபத்தினால் சுகம் பெற்றுள்ளார். பணித்தளத்திலிருந்து தமிழ்நாட்டிற்கு முன்னேற்றப் பணிக்கென வந்திருந்த வாலிபர்கள் இங்குள்ள ஆலயங்கள் விசுவாசிகளைப் பார்த்து உற்சாகமடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிறுவர் ஊழியத்தில் மிகவும் உதவிகரமாக இருக்கும் மணிஷா பொருளாதாரரீதியாக ஆசீர்வதிக்கப்படவும், பிற வாலிப பெண்கள் ஊழியத்திற்கு முன்வரவும், வரும் நாட்களில் நடக்கவிருக்கும் கிறிஸ்துவை அறிக்கையிடும் நிகழ்ச்சி தடையின்றி நடைபெற; ஐந்தாவது படித்திருக்கும் மணிஷாவிற்கு தவறுதலாக 8-ம் வகுப்பு சான்றிதழ் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த தவறு சரிசெய்யப்பட்டு மணிஷா படிப்பைத் தொடர ஜெபிப்போம்.

## ஹனுமான்கட்:

**முதவத்து ராஜூ நாயக் &**
**புக்கியா ஜான்சிபாய்**

**துதிக்க:** இரத்த வாந்தி எடுத்த 7 வயது சிறுவன் ராம்சிங், பெற்றோரின் ஜெபத்தின் மூலம் ஆபத்தான நிலையிலிருந்து சுகமடைந்தான். கங்காகார் கிராமத்தில் புதிய தொடர்பாளர் கிடைத்துள்ளார். சோனுவின் சகோதரிக்கு ஊக்கமான ஜெபத்தின் மூலம் அழகான குழந்தையை தேவன் தந்து ஆசீர்வதித்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நுரையீரல் தொற்றினால் கஷ்டப்படுகிற மல்கேஷ் சுகமடைய; பிரகாஷ் கௌரின் இரத்தத்தில் காணப்படும் நோய் தொற்று சுகமாக; நீண்ட நாட்களாக காய்ச்சலினால் துன்பப்படுகிற மக்கான்பாய் சுகம் பெற; வரும் மாதம் திட்டமிடப்பட்டிருக்கிற சுவிசேஷ அறிவிப்புக் கூட்டங்கள் நல்ல விளைவுகளை தர ஜெபிப்போம்.




### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ஜாஷ்வா சின்னதுரை S.
திரு. சஞ்ஜீப் ஆனந்த்
திரு. பவுலுஸ் பர்ஜோ
திரு. செல்வம் தவமணி
திருமதி. ஹயோஜம் ஹிஜம்
திரு. சாந்தகுமார் J.

# உத்தரப் பிரதேசம்

### டூண்ட்லா: பச்சியாபாய் போஹ்னாபாய் & சவிதாபேன்

**துதிக்க:** பிர்சோபாத் கிராமத்தின் ராஜ்வீருக்கு திருமணமாகி 10 வருடங்களுக்கு பிறகு ஆலயம் வந்து ஜெபித்ததினால் குழந்தை பிறந்துள்ளது. 5 இடங்களில் பின்தொடர்ப் பணி செய்யப்பட்டு 50 நபர்களுக்கு தனியாக கிறிஸ்துவின் நற்செய்தி கூறப்பட்டுள்ளது. நற்செய்திக்கு சின்னாரி கிராம மக்கள் ஆர்வத்துடன் செவிசாய்த்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** டூண்ட்லா சபை விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டும் சின்னாரி கிராமத்தின் ரமேஷ், சதீஷ் மற்றும் மனேஷ் இரட்சிப்பின் அனுபவத்திற்குள்ளாக வர; சிர்சாகஞ்ஜ் பகுதியில் சுவிசேஷம் பரவ எடுக்கும் முயற்சிகள் நல்ல பலனை தர ஜெபிப்போம்.

### பஸ்தி: ஸ்ரீனிவாசன் & ஷீபா ஜி

**துதிக்க:** கான்பூர் பிராந்தியப் பொறுப்பினை 5 வருடங்கள் சிறப்பாக நிறைவேற்றி இப்பணித்தளத்திற்கு வந்து ஊழியம் செய்ய தேவன் கிருபை கொடுத்தார். பஸ்தியிலுள்ள 14 ப்ளாக் (வட்டம்) சென்று சபைகளைச் சந்திக்க தேவன் உதவி செய்தார். சுதேச ஊழியர் அமித் குமாரின் திருமணம் சிறப்பாக நடைபெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பஸ்தியின் 14 வட்டங்களிலும் ஊழியம் வளர்ந்தோங்க; ஊழியர்கள் மற்றும் விசுவாசிகளின் பாதுகாப்பிற்காக; ருதாலி கிராமத்தில் கடந்த நவம்பர் மாதம் 23-ம் தேதி துவேஷ கும்பல் நமது சபைக்குள் புகுந்து ஆராதனையை நிறுத்தி விட்டு சென்றுள்ளது. இப்படிப்பட்ட எதிர்ப்புகளில் நமது விசுவாசிகள் உறுதியாக நிற்க ஜெபிப்போம்.

## *கணவனின் துணையுடன் கர்த்தரைக் கண்ட சகோதரி*

*ஜார்க்கண்ட் மாநிலம் பாதர்காமா பணித்தளம் டெலிலோயா கிராமத்தைச் சேர்ந்த சம்பா தேவி தன் குடும்பத்திலுள்ள பிரச்சினைகளைத் தீர்க்க பல இடங்களுக்கும் சென்று பலநூறு செலவழித்தும் சரியாகாமல் இறுதியில் எந்த ஆவிகளின் துணைகளை நாடினாரோ அந்த ஆவிகளின் பிடிகளுக்குட்பட்டு மனநலம் பாதிக்கப்பட்டு பைத்தியமாக மாறிவிட்டார். சம்பாதேவியை விட்டுவிடுமாறு ஊரார் வற்புறுத்தினாலும் அவரது கணவர் இயேசு கிறிஸ்துவைப் பற்றிக் கேள்விப்பட்டு, அவர்கள் இருக்கின்ற ஊரிலிருந்து 19 கீ.மீ-ல் ஆலயம் இருக்கின்ற சில்காரா கிராம சபைக்கு ஒவ்வொரு ஞாயிறும் மிதிவண்டியில் உட்காரவைத்து அழைத்துவரத் தொடங்கினார். மனநலம் பாதிக்கப்பட்ட மனைவியை மிதிவண்டியின் பின்னால் உட்காரவைத்து 19 கீ.மீ மிதித்துக் கொண்டுவருவது சாதாரண காரியமில்லை; என்றாலும், மனைவியை கிறிஸ்து சுகப்படுத்தி விடுவார் என்ற அவரின் நம்பிக்கை அவரை உந்தி தள்ளியது. சபைமக்களுடன் அவரும் ஊக்கமாக ஜெபிக்கவே தேவன் சம்பாதேவியை பூரணமாகக் குணப்படுத்தினார். தற்போதும் சம்பாதேவி கணவருடன் 19 கீ.மீ. மிதிவண்டியில் பயணம் செய்து மனமகிழ்ச்சியுடன் தேவனை ஆராதிக்க வருகிறார். தேவனுக்கே மகிமை.*




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஜெயா ஹெலன் ரோஸ் செல்வகுமார்

## காட்டாம்பூர்: ஜங்கோலுன் தெளதாங் & தியான்சிங் ஹெளசல்

**துதிக்க:** 23 நாட்கள் பொய் புகாரின் அடிப்படையில் சிறையில் அடைக்கப் பட்டிருந்தாலும் தேவனுடைய காக்கும் கரம் ஊழியரோடிருந்து பிணையில் விடுதலையாக உதவினது. உபத்திரவத்தின் ஊடாக சென்ற நாட்களில் ஊழியரின் மனைவியின் தாயார் தேவ ராஜ்யத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது குடும்பத்தை தேவன் ஆறுதல்படுத்தினார். காட்டாம்பூர் சபை விசுவாசிகள் ஏறெடுத்த உபவாச ஜெபங்கள் மிகுந்த பலனைக் கொடுத்த தற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விரைவில் வழக்காடு மன்றத் திற்கு வரவிருக்கும் இந்த வழக்கு ஒன்று மில்லாமல் போக; சபை மக்களின் உபவாச ஜெபம் தொடர்ந்து நடைபெற; வழக்கில் பிணையில் சிறையிலிருந்து வெளிவர உதவி செய்த அனைவரையும் தேவன் ஆசீர்வதிக்க; உபத்திரவத்தினால் நமது விசுவாசிகள் சோர்ந்து போகாமல் இன்னும் விசுவாசத்தில் பெலப்பட ஜெபிப்போம்.

## ஜின்ஜக்: சமரேந்திர சிங் & சுஸ்மித்தா

**துதிக்க:** எட்வா கிராமத்தின் ரிங்குவின் மனைவி பூஜா நீண்ட நாட்களாக பிசாசின் பிடியிலிருந்து தன்னை தானே கீறிக்கொண்டு கத்திக்கொண்டு இருந்தார். அநேக மந்திர தந்திரங்கள் வைத்தியங்கள் பார்த்து தோல்வியுற்று நமது பூலான்நகர் ஆயலத்திற்கு தூக்கி வந்து ஜெபம் செய்ய வேண்டினார்கள். விசுவாசிகளின் ஊக்க மான ஜெபத்தின் மூலமாக அன்றைய தினமே பூரண குணமடைந்து சந்தோஷ மாக வீடு திரும்பினார், முழுக்குடும்பமும் தேவனை ஏற்றுக்கொண்டனர். 10 நபர்கள் கிறிஸ்துவே தெய்வம் என்று விசுவாச அறிக்கையிட்டனர். அம்ரோடா கிராமம் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** காசநோயினால் துன்புறும் பம்பயா கிராமத்தின் கனிகா சுகம் பெற; சான்பூர் சபையின் சகோதரி ரூபிக்கு நல்ல மணமகன் கிடைக்க; எட்வா கிராமத்தின் இரு ராஜ்புத் சமூக குடும்பங்கள் பயமின்றி கிறிஸ்துவை அறிக்கை செய்ய; கரீஸ்காலா, சாஹபூர், தயால்பூர் கிராமங்களைச் சேர்ந்த சங்கீதா, நஜ்மீரா மற்றும் ராதா குழந்தை பாக்கியம் அடைய; ஆலய மூப்பர்கள் அமர்சிங், சோட்டேலால் மற்றும் சுசில் தங்கள் ஆலயப் பொறுப்புகளை சரிவர செய்ய ஜெபிப்போம்.

## *தேவ தயவினால் பெற்ற சுகம்!*

*மகாராஷ்டிரா, தலசாரி பணித்தளம். வர்வாடா கிராம அஞ்சலி ஜெபத்தின்மூலம் பிசாசு பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டு, இயேசுவை ஏற்றுக்கொண்டார். பின்பு சீக்கிரமாக விசுவாசத்திலிருந்து பின்வாங்கிப் போனார். ஆனால், அதற்குப் பிறகு தனது ஒரு மாதக்குழந்தையை இழந்த துக்கத்தினால் அதிக மன உளைச்சலுக்குள்ளாகி, மிகவும் மோசமான நிலையை அடைந்தார். எனவே, அவரது பெற்றோர்கள் நமது ஊழியர்களையும், விசுவாசிகளையும் ஜெபிக்க அழைத்தனர். விசுவாசத்துடன் அனைவரும் ஏறெடுத்த ஜெபத்தைக் கேட்டு, தேவன் அவருக்கு தயவாக சுக மருளினார். முழுக்குடும்பமும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, சபை ஆராதனையில் பங்கேற்று வருகின்றனர். அல்லேலூயா!*




பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. லவ்லின் புன்யா

## மத்தியப் பிரதேசம்

### பால்: வெங்கடேஷ் வடார் & ஷீபா

**துதிக்க:** மூன்று நபர்கள் இயேசுவே மெய்யான தெய்வம் என்று அறிக்கை யிட்டனர். ரூய்கேடா, பசலி, சோலாபார்டி, பிப்பல்குரா மற்றும் போலானா கிராமங் களில் நடத்தப்பட்ட பெண்கள் கூடுகையில் அநேகர் கலந்து கொண்டனர். சோலாபார்டி கிராமத்தின் தார்சிங் மகன் கண்ணில் இரும்பு கம்பி குத்தி கண் பார்வை பாதிக்கப்பட்டு இருந்த நிலையில் ஜெபத்தின் மூலம் அறுவை சிகிச்சைக்குப் பின் நல்ல பார்வை கிடைத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குடிகார கணவனால் தாக்கப்பட்டு வீட்டைவிட்டு விரட்டப்பட்டுள்ள கிராலா கிராமத்தின் சுனிதாவின் வாழ்வாதாரம் உறுதிப்படுத்தப்படவும், கணவன் திருந்தி வந்து சேர்ந்துவாழவும்; அம்பாபானி கிராமத்தில் நடந்துகொண்டிருந்த ஆராதனையைத் தடுத்து நிறுத்திய கிராமத்தலைவர் மனம்மாற; வீடு கட்டு மானப் பணியின்போது அடிபட்டு நடக்க கஷ்டப்படுகின்ற சார்முலி கிராம சர்க்கார் விரைவில் குணம் பெற ஜெபிப்போம்.

### நேப்பாநகர்:

### ஜூபராஜ் பர்தன் & ஷீபா ஜாஸ்மின்

**துதிக்க:** ஆலய மூப்பர் கெண்ட்லால், அனில் மற்றும் ரைக்கா அவர்களின் சுகவீனத்தினால், நிறுத்தப்பட்டிருந்த பாம்லாபட் கிராமத்தில் கட்டப்பட்டுக் கொண்டிருந்த ஆலயக்கட்டுமானப்பணி தேவ கிருபையால் அவர்கள் சுகமானதால் மீண்டும் நடைபெறுகிறது. குண்டைபடா கிராமத்தில் பின்வாங்கிப் போனவர்கள் மீண்டும் ஆலயம் வர ஆம்பித்துள்ள தற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தங்கள் மகன் ராஜேஷ்க்கு கிறிஸ்தவ மணமகள் வேண்டுமென்று தேடிக்கொண்டிருக்கும் வாக்கில்பாய் நான்கிபேனின் முயற்சி கைக்கூட; தொண்டையில் எப்போதும் ஏதாவது சிக்கிக்கொண்டிருக்கும் உணர்வுடன் பேச கஷ்டப்படும் மங்கலியாபாய் நல்ல சுகம் பெற; மிஷனரி குடும்பம் நேப்பா நகர் பணித்தளத்திலிருந்து பிம்பள்நேர் பணித்தளத்திற்கு மாறிச் செல்லும்போது நல்ல வீடு கிடைக்க ஜெபிப்போம்.

### டப்ரா: சத்திகந்த் பரிச்சா & சகரிகா

**துதிக்க:** ஐந்து நபர்கள் இயேசுவைத் தங்கள் வாழ்வில் இரட்சகராக ஏற்றுக்கொண்டு அறிக்கையிட்டனர். நமது விடுதி பழைய மாணவியின் திருமணம் கிறிஸ்தவ முறைப்படி டப்ரா கிராமத்தில் சிறப்பாக நடைபெற்றது. பின்வாங்கிப் போயிருந்த ரூதம் தேக்தார் குடும்பம் மீண்டுமாக கிறிஸ்துவின் ஐக்கியத்திற்குள்ளாக தங்களை இணைத்துக்கொண்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தாய், சுல்தான்பூர், நயாகாவ் மற்றும் கிடோன்டா கிராமங்களில் விரைவில் ஞாயிறு ஆராதனைகள் துவங்கப்படவும், இங்கு கூட்டம் நடத்தச் செல்லும் நமது ஊழியர்களைத் தொந்தரவு செய்பவர்கள் மனம் மாறவும்; புதிதாக ஊழியத்தில் இணைந்துள்ள 2 சுதேச ஊழியர்கள் அர்ப்பணிப்போடு கூடிய ஊழியம் செய்ய; பிரேம்நகரில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற ஆலயக்கட்டுமானப்பணி விரைவில் முடிவடைய ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஷைலன் ஹன்ஸ்தா

### குணா: சத்தீஷ் & ஷர்மிளா

**துதிக்க:** 10 நபர்கள் கிறிஸ்துவே மெய்யான தேவன் என்று விசுவாச அறிக்கையிட்டனர். பிலோடா, சுனாவனி மற்றும் போக்லமார் கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டன. சாராயம் விற்றுக்கொண்டிருந்த கார்கி மோவ் கிராமத்தின் சாம்ராஜ் ஜாதவ் கிறிஸ்துவினால் தொடப்பட்டு சாராயம் விற்பதை விட்டு திருமுழுக்கு பெற்று கிறிஸ்துவின் சபையில் இணைந்தார். புதிதாக ஊழியத்தில் இணைந்துள்ள பனேஸ் பரேலாவிற்காக தேவனை துதிப்போம்.

**ஜெபிக்க:** உதய்பூர் மற்றும் கணேஷ் கேடா கிராமங்களைச் சேர்ந்த மணிஷா மற்றும் புல்பாய் குழந்தை செல்வங் களை தேவனிடத்திலிருந்து பெற; கடந்த சில வருடங்களாக தூக்கமின்மையால் கஷ்டப்படும் கேரிகேடா கிராமத்தின் சகோதரி மெகந்திபாய் சுகமடைய ஜெபிப்போம்.

### உதய்நகர்:
### டி. வில்சன் & ரஷ்மித்தா பரிடா

**துதிக்க:** பொலக்கால் கிராமத்தின் 8 வயது சிறுவன் கார்த்திக் 6 வருடங்களாக நடக்கவியலாமலிருந்து ஆலயம் கொண்டுவரப்பட்டு ஜெபத்தின் மூலம் நடக்க ஆரம்பித்துள்ளான். புடுக்யா, அம்பார், ராமபூரா கிராமங்களில் கிரமமாக வேதாகம வகுப்புகள் நடந்து வருகிறது. தங்ரகேடா கிராமத்தில் நடந்த வாலிபர் கூட்டத்தில் 22 வாலிபர்கள் கலந்துகொண்டு கிறிஸ்துவில் தங்களை மீண்டும் நிலைநிறுத்திக்கொண்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அவலிகேடா கிராமத்தில் தீய ஆவியின் பிடியினால் தூங்க, சாப்பிட முடியாமல் கஷ்டப்படும் சாந்திலால் விடுவிக்கப்பட; பாடக், சித்தாபூரி, ஜுனாபானி போன்ற கிராமங்களில் நடத்தப்படவிருக்கும் சுவிசேஷ பெருவிழா சிறப்பாக நடக்க; குவாடி கிராமத்தின் முன்னா நரம்பு தளர்ச்சி நோயிலிருந்து குணமடைய ஜெபிப்போம்.

### சிரியா: மகேந்திரன் & புஷ்பம்

**துதிக்க:** 8 நபர்கள் கிறிஸ்துவுக்குள் புது வாழ்வு பெற்றனர். ராஜ்குடா கிராமத்தில் சுயநினைவின்றி கீழேவிழுந்து நாடி துடிப்பெல்லாம் அடங்கிய நிலையில் நமது விசுவாசிகள் கூடி ஜெபித்ததினால் சிந்த்வோடியா மீண்டும் உயிர் பெற்றார். பாம்பு தீண்டியதால் ஏறின விஷம் பாதிக்காதபடி ஷோபா மற்றும் லால்பாய் சுகமடைந்தனர். மனைவியின் ஊக்கமான ஜெபத்தினால் ரஜேலுபாய் குடியை விட்டுவிட்டு ஆலயம் வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கபர்டாகி கிராமத்தின் பாருபாய் சுவிசேஷத்திற்கு செவிசாய்க்கவும் பிற மத குருவான அவரது மகன் மன்சுராம் அதற்கு தடையாக இருக்காதபடிக்கும்; புற்றுநோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் கார்கி கிராமத்தின் சந்துபாய் குணமடைய; தாம்கேடா கிராமத்தின் பூரிபாய் பிசாசின் பிடியிலிருந்து விடுபட; வருகின்ற அனைத்து நற்செய்தி பகிரும் நிகழ்ச்சிகளும் சிறப்பாக நடைபெற ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஐசக் ஆபேல் S.

## நிவாலி:

**சன்னமல்லப்பா & ரூபா ஏலவாகி**

**துதிக்க:** ஒருநாள் உபவாச ஜெபத்தில் 43 பேர் கலந்துகொண்டு ஊக்கமாக ஜெபித்தனர். தொலைக்காட்சி மூலம் இயேசு திரைப்படம் ஜக்குவாடா, டுங்கரான் மற்றும் ராஜ் மோஹாலி கிராமங்களில் காண்பிக்கப் பட்டது. ஆலய நிர்வாக கமிட்டி கூட்டம் சபை மூப்பர்கள் கூடி சிறப்பாக நடத்தப்பட்டது. கோட்டியாபானி ஆலயக்கட்டுமானப்பணி அருமையான முறையில் நிறைவுற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசி முன்னிபாயின் இரத்த வாந்தி நிற்க; இயேசு திரைப்படம் காண்பிக்கப்பட்ட கிராமங்களில் புதிய தொடர்பாளர்கள் கிடைக்க; கோட்டியாபாணி ஆலயப்பிரதிஷ்டை எந்த தடையுமின்றி சிறப்பாக நடைபெற; நடத்தப்படவிருக்கிற விசுவாசிகளின் ஆவிக்குரியக் கூடுகை சிறப்பாக நடைபெற ஜெபிப்போம்.

# பீஹார்

## ராணிகன்ஜ்:

**தர்மேந்தரா பரிச்சா & மதுஸ்மிதா பானி; ஆனந்தன் எம். & நிஷா**

**துதிக்க:** ஜலாகார் பகுதியில் கீழ்கண்ட புதிய தொடர்பாளர்கள் கிடைத்துள்ளனர். ரான்ஜி ரிஸ்தேவ், பவுலோ தேவி, முகேஷ், ரிஷிதேவ், குட்டிதேவி, அஜய்குமார், மனடோஷ்குமார், அன்ஜலிதேவி மற்றும் ஆராதனா குமாரி பலுவா கிராமத்தில் திரையிடப்பட்ட இயேசு படத்தை அநேக நபர்கள் ஆர்வத்துடன் பார்த்தனர். சக்கி பலுவா, மஹதூர் ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியங்கள் செய்ய தேவன் கிருபை செய்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தியாரி முஜ்னா கிராமத்திலிருந்து ஜெபிக்க அழைப்பு விடுத்துள்ள பிரியங்கா மூலமாக தேவன் இந்த கிராமத்தில் அற்புத காரியங்களைச் செய்ய; புதிதாக ஆலயம் வரும் முகேஷ் ரிஷிதேவ் குட்டி தேவிக்கு நல்லவிதமாக குழந்தை பிறக்க; அல்சர் வியாதியினால் கஷ்டப்படுகின்ற ஆஷா தேவி அறுவை சிகிச்சையின்றி குணமாக ஜெபிப்போம்.

## ஆசீர்வாதத்தைக் கொணர்ந்த விசுவாச ஜெபம்

*மகாராஷ்டிரா மாநிலம் நேப்பா நகர் பணித்தளத்தின் துக்கைதாட் கிராமத்தின் நல்ல விசுவாசி சகோதரி மணிஷா. திருமணமாகி கணவரின் பாம்லாபெட் கிராமத்திற்குச் சென்று அங்கு ஜெபவாழ்க்கையை விடாமல் கைக்கொண்டு வந்தார். கணவரையும் தன்னுடன் சேர்ந்து ஜெபிக்குமாறு பழக்கப்படுத்தினார். வீட்டிலுள்ள மற்றவர்கள், "நீ ஆராதிக்கும் இயேசு உண்மையான தெய்வம் என்றால் நம் வீட்டில் ஏன் இவ்வளவு வறுமை. நிலத்திலிருந்து ஒருபோதும் நல்ல விளைச்சல் வருவதேயில்லை. எப்போதும் வருமானத்திற்கு அதிக செலவுதான் வீட்டில் நடக்கிறது" என்று குறை சொல்ல. இதனை ஒரு சவாலாக எடுத்துக்கொண்ட மணிஷா விசுவாசத்துடன் ஜெபம் செய்ய ஆரம்பித்தார். தேவன் மகத்துவமான காரியத்தை அவர்கள் வாழ்வில் செய்தார். இந்த வருட விளைச்சல் யாரும் எதிர்பார்க்காத வகையில் நான்கு மடங்கு விளைந்து அவர்கள் குடும்பத்தினரை மட்டுமல்லாது சுற்று வட்டார மக்களையும் ஆச்சரியப்படுத்திவிட்டது. கிறிஸ்துவைப் பற்றிக் கூற நல்ல சந்தர்ப்பம் என்று நினைத்த மணிஷா கிறிஸ்துவின் செய்கைகளைப் பற்றிக் கூறி சாட்சி பகிர்ந்தார். தேவ நாமம் ஊரிலே மகிமைப்பட்டது.*




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஷைனி ஜோசப் சுரேஷ்
திருமதி. சுகந்தி சாலமோன்

## ஜார்க்கண்ட்

### சந்தால் தும்கா பிராந்தியம்:

**முன்னா மொகிந்தியர் & சுமித்தா தாஸ்**

**துதிக்க:** 29 நபர்கள் இயேசுவின் அன்பின் சீடர்களாகினர். 19 கிராமங்களில் பின்தொடர் பணியும் 23 கிராமங்களில் பெரிய அளவில் சுவிசேஷம் பகிரும் நிகழ்வும் சிறப்பாக நடைபெற்றன. இதில் சுமார் 1500 பேருக்கு சுவிசேஷ நற்செய்தி பிரதிகள் கொடுக்கப்பட்டன. 2 நாட்கள் சங்கிலித் தொடர் உபவாச ஜெபத்தில் அநேக விசுவாசிகள் கலந்துகொண்டு சிறப்பாக நடைபெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது ஊழியத்தை எதிர்க்கின்ற சோகாகினி சோரேன், நீல் முனி சோரேன், பில்முனி டுடு, பிட்டியா டுடு, பாகம் டுடு, சக்யா டுடு ஆகியோர் மனந்திரும்ப; உலகப்பிரகாரக் காரியங்களில் மூழ்கியிருக்கும் நமது விசுவாசிகளின் இளம் தலைமுறையினர் ஆலயக்காரியங்களில் நாட்டம் கொள்ளவும், நமது சபை மூப்பர்கள் அவர்களை சரியாக வழிநடத்தவும் ஜெபிப்போம்.

### பாதர்காமா:

**கிரிஷான் குமார் & சாந்திலால்**

**துதிக்க:** புதிதாக ஆலயம் வரும் ரோகன் ரவி பெரிய பேருந்து விபத்திலிருந்து சிறு காயங்களுடன் தப்பிக்க தேவன் உதவினார். சம்பாதேவிக்கு அசுத்த ஆவியின் பிடியிலிருந்து தேவன் நல்ல விடுதலையைக் கொடுத்தார். சிறுநீரக கோளாறிலிருந்து ரூபிகுமாரிக்கு தேவன் நல்ல சுகத்தை கொடுத்தார். தெலோலியா, பஹ்மார மற்றும் தொபரானி கிராமங்களில் இயேசு திரைப் படம் திரையிடப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நற்செய்திக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் நகேஷ்வர் மோசி, துர்காதாஸ், உமேஸ்தாஸ், பிரதீப் தாஸ் ஆகியோர் மனந்திரும்ப; புதிதாக விசுவாசத்திற்குள் வந்துள்ள பூணம்தேவிக்கு தேவன் குழந்தை பாக்கியம் அருள; சிக்கல்ஹாரா கிராம சபையில் நிலவும் குழப்பம் நீங்கி ஒற்றுமை ஏற்பட; சரீர பலவீனங்களினால் துயரப்படுகின்ற ரூபி தேவி, சம்பா தேவி, முன்னி தேவி, போலோ மெஹ்ரா ஆகியோர் குணமடைய ஜெபிப்போம்.

## பலவீனத்தில் பலம் தந்து தாங்கும் கர்த்தர்

*மத்தியப்பிரதேசம் கர்கோன் மாவட்டத்திலுள்ள சிராயா பணித்தளத்தின் 25 வயது நிரம்பிய சாவித்ரி நல்ல விசுவாசி. நிறை மாத கர்ப்பிணியான இவர் பிள்ளை பேற்றை எதிர்கொண்டிருந்த வேளையில் அவசர வேலையினிமித்தம் தன் ஊரைவிட்டு பக்கத்து ஊருக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை வந்தது. வாகன வசதி ஒன்றுமில்லாத நேரமாதலால் ஜெபித்துவிட்டு நடக்க ஆரம்பித்தார். சோதனையான நேரம். வேகமாக வந்த இருசக்கர வாகனத்தினால் மோதப்பட்டு கீழே விழுந்து, அந்த வாகனத்தின் சக்கரம் உடல்மீது ஏறிச் சென்ற காரணத்தினால் அங்கேயே குழந்தையைப் பெற்றெடுத்துவிட்டார். விபத்தை கண்ணுற்ற சிலர் அவசரமாக அவரை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர். கேள்விப்பட்ட விசுவாசிகள் ஜெபத்திலே தரித்திருக்கவே, தாயும் சேயும் நலமாக இருப்பதாக செய்தி வந்தது. பலவீன நேரத்தில் தன் பிள்ளையைத் தாங்கின கர்த்தருக்கே மகிமை!*




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. தெபொரா ரோஸ்லின் அருள்ராஜ்

### ஹன்ஸ்டிகா: செந்தில் குமார் தீமோத்தேயு & முத்துச்செல்வி

**துதிக்க:** 10 நபர்கள் புதிதாக கிறிஸ்துவின் மந்தைக்குள் இணைந்துள்ளனர். ராஜ்தகா என்கிற கிராமத்தில் தேவன் திறந்த வாசலை தந்திருக்கிறார். சென்ற வருடம் தங்கள் விளை நிலங்களில் சரியான விளைச்சலின்றி கஷ்டப்பட்ட மக்கள், இந்த வருடம் நல்ல விளைச்சலைக் கண்டதால் அறுவடைப் பண்டிகையை சிறப்பாகக் கொண்டாடினதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜல்பே கிராமத்தில் நமது சபை மூப்பர் பிரதான் மராண்டியை ஆரம்பத்திலிருந்தே எதிர்த்து வந்த பக்கத்துவீட்டுக்காரர் திடீரென இறந்துவிடவே அவரது மனைவியும் இரு சிறு பிள்ளைகளும் ஆதரவற்ற சூழ்நிலையில், நமது மூப்பர் கவனித்து வருகிறார். மக்டா கிராமத்தில் புதிதாக விசுவாசத்திற்குள் வந்துள்ள 6 குடும்பங்களின் நோய்கள் நீங்க; சக்காரா கிராமத்தில் காணப்படுகின்ற எதிர்ப்புகள் மறைய ஜெபிப்போம்.

### சிக்காரிபாடா: சுகாந்தோ குமார் சிங் & ராணி லாசரஸ்

**துதிக்க:** 28 பேர் இயேசுவே மெய்யான தேவனென்று உணர்ந்து, தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டனர். குகிஹா கிராமத்தின் சகோதரி பிட்யா டுடு பக்கவாதத்திலிருந்து விடுதலைப் பெற்றதின் மூலம், முழுக்குடும்பமும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர். 2 இடங்களில் சபை மூப்பர்களுக்கு ஆத்தும ஆதாயப்பயிற்சி கொடுக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மேற்கு வங்க மாநில பகுதிகளில் ஊழியம் விரிவடைய, அர்ப்பணமுள்ள ஊழியர்கள் கிடைக்க; விசுவாசிகளை குழப்பமான உபதேசங்களினால் சோர்வடைய செய்வோர் தங்கள் தவறை திருத்திக்கொள்ள; பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் ரமேஷ் கிஸ்கு, நானி டுடு ஆகியோர் குணமடைய; பின்மாற்றமடைந்திருக்கும் விசுவாசிகள் மீண்டும் கிறிஸ்துவின் ஐக்கியத்திற்குள் வர ஜெபிப்போம்.

### ஜகன்நாத்பூர்: பாசுதேவ் மால்தோ & பசந்தி, எஸ். ஆபிரகாம் & ஆலிஸ் ஷீபா

**துதிக்க:** நான்கு நபர்கள் தங்கள் வாழ்வில் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அறிக்கையிட்டனர். 6 மாதமாக பக்க வாதத்தினால் பாதிக்கப்பட்டு, படுக்கையிலிருந்த 12 வயது சிறுவன் பிரகாஷ் ஜெபத்தின் வல்லமையால் படிப்படியாக குணமடைந்து வருகிறான். பூருஜல்டிகா கிராமத்தில் எதிர்ப்புகள் மத்தியிலும் உறுதியாக நிற்கும் 2 விதவைகளுக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்து மீதுள்ள விசுவாசத்தினால் முக்டுகேராய்யை ஊர் கிணற்றில் தண்ணீர் எடுக்க தடைசெய்துள்ள தரேயா கிராமத்தின் தலைவர்கள் மனம்மாற; புக்ரிபை மற்றும் பாரஜாம்டா பகுதிகளில் நடத்தப்படவிருக்கும் பெரிய அளவிலான நற்செய்தி அறிவிக்கும் கூட்டங்கள் வெற்றிகரமாக நடந்தேற; தாக்கூரா கிராமத்தில் சுவிசேஷத்திற்கு காணப்படும் எதிர்ப்புகள் மறைய ஜெபிப்போம்.




**லிட்டிபாடா: எபினேசர் சாமுவேல் & மேபல் ஃபிளாரன்ஸ்**

**துதிக்க:** 17 பேர் கிறிஸ்துவை அறிந்துகொண்டு, அறிக்கையிட்டனர். ஜோர்டிகா கிராமத்தில் திடீரென பரவிய கொள்ளைநோயால் அநேகர் இறந்த நிலையில், விசுவாசிகள் கூடி ஜெபித்ததின் விளைவாக நோய் மட்டுபட்டுள்ளது. பிப்ரா கிராமத்தின் ஹோப்போன்மய் நடக்க முடியாமலிருந்த நிலையில் விசுவாசத்திற்குள் வந்து சுகம் பெற்று, வீட்டில் சாட்சிக்கூட்டம் வைத்து கிராமத்தினருக்குச் சாட்சிக் கூறி, தேவனை மகிமைப்படுத்தினதற்காக துதிப்போம்.

**ஜெபிக்க:** ஆவிக்குரிய வாழ்வில் சோர்ந்து போயிருக்கும் சில சபை மூப்பர்களை தேவன் உற்சாகப்படுத்த; பெரிய அளவில் நடத்தவிருக்கும் வெளிப்புற நற்செய்தி அறிவிக்கும் விழா சிறப்பாக நடைபெற்று, அநேகர் தேவனை அறிந்துகொள்ள; நடத்தவிருக்கும் கிறிஸ்துவை அறிவிக்கும் நிகழ்ச்சி, வாலிபர் முகாம், பெண்கள் சிறப்புக் கூடுகை ஆகியவை சிறப்பாக நடந்தேற ஜெபிப்போம்.

**மண்ட்ரோ & பகையா மாணவர் விடுதி: கென்னடி சிங் & ஹயோஜம் லின்தோய்பி**

**துதிக்க:** 30 நபர்கள் கிறிஸ்துவின்மீதுள்ள தங்கள் விசுவாசத்தை வெளிப்படையாக அறிக்கை செய்தனர். பீஹார் மாநில எல்லையிலுள்ள பிர்பான்டி கிராம மக்கள் சுவிசேஷத்தை அறிவிக்க தங்கள் கிராமத்திற்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளனர். 10 கிராமங்களில் இயேசு திரைப்படம் திரையிட தேவன் உதவி செய்தார். பக்கவாதத்தினால் நடக்க முடியாமலிருந்த தலாமய் பஸ்ரா மற்றும் மார்கஸ் முர்மு ஜெபத்திற்குப் பிறகு மெதுவாக நடக்க ஆரம்பித்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பிர்பான்டி கிராமத்தில் அநேகர் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள; சுவிசேஷத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் பாபுராம் ஹன்ஸ்தக் மற்றும் போனிபஸ் கிஸ்கு மனந்திரும்ப; அனைத்து ஆலயங்களிலும் ஞாயிறு சிறுவர் வேதாகம வகுப்புகள் நடத்த வாலிப பெண்கள், ஆண்கள் முன்வர; ஜோஹன் மால்தோ மற்றும் லால் கிஷோரின் காசநோய், சுசீலா மால்தோவின் சிறுநீரகக்கோளாறு சுகமாக ஜெபிப்போம்.

**அமரபாடா: வியாசு பாபு & சௌந்தர்ய ரேகா**

**துதிக்க:** 48 பேர் கிறிஸ்துவை வெளிப்படையாக அறிக்கையிட்டு அவரின் மந்தையில் இணைந்தனர். மாசில் முர்முவின் ஜெபத்தைக் கேட்டு அநேக வருடங்களுக்குப்பின் தேவன் குழந்தை பாக்கியம் அருளிச்செய்தார். எல்லா சபைகளிலும் அறுப்பின் பண்டிகை சிறப்பாக நடந்தேற தேவன் வழிநடத்தினார். மார்த்தா மற்றும் பபூதன் கிஸ்குவை பாம்புகடியின் விஷத்திலிருந்து தேவன் காப்பாற்றினதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சக்கரி கிராமத்தின் புதிய தொடர்பாளர் மோத்திலால் முர்முவின் சுகவீனம் குணமடைய; கலிதோஹா கிராமத்தின் புதிய தொடர்பாளர் ஜோஹன் முர்முவிற்கு மந்திரவாதிகளின் மீதுள்ள பயம் அகல; ஹோப்னி முர்முவின் கர்ப்பப்பையில் வளர்கின்ற கட்டி கரைந்து போக; தாராபூர் சமுதாய வளர்ச்சி மையக்கட்டிட வேலைகள் விரைவில் முடிவடைய ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. விஜயா ஜாய்சன்

## கங்குபாடா சிறுமியர் விடுதி:

### ஈவ்லின் பாக்கியா, சுஷாஜித் சேனாபதி

**துதிக்க:** ஜென்நெக்ஸ்ட் என்கிற சிறுவர் முகாமில் 140 மாணவர்கள் கலந்துகொண்டு தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றனர். இத்வாரி மாணவியின் காசநோய் மட்டுப் படுத்தப்பட்டுள்ளது. மாணவர் கூடுகையில் சிறப்பாக தங்கள் தாலந்துகளை மாணவர்கள் வெளிப்படுத்தினர். அநேக வசனங்களை மனப்பாடமாக ஒப்புவிக்க தேவன் கிருபை செய்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வலிப்புநோயிக்கு சிகிச்சை எடுத்துவரும் பப்லி தாமஸ் பூரண குண மடைய; தாயினை இழந்து தவிக்கும் 8-வது படிக்கும் கிறிஸ்டி ஆறுதலடைய; விடுதிக்கு வருகின்ற கிராம சாலை மிகவும் மோசமாக உள்ளது, இது செப்பனிடப்பட; கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட மாணவ மாணவியர்கள் வாழ்க்கையில் தேவன் நல்ல மாற்றத்தை உருவாக்க; பாடங்கள் புரியக்கூடிய ஞானம், அறிவு, விவேகம் தேவன் அருள ஜெபிப்போம்.

## லால்மட்டியா:

### அமரேந்திரன் & சுவேதா

**துதிக்க:** கோர்கண்ட் கிராமத்தில் மக்களை திசைதிருப்பி பணம் சம்பாதித்துக் கொண்டிருந்த குரு ஒருவர் பணத்துடன் ஓடிவிடவே நமது ஊழியத்திற்கு நிலவி வந்த தடை நீங்கியது. தேவ கிருபையால் சம்பூர் கிராமத்தில் இயேசு திரைப்படம் திரையிட்டபோது, எதிர்ப்பு தெரிவித்தவர்களை ஊரார் தடுத்து அதை அவர்கள் முழுமையாக பார்க்கும்படி செய்தனர். ராம்கோல் கிராமத்தி லுள்ள பாப்லுபாயின் தந்தையினுடைய கண் அறுவை சிகிச்சை பணமின்றி செய்திட கிருபைசெய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தலாபாபு மற்றும் எலிசபெத் முர்மு ஆகியோர் காசநோயின் தாக்கத்திலிருந்து சுகமாக; சவ்வா கிராமத்தில் ஊழியத்தை எதிர்க்கும் சப்பால் முர்மு மனந்திரும்ப; பக்கவாதநோயினால் கஷ்டப்படுகிற தலாபஸ்கி மற்றும் பாபுஜி ஹன்ஸ்தா சுக மடைய; சிசுகுனா கிராம மக்கள் சுவிசேஷத் திற்கு செவிமடுக்க; திறக்க; பல்கோமி கிராமத்தில் ஆலயம் கட்ட நிலம் கிடைக்க ஜெபிப்போம்.

## கடின மனதைக் கரைத்த கர்த்தர்

*மகாராஷ்டிரா மாநிலம் தலாசரி பணித்தளத்திலுள்ள டொங்கிரிபாடா கிராமத்தில் விசுவாசிகளின் இரவு ஜெபக்கூட்டம் வழக்கம்போல அன்றும் சிறப்பாக நடந்துகொண்டிருந்தது. திடீரென ஜெபக்கூட்டம் நடந்துகொண்டிருந்த வீட்டினுள் அந்த பகுதி மதத்தலைவர் சந்தோஷ் தலைமையில் புகுந்த ஒரு கூட்டத்தினர் விசுவாசிகள் ஜெபிப்பதை உடனே நிறுத்துமாறு கத்தி கூச்சல்போட்டதுமன்றி அவர்களை அடிக்கப்பாய்ந்தனர். பயந்துபோன நமது விசுவாசிகள் உடனே ஜெபத்தை நிறுத்தி விட்டனர். இனிமேல் இந்த கிராமத்தில் கிறிஸ்தவ கூட்டம் நடத்தினால் நடப்பதே வேறு என்று மிரட்டல் விட்ட அந்த கூட்டம் அங்கிருந்து ஆரவாரத்துடன் கிளம்பியது. செய்வதறியாமல் திகைத்துப்போன நமது விசுவாசிகள் உடனே அவர்களின் பெயர்களைச் சொல்லி ஜெபிக்க உறுதி எடுத்துக்கொண்டு கலைந்து சென்றனர். அதன்படி அனைவரும் அவரவர் வீடுகளில் விசேஷித்த ஜெபம் செய்தனர். கர்த்தர் செயல்படும் விதம் அழகே அழகு 3 நாட்களுக்குப் பின்பு அந்த சந்தோஷ் நமது விசுவாசியின் வீட்டுக்குச் சென்று ஜெபக்கூட்டத்தை நிறுத்தினதற்கு மன்னிப்பு கேட்டுக்கொண்டதுமன்றி இனி தடையில்லாமல் நடத்த முழு ஒத்துழைப்பு நல்குவதாகவும் வாக்கு கொடுத்திருக்கிறார். தேவனுக்கே மகிமை.*




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஐசக் தனசிங் R.

## ராஜ்மஹால் ஆரம்ப பள்ளிகள் & சிறுமியர் விடுதி:

### டிங்கு ஸெமே & இலா ஸெமே

**துதிக்க:** 6 நாட்கள் நடத்தப்பட்ட விடுமுறை வேதாகம வகுப்புகளில் அநேக மாணவர்கள் கலந்துகொண்டு வேதத்தை அதிகமாக அறிந்துகொண்டனர். மிஷன் வீடு, சமையல் அறை, பெரிய தங்கும் அறை ஆகியவற்றை பராமரிப்புச் செய்ய போதுமான அளவு நிதியை தேவன் தந்தருளினார். மூளை காசநோயினால் பாதிக்கப்பட்டு கடந்த மாதம் வீட்டிலிருந்து சிகிச்சைப் பெற்று வந்த மரியம் முர்மு சற்று தேறின உடல் நலத்துடன் விடுதி திரும்பியுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவர்களின் பெற்றோர் வாழ்வாதாரத் திற்காக பிற மாநிலங்களுக்கு வேலை தேடிச் செல்வதால் பிள்ளைகளின் படிப்பு பாதிக்கப்படுகிறது. உள்ளூர் ஆசிரியர்கள் தங்களது படிப்பு தகுதியினை அரசாங் கத்தின் சட்டங்களுக்கேற்ப உயர்த்திக் கொள்ள; கரேக்கபு, டிக்ரா மையங்களில் கட்டுமானப் பணிகள் விரைவில் முடிவடைய ஜெபிப்போம்.

# மேற்கு வங்காளம்

### இட்டாஹறார்: அஸ்தபான் ஆதித்ய குமார் லிம்மா & மனினி பெபர்த்தா

**துதிக்க:** விசுவாசிகளின் நிலங்களில் நல்ல அறுவடையை தேவன் கட்டளையிட்டார். பன்போல் ஆலயக்கட்டுமானப்பணி எந்தவித தடையுமின்றி நடைபெற்று முடிந்துள்ளது. பிரோபாகத் கிராமத்தில் நடந்த சபை மூப்பர் எழுப்புதல் புத்துணர்ச்சி முகாமில் அநேகர் கலந்துகொண்டு தேவனோடுள்ள தங்கள் ஐக்கியத்தை புதுப்பித்துக்கொண்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுஜன் ஹெம்ப்ரோம் குடும்பத்திற்கு தேவன் குழந்தை பாக்கியத்தை அருள; பிமோலா டுடுவுக்கு சுகப்பிரசவம் நடந்தேற; பிரசவத்திற்குப்பிறகு மிகவும் பலவீன மாகவுள்ள முர்மு நல்ல சரீர சுகம் பெற; வருகின்ற மாதம் நடக்கயிருக்கின்ற ஆலயப்பிரதிஷ்டை மற்றும் பிற நிகழ்ச்சிகள் சிறப்பாக நடந்தேற ஜெபிப்போம்.

### ஜாம்போனி:

### இப்ராயிம் மாலி & புரோசன்சிதா

**துதிக்க:** நஸ்னகுடி பகுதியில் முடி இனமக்கள் மத்தியில் முதன்முறையாக சுவிசேஷம் சொல்ல தேவன் கிருபை அருளினார். முசாடா, நஸ்னகுடி, பிரகுஸாலே, சாக்குலியா கிராமங்களில் நற்செய்தி கூறி சுவிசேஷக் கைப்பிரதிகள் விநியோகிக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ராம்நகரில் மாடல் சோரேன் என்கிற குடிகார நபர் மூலமாக நமது விசுவாசிகள் சந்தித்து வரும் பிரச்சினைகள் நீங்க; புதிதாக கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டுள்ள காக்டுவலி கிராமத்தின் கனுராம் பஷ்கி விசுவாசத்தில் உறுதிப்பட; ஜாம்போனி கிராம விசுவாசிகள் தங்கள் உறவினர்களுக்கு கிறிஸ்துவை அறிமுகம் செய்து வைக்க ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. செலினா மராண்டி ரபீந்திர முர்மு

### பாலூர்காட்: ஆர். கிங்ஸ்லி லிவிங்ஸ்டன் & டெல்ஃபின்

**துதிக்க:** இந்தப் பணித்தளத்தை புதிதாக பொறுப்பெடுக்க தேவன் கிருபை செய்தார். அனைத்து சபைகளிலும் அறுப்பின் பண்டிகை அனுசரிக்க தேவன் உதவினார். 3 கிராமங்களில் வெளிப்புற நற்செய்தி கூட்டங்கள் நடத்தப்பட்டு 20 குடும்பங்கள் தனித்தனியாக சந்திக்கப்பட்டன. சபை மூப்பர்கள் கூடுகை நடத்தப்பட்டு, பணித்தளத்தின் ஆவிக்குரிய வளர்ச்சிப் பற்றி விவாதிக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டும் ரன்ஜித் முர்மு, பரோஸ் முர்மு, மிலோடா சோரேன், பாபி ஹெம்ரோம், மற்றும் சந்தோஷ் முர்மு இன்னும் அதிகமாக தேவனை பற்றி அறிந்து கொள்ள; பணித்தளத்திலுள்ள வாலிபர்கள் சாட்சியுள்ள வாழ்வு வாழ; நடத்த தி ட்டமிடப்பட்டிருக்கும் வாலிபர், பெண்கள், மூப்பர் கூடுகைகள் சிறப்பாக நடந்தேற ஜெபிப்போம்.

## அஸோம்

### கோகாமுக்:

### பிரவீன் தாஸ் & மார்கிரெட்

**துதிக்க:** ஏழு நபர்கள் கிறிஸ்துவின் அன்பினை அறிந்து அவரின் ஐக்கியத்திற்குள்ளாக வந்துள்ளனர். ஹட்டிமோரா, காமந்சபாரி மற்றும் ரகுசாபாரி கிராமங்களில் காண்பிக்கப்பட்ட இயேசு திரைப் படத்தை சுமார் 725 பேர் கண்டு, அதில் அநேக நபர்கள் நற்செய்தி பிரதிகள் வாங்கிச் சென்றனர். 10 நபர்களுக்கு தனியாக ஜெபித்து நற்செய்தி கூறப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜன்முனி பெகுவின் கிறிஸ்தவ விசுவாசத்தினிமித்தம் கணவன் வெளி மாநிலத்திற்கு வேலைக்குச் சென்றிருந்த வேளையில் ஒரு வயது குழந்தையுடன் அவரை வீட்டை விட்டு மாமியார் துரத்தி விட்டார். அவரது கணவரும் திருமுழுக்கு பெற்ற நிலையில் தற்போது தனியாக வீடு எடுத்து தங்கி வருகின்றனர். அவர்களது பாதுகாப்பிற்காக, மாமியாரின் மனமாறுதலுக்காக; சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டும் மொய்வாரி நோரா, பூஜா நோரா, தேவிகுமாரி, லோக்கி நோரா, ராஜி நோரா, பிந்த்ராம், கிஷோர் டைடு, திபு ஆகியோர் விசுவாசத்தில் பலப்பட ஜெபிப்போம்.

### கோஹ்பூர்: நாத்தான் குமார் பெபர்த்தா & நிருபோமா

**துதிக்க:** நான்கு கிராமங்களில் இயேசு திரைப்படம் திரையிடப்பட்டதை அநேகர் கண்டுகளித்தனர். அசுத்த ஆவியின் தாக்குதலுக்குள்ளாகி உடல்வலி அதிகமாக மற்றும் பிற உபாதைகளால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த சகோதரி பர்காமோட்டி ஊழியர்கள் சென்று ஜெபித்தபோது பூரண குணமடைந்தார். விசுவாசிகளின் ஆத்தும எழுச்சிக்கென நடத்தப்பட்ட ஒருநாள் முகாம் சிறப்பாக நடைபெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ரான்காமுரி கிராமத்தில் விசுவாசத்திற்குள் புதிதாக வந்துள்ள மங்கள்குமார் குடும்பம் விரைவில் கிறிஸ்துவை அறிக்கையிட; நமது விசுவாசியின் மகன் ஆகாஷ் கெட்ட நண்பர்களின் சகவாசகத்தை விட்டொழித்து படிப்பில் கவனம் செலுத்த; விசுவாசத்தில் பின்வாங்கியுள்ள மற்றும் எப்போதாவது ஆலயம் வரும் விசுவாசிகள் கிரமமாக ஆலயம் வந்து ஆராதிக்க ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. பிரேமலதா டேனியல் தாமஸ்
செல்வி. சாந்தி முர்மு

## சத்தீஸ்கட்

### பையாதன் - 2:

**தாங் சின் லியான் & உங் தியான்சிங்**

**துதிக்க:** சிராகுடா கிராமத்தில் மரணப் படுக்கையிலிருந்த குடாதியினை தேவன் அற்புதமாக குணமாக்கினார். பின்தொடர் ஊழியமாக அநேக கிராமங்களுக்குச் சென்று 17 புதிய ஏற்பாடுகளையும் அநேக நற்செய்தி கைப்பிரதிகளையும் விநியோகிக்க தேவன் உதவிசெய்தார். குழந்தைபேற்றின் சிக்கலான நேரத்தில் ஜெபத்தின் விளைவாக தாதாபாரா கிராமத்தின் சார்மிலி அழகான குழந்தையைப் பெற்றெடுத்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பேச, நடக்கயியலாமலிருக்கும் பட்சாவா கிராமத்தின் சிறுவன் கௌரவ் பூரண குணமடைய; பிலாஸ்பூரில் செவிலியர் படிப்பு படித்துக்கொண்டிருக்கும் அங்கிதா சிறந்த முறையில் தேர்வில் வெற்றி பெற; நமது சுதேச ஊழியர்கள் நல்ல உடல் நலத்துடன் ஊழியம் செய்ய ஜெபிப்போம்.

## ஒடிசா

### உத்கல் பிராந்தியம்:

**கணேஷ் & சுமதி**

**துதிக்க:** பிராந்திய அளவில் நடத்தப்பட்ட வாலிபர்களுக்கான கூடுகையில் சுமார் 900 இளம் வாலிபர்கள் கலந்துகொண்டு அதில் 84 பேர் தங்களை ஊழியம் செய்ய அர்ப்பணித்துள்ளனர். தக்கோபானி மற்றும் கலிகாபிரசாத் கிராம ஆலயங்கள் தேவநாம மகிமைக்கென பிரதிஷ்டை செய்யப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜோல்திகாய் கிராமத்தில் ஜெபித்துக்கொண்டிருந்த விதவைகள் சானாய் சின்கு மற்றும் சுனா சின்கு அவரது மகள் ராதை சின்கு மூவரையும் கிறிஸ்தவ எதிர்ப்பு குழுவொன்று வீடு புகுந்து தாக்கி விட்டு ஓடி விட்டது. தற்போது மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் அவர்கள் சுகம் பெறவும், காவல்துறை சரியான நடவடிக்கை எடுக்கவும்; பரதேவ்டா, சொக்காதாரா மற்றும் மம்லா போசி கிராமங்களில் நடைபெற்று வரும் ஆலயக்கட்டுமானப் பணிகள் சீக்கிரம் முடிக்கப்பட ஜெபிப்போம்.

## கெஞ்சும் ஜெபம் வேண்டி

*ஜார்க்கண்ட் மாநிலம் தும்கா மாவட்டம் ஹன்ஸ்டிகா பணித்தளத்திலுள்ள சர்காரா கிராமத்தில் கிறிஸ்துவை விசுவாச அறிக்கையிட்ட 6 குடும்பங்கள் சிறு கூட்டமாக தேவனை ஆராதித்து வருகின்றனர். இந்த கிராமத்தில் ஆரம்பத்திலிருந்தே எதிர்ப்புகளை சந்திந்து வந்த விசுவாசிகள், சபை விசுவாசிகளின் வீடுகளுக்குள் வலுகட்டாயமாக புகுந்து பூஜை புனஸ்காரங்கள் செய்வது, ஹோமம் வளர்த்து மந்திரங்கள் ஓதுவது என்று அடாவடி காரியங்களில் எதிர்ப்பாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். காரணமின்றி விசுவாசிகளின் குடும்பங்களுக்கு 25,000/-, 50,000/- என்று அபராதம் விதிப்பது என்று மிரட்டி வருகின்றனர். அதனால் வீட்டின் தலைவர் மரித்த நிலையில் மூப்பரின் குடும்பம் மீண்டும் பழைய விசுவாசத்திற்கே திரும்பிவிட்டனர். கிறிஸ்துவை அறிக்கையிட தயாராக இருந்த சில குடும்பங்கள் பயத்தினால் பின்வாங்கி விட்டனர். சர்காரா கிராமத்தில் ஜீவனுள்ள தேவன் ஒரு அற்புதம் செய்யவும் நமது விசுவாசிகள் எதிர்ப்புகளை ஜெபத்தினால் மேற்கொள்ளவும் ஜெபிப்போம்.*




### கியோன்ஜர்:

**பிரத்யூஷ் நாயக் & மரிதாய் லியோனா**

**துதிக்க:** 3 நபர்கள் கிறிஸ்துவே தெய்வம் என்று அறிக்கையிட்டனர். விசுவாசிகளுக்கான புத்துணர்ச்சி முகாமும், மூப்பர்களுக்கு ஆத்தும ஆதாயப் பயிற்சி முகாமும் நடைபெற்றன. மனப்பிறழ்வினால் துன்புற்ற ராஜு ஹெம்ரோம் குடும்பத்தாரின் தொடர் ஜெபத்தின் மூலம் பூரண குணமடைந்த தற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஊழியங்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கின்ற நவோகாவ் கிராமத்தின் ஜத்ரு மற்றும் பாம்ரே கிராமத்தின் பெல்லா சம்யா மனம்மாறி தேவனை ஏற்றுக்கொள்ள; சுந்தர்காட் பகுதியில் நமது ஊழியங்கள் விரிவடைய; ஆலயக்கட்டு மானப் பணிகள் நடைபெறுகின்ற கடம்தீத், மம்லாபோசி மற்றும் பாரதெப்தா கிராமங்களில் பணிகள் சிறப்பாகவும் விரைவாகவும் நடைபெற ஜெபிப்போம்.

### ராய்ரங்பூர்:

**குணா சந்திர பாய்க் & கிருட்டாஞ்சலி பாய்க்**

**துதிக்க:** 8 பேர் கிறிஸ்துவின் அன்பினை ருசித்து அவருடன் ஐக்கியத்தில் இணைந்தனர். கோபிநாத்பூரில் சபை மூப்பர்கள் பயிற்சி முகாம் சிறப்பாக நடைபெற்றது. தபாபானி, நிரன்ஜன், ரமா பஹாடி, லஹகானி கிராமங்களில் தலா ஒரு குடும்பம் புதிதாக விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். லக்மிபூசி, கோபிநாத்பூர் கிராமங்களில் நடத்தப்பட்ட விசுவாசிகளின் ஒருநாள் விசேஷக் கூடுகை சிறப்பாக நடைபெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குஞ்பால் மற்றும் சுனாமாரா கிராமங்களில் விசுவாசிகளுக்கும் மற்ற கிராமத்தினருக்குமிடையில் நிலவும் மனஸ் தாபங்கள் முடிவுக்கு வர; குன்டுருயா, படுக்காசஹி கிராமங்களில் விசுவாசத்தில் பின்வாங்கியவர்கள் ஆராதனைக்கு இடையூறு விளைவிப்பது நிறுத்தப்பட; மனநலம் பாதிக்கப்பட்டுள்ள அரசு மற்றும் பானா விரைவில் பூரண குணமடைய ஜெபிப்போம்.

### ரிமுலி: சங்கர் பி. & ஜெலின்

**துதிக்க:** பாம்டியா கிராமத்தில் புதிதாக ஞாயிறு ஆராதனை துவங்கப்பட தேவன் கிருபை செய்தார். சுல்யாசஹி கிராமத்தில் இரவுக்கூட்டம் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நொய்பங்கா மற்றும் ஜமத்ரா கிராமங்களில் நடத்தப்பட்ட சிறுவர் முகாமில் 170 சிறுவர், சிறுமியர் கலந்துகொண்டனர். ஜமுதி கிராமத்தில் ஆலயம் கட்ட உள்ளூர் நிர்வாகம் அனுமதி வழங்கியுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அர்சலா, நெய்பங்கா, கொஞ்கனா மற்றும் பாம்டியா கிராமங் களில் நடைபெற்று வரும் ஆலயக்கட்டு மானப் பணிகள் விரைவில் முடிவடைய; நடக்கவிருக்கும் கிறஸ்துவை அறிக்கை யிடும் நிகழ்ச்சி தடையின்றி நடந்தேற; ரிமுலி பணித்தளத்தில் அனைத்து விசுவாசிகளையும் ஒருங்கிணைத்து நடத்த திட்டமிட்டிருக்கும் பெரிய கூடுகை குறிப்பிட்ட சமயத்தில் சிறப்பாக நடந்தேற ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. மேத்யூ K.
திரு. குமார் V.

### ஜஷிப்பூர்:

**சாமுவேல் ஜே. & ஹவிலா பரமானந்த், அரவிந்த் குமார் & ஹெலன் மரியம், சுரேஷ் மால்தோ**

**துதிக்க:** 6 பேர் கிறிஸ்துவின் அன்பினை ருசித்து, அறிக்கையிட்டனர். போரக்மாடா கிராமத்தின் சாந்தி மார்டி கடந்த நான்கு வருடங்களாக பிசாசு பிடித்து, உடல் நலம் குன்றிய நிலையிலிருந்த அப்பெண்ணை ஒரு மந்திரவாதி அவருடைய மகனுக்கு திருமணம் செய்துவைத்து பிசாசை விரட்ட தினமும் பூஜைகள் செய்துவந்தார். பலனில்லாமல் போகவே நமது ஆலயத்திற்கு வந்து கதறி அழுதுவிட்டு சென்ற நிலையில், சென்னை சைதா பேட்டையிலிருந்து வந்திருந்த ஜெபக் குழுத்தலைவர்களுடன் இணைந்து நமது விசுவாசிகள் ஜெபிக்கவே அந்த பெண் பிசாசின்பிடியிலிருந்து விடுபட்டார். நீண்ட நாட்களாக சுகவீனமாக இருந்த காசிராம் ஹோ அவரது தகப்பனார் மந்திவாதி என்பதால் பூசைகள் செய்து பார்த்தும் பிரயோஜனம் இல்லாமல், நமது காலிக்கபிரசாத் கிராம ஆலயத்திற்கு வந்து ஜெபிக்கவே தேவன் அவரை குணமாக்கினதற்காக கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டும் கோக்லா சஹி சண்டிபூட்டி, குருபாரிபூர்டி, மனோ சோய் குடும்பங்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள; குலியா தாரா கிராமத்தில் காணப்படும் எதிர்ப்புகள் மறையவும் இங்குள்ள விசுவாசிகள் ஜெப வாழ்க்கையில் பலப்படவும், கன்டியோ மாரா கிராமத்தில் நிகழ்கின்ற மர்ம மரணங்கள் தவிர்க்கப்பட; சிம்லிபால் கிராம பகுதிகளில் காட்டு யானைகளின் தாக்குதலிலிருந்து விசுவாசிகளும் அவர்தம் விளைநிலங்களும் பாது காக்கப்படவும் ஜெபிப்போம்.

## குஜராத்

### அஹ்வா:

**விக்னேஷ்வரன் & ஏஞ்சலின் எம்.**

**துதிக்க:** 17 பேர் இயேசுகிறிஸ்துவே மெய்யான தேவன் என்று கண்டு விசுவாச அறிக்கையிட்டனர். மிஷனரி குடும்பமாக இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது வழியில் படம் எடுத்து ஆடிய கொடிய விஷமுள்ள பாம்பிடமிருந்து காப்பாற்றப்பட்டனர். தும்கல் கிராம அமிஷாபேன் இழந்து போன கண் பார்வையை ஜெபத்தின் மூலம் மீண்டும் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மோட்டாசரியா கிராமத்தில் புதிதாக விசுவாசத்திற்குள் வந்துள்ள கோவிந்த்பாயின் உடலில் காணப் படுகின்ற கட்டிகள் மறைய; டுங்கர்டா கிராமத்தில் விசுவாசிகள் மகேஷ்பாய் மற்றும் கலாபேன் இவர்களிடையே காணப்படுகின்ற நிலப்பிரச்சினை சுமூகமாக முடிய ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. நியாங் ஜங்கய் தௌங் கான் காப்

## மோஸ்தா:

### பால்ராஜ் & கோயில்புஷ்பம்

**துதிக்க:** 6 பேர் இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்து உறுதிப்படுத்தினர். திடீரென கண் பார்வை தெரியாமல் கஷ்டப்பட்ட புல்சர் கிராமத்தின் திலீப்பாய் ஜெபம் செய்து தனது பார்வையை திரும்பப் பெற்றார். விசுவாசி சாந்திலால் தனது மனைவி மற்றும் மகளுடன் இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருக்கும் வேளையில் நேரிட்ட விபத்தில் பெரிய விதத்தில் காயம் படாமல் தேவன் பாதுகாத்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கண்ணின் நரம்பு பாதிக்கப்பட்டு பார்வை தெரியாமல் இருக்கும் 2 வயது ரியான்ஸ்பாய் தனது பார்வையை பெற; நல்ல வேலைக்கு முயற்சி செய்துகொண்டிருக்கும் ஹன்ஸ்தா மற்றும் நிமிஷாபேனுக்கு நல்ல வேலை கிடைக்க; ஐந்து வருடங்களாக தீராத தலைவலியினால் அவதியுறும் லீலாபேன் சுகம் பெற ஜெபிப்போம்.

## சொரம்பா:

### புஷ்பராஜ் & ஜோதி நிர்மலா

**துதிக்க:** 12 பேர் கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக அறிக்கையிட்டனர். வாலிபர்களுக்கென நடத்தப்பட்ட முகாமில் 22 பேர் கலந்துகொண்டு தங்கள் வாழ்வை கிறிஸ்துவுக்குள் புதுப்பித்துக்கொண்டனர். கோவன், புத்வாடா மற்றும் சனோதாரா கிராம சபைகளில் பெண்களுக்கென விசேஷக் கூட்டங்கள் நடத்தப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவின் ஐக்கியத்துக்குள் வந்துள்ளவர்கள் இறுதிவரை விசுவாசத்தில் உறுதியாக நிற்க; வாலிபர்களும் சிறுவர்களும் கூடுகையில் எடுத்த தீர்மானங்களின்படி தங்கள் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள; கௌசிக் மற்றும் பூர்விகா இடையே நிலவும் மனகசப்பு நீங்கி ஒற்றுமை நிலவ ஜெபிப்போம்.

# தாத்ரா & நகர் ஹவேலி

### சில்வாசா: டேவிட்சன் ராஜாசிங் & கண்மணி பரிமளம்

**துதிக்க:** 115 நபர்கள் கிறிஸ்துவின் அன்பினை ருசித்து அவரே மெய்யான தேவன் என்று அறிக்கையிட்டனர். ராந்தா கிராமத்தில் வாலிபர்களுக்கென்று மூன்று நாட்கள் ஆவிக்குரிய முகாம் சிறப்பாக நடத்தப்பட்டது சுதேச ஊழியர்களுக்கும் அவர்தம் மனைவிகளுக்கும் 2 நாட்கள் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டன. நிலேஷ்-ராதாபென் குடும்பத்தில் ஐந்து வருடங்களுக்குப் பின் குழந்தை பாக்கியத்தை தேவன் அருளினதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 3 நாட்கள் நடைபெற்ற முகாமில் 10 வாலிபர்கள் முழுநேரப் பணிக்கென அர்ப்பணித்துள்ளனர். ஜெபிக்க தடைசெய்யும் வந்தனாபெனின் மாமனார் மனந்திரும்ப; அத்தோலா கிராமத்தின் புதிய விசுவாசியின் வாலிப பையன் டிலுபாயின் மனநிலை சரியாக; அந்தர்பாடா கிராம பாத்துபாய் மற்றும் மோர்கல் கிராம வசியாபாயின் பக்கவாதம் சரியாக ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஆஸ்நாத் தேவதாஸ்
திருமதி. மார்கரெட் முத்தையா சாமுவேல்
திருமதி. ஜெயா ரூபி சாலமோன்
திருமதி. கிருபாசனம் ஸ்டெல்லா ஆண்ட்ரூஸ்

## மகாராஷ்டிரா

### தலாசரி:

**மயில்சாமி ஜோசப் & ஏசுமணி**

**துதிக்க:** பத்து நபர்கள் இயேசுவே மெய்யான தெய்வம் என்று அறிக்கை யிட்டு அவரின் ஐக்கியத்தில் இணைந் தனர். போர்பாடா மற்றும் காசர்பாடா கிராமங்களில் புதிதாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு நற்செய்தி பிரதிகள் விநியோகிக்கப்பட்டன. குடும்ப ஆராதனை நடத்தப்பட்டு அதில் 42 குடும்பங்கள் கலந்துகொண்டு கிறிஸ்துவுக்காக சாட்சியுள்ள குடும்பமாக வாழ உறுதி எடுத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** உப்லாத் மற்றும் ராஜ்பூர் கிராமங்களில் நடக்கயிருந்த கிறிஸ்துவை அறிக்கையிடும் நிகழ்வு 2 முறை தடைப்பட்டுப்போன நிலையில், வரும் நாட்களில் தடங்கலின்றி நடந்தேற; சில்லார் கிராமத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டிருக்கும் சிறார் வேதாகமப்பள்ளிகள் சிறப்பாக நடைபெற; ஓசிவிரா கிராமத்தில் நடத்தப் படவிருக்கும் வாலிபர்கள் முகாம், அநேக வாலிபர்களின் பங்களிப்புடன் நடந்தேற ஜெபிப்போம்.

### இகத்புரி:

**நாகராஜன் & திலகவதி**

**துதிக்க:** விபத்தில் சிக்கி சுயநினைவற்ற நிலைக்குச் சென்றிருந்த அவருடைய மூன்று உறவினர்களான வாலிபர் களை, ஜுனாவாடி கிராமத்தின் விசுவாசி ராணிபேன், விடாத ஜெபத்தின் மூலம் சுகமாக்குகின்ற நிலைக்குக் கொண்டுவந்துள்ளார். முக்கானே கிராம சபையில் ஆத்தும ஆதாயப்பயிற்சிக் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. தமணி கிராமத்தில் நடைபெற்ற விடுமுறை வேதாகமப் பள்ளியில் அநேக புற மதத்தின் பிள்ளைகளும் கலந்துகொண்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கரோலி கிராம சபையில் காணப்படுகின்ற ஒற்றுமையின்மை மறைந்து போக; முக்கானே, வாகிர்பாடா, விஹிகாவ், உதலாட்டி மற்றும் பைனா சபைகளை தவறான உபதேசத்தினால் குழப்புகின்ற நபர்கள் மனம்மாற; விஹிகாவ் கிராம ஹிராபேனின் தவறாக முடக்கப்பட்டிருக்கும் வங்கி கணக்கு சரியாக; சபை விசுவாசிகளுடன் கொண்ட மனஸ்தாபத்தினால் ஆலயம் வராமலிருக்கும் விஹிகாவ் கிராமத்தின் சோமிபேன் மீண்டும் ஆலயம் வர ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜாண் தினேஷ் G.M.

## சோப்டா & சாங்வி விடுதி: வசாவா பாங்சிங் மௌலியா & ஏமன்பேன்

**துதிக்க:** ஆறு கிராம சபைகளில் முழுநாள் உபவாச ஜெபக்கூட்டங்கள் நடத்தப்பட்டன. விடுமுறை முடிந்து அனைத்து மாணவர்களும் நல்ல சுகத்துடன் தங்கள் வீடுகளிலிருந்து விடுதிக்குத் திரும்பியுள்ளனர். நான்கு கிராமங்களில் வெளிப்புற சுவிசேஷக் கூட்டங்கள் மூலம் நற்செய்தி பகிர தேவன் உதவினதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஆராதனைக்கு வந்துகொண்டிருக்கும் மகாதேவ் இனமக்கள் இன்னும் தேவனை அறிந்துகொள்ளவும் அதிக அளவில் இந்த இனமக்கள் ஆலயத்திற்கு வரவும்; கிராம சபைகளில் நடந்துகொண்டிருக்கும் சிறு ஜெபக்குழுக்கள் இன்னும் வல்லமையாக செயல்பட ஜெபிப்போம்.

## பெயிண்ட்:

### பிதுஷ் குமார் நாயக் & பிரீத்திபாலா

**துதிக்க:** நான்கு இடங்களில் நடைபெற்ற வாலிபர் முகாமில் சுமார் 1000 பேர் கலந்துகொண்டு ஆசீர்வாதம் பெற்றனர். 2 சபைகளில் நடைபெற்ற சபை மூப்பர் முகாமில் 200 பேர் கலந்துகொண்டு தேவ ஆசீர்வாதம் பெற்றனர். ஜாமன்பாடா கிராமத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 34 பேர் இயேசுவே தெய்வம் என்று அறிக்கையிட்டனர். தமனிபாடா கிராம சபை தேவ நாம மகிமைக்கென மங்கலப்படைப்பு செய்யப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசி நாராயண்பாயை ஊரில் தங்கவிடாமல் துரத்திவிடும் மஞ்ரி வடோலி கிராமத்தினர் கிறிஸ்துவின் வல்லமையை புரிந்துகொள்ள; நாச்சன்கடக் கிராமத்தில் ஆலயம் கட்ட நிலம் கிடைக்க; ஜாமன்பாடா கிராமத்தில் காணாமல்போன 16 வயது அஞ்சுபேன் திரும்ப பத்திரமாக வர; ஆலயம் கட்ட அனுமதி வழங்க மறுக்கும் கிராமத்தலைவர்கள் மனம் மாற ஜெபிப்போம்.

## காட்டு மிருகங்களையும் கட்டுப்படுத்தும் கர்த்தர்

*ஆந்திரா மாநிலம் தாமலச்செருவு பணித்தளத்தைச் சேர்ந்த சேசாபுரத்தின் கோபி ஒரு புதிய விசுவாசி. தவறாமல் ஆலயம் சென்று ஆராதித்து வருபவர். ஆனால் அவரது மனைவி அருணா இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்க மனமில்லாமலிருந்து வந்தார். ஊருக்கு வெளியே தனக்குச் சொந்தமான மாந்தோப்பில் வீடு கட்டிக்கொண்டு கோபியும் மனைவி அருணாவும் தனியே வசித்து வந்தனர். ஒருநாள் அருணா மட்டும் தனியே அந்த வீட்டிலிருந்த போது நள்ளிரவு சடசடவென்ற சத்தம் கேட்டு கண்விழித்துப் பார்த்த அருணா பீதியில் உறைந்து நின்றார். காட்டு யானைகள் கூட்டம் ஒன்று நிலத்தின் வேலையை தகர்த்து மிதித்துக்கொண்டு கோபியின் வீடு நோக்கி பிளிறிக்கொண்டே ஓடிவந்தது. வீட்டின் முன்அறையிலே அடுக்கி வைக்கப்பட்டிருந்த விளைப்பொருட்களை கபளீ கரம் செய்ய அந்த யானைகள் கூட்டம் ஓடி வந்துக்கொண்டிருந்தது. இன்னும் சற்று நேரம்தான் வீடு தரைமட்டமாகப்போகிறது அதில் தன்னுடைய உயிரும் போகக்கூடும் என்கிற ஆபத்தான சூழ்நிலையில் அருணாவிற்குத் தன் கணவர் ஜெபிக்கும் வாக்கியங்கள் நினைவுக்கு வந்தது. "இயேசுவே எங்க வீட்டை காப்பாற்றும் ஐயா!" வேறு வார்த்தைகளை உச்சரிக்க நேரமுமில்லை சொல்லவும் தெரியாது அருணாவிற்கு. அருணாவின் வாயிலிருந்து உதிர்ந்த அந்த பலமிக்க வார்த்தைகள் யானைகள் கூட்டத்தை வந்த வழியே துரத்தி விட்டன. யானைகள் கூட்டம் வந்த சுவடு தெரியாமல் ஓடி மறைந்தது. தற்போது அருணாவும் ஒரு நல்ல விசுவாசி. கர்த்தருக்கே மகிமை!*




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. பித்திகா பிபாபா பானி

## வத்ஃபாலி:

### பிதுயூத் குமார் சிங்

**துதிக்க:** 390 நபர்களை சந்தித்து 240 நற்செய்தி பிரதிகளை விநியோகிக்க தேவன் உதவினார். கர்ப்பப்பைப் பிரச்சினையினால் அவதியுற்ற ரமீலா தொடர் ஜெபத்தினால் சுகம் பெற்றார். நீண்ட நாட்களாக உடல் முழுவதும் வலியினால் அவதியுற்று வந்த பார்சிடாடா ஜெபித்து எண்ணெய் பூசி விடுதலைப் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மனபிறழ்வு ஏற்பட்டு கடந்த 3 வருடங்களாக பிள்ளைகளுடன் கூட பேசாமலிருக்கும் சுமித்ராபேன் சுகமடைய; அசுத்த ஆவியின் பிடியில் சிக்கித் தவிக்கும் சம்பாபேன் சுகமடைய; நற்செய்தியினை கேள்விப்பட்டுள்ள மக்கள் உண்மை தெய்வத்தை ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

## அக்கல்குவா:

### ஜக்மோகன் சிங் & ஸ்வாதி

**துதிக்க:** மூன்று நபர்கள் கிறிஸ்துவைத் தங்கள் சொந்த இரட்சகராக அறிக்கையிட்டனர். மஹூகாடி கிராமத்தில் தேவகிருபையால் புதிதாக ஆராதனைக்குழுவொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. விசுவாசிகளுக்கு ஒருநாள் முகாமும், புதிய தொடர் பாளர்களுக்கு தேடுவோர் முகாமும் நடத்த தேவன் கிருபை செய்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஹெச்.ஐ.வி நோயினால் பாதிக்கப்பட்டு மிகவும் பலவீனமாக இருக்கும் சர்மிளா குணமடைய; மழைக் காலம் முடிந்து பிற மாநிலங்களுக்கு வேலைக்குச் சென்றிருக்கும் விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தில் உறுதியாக இருக்க; ஊழிய விருத்திக்காக புதிய இடங்களுக்குச் சென்று சுவிசேஷம் பகிர நல்ல அர்ப்பணமுள்ள ஊழியர் கிடைக்க ஜெபிப்போம்.

## கான்தேஷ் பிராந்தியம்:

### எம். வினு & சுபிலா

**துதிக்க:** 13 பேர் கிறிஸ்துவை அறிந்து கொண்டு, அறிக்கை செய்தனர். மொஹலிபாடா கிராமத்தில் நடத்தப்பட்ட வாலிபர் முகாமில் 43 பேர் கலந்து கொண்டு கிறிஸ்தவ விசுவாசத்தில் புதுப் பிக்கப்பட்டனர். மோக்ராணி கிராமத்தின் பூஜாரி காசிராம் பாய் குடும்பத்தின் மனைவியைத் தவிர மற்றவர்கள் இறந்துவிடவே மனம் உடைந்துபோன அவரை நமது விசுவாசிகள் சந்தித்து சுவிசேஷம் கூறினர். 19 இடங்களில் இயேசு திரைப்படம் காண்பிக்கப்பட்டு சுமார் 3500 பேர் கண்டுகளித்தனர். 1750 நற்செய்தி பிரதிகள் வழங்கப் பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தலோடா பணித்தளத்தில் ரோஜ்ஜா கிராமத்தில் புதிதாக ஆரம் பிக்கப்பட்டுள்ள ஆராதனைக் குழுவிற்கு அதிக அளவில் மக்கள் வருகைத்தர; சபை மூப்பர்களின் பிராந்தியக்கூடுகை அனைத்து மூப்பர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்க; வத்ஃபாலி பணித் தளத்தில் கிறிஸ்துவை அறிக்கையிட தயங்கும் புதிய விசுவாசிகளின் சந்தேகம், பயம் ஆகியவை நீங்க ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜங்கோலுன் தௌதாங்
திருமதி. ஸ்டெஃபி பிஜு லால்
திரு. பாருட் பிரதாப் மாங்யா

### மொல்கி:

### பரணிதரன் & செல்வராணி

**துதிக்க:** ஒரு வருடமாக பக்கவாதம் வந்து பல வைத்திய முறைகள் செய்து தோல்வியுற்ற சாலிக்மார் கிராமத்தின் ராம்குபாய் நமது ஆலயம் வந்து குடும்பமாக ஜெபிக்கவே குணமடைந்தார். முழுக்குடும்பமும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டுள்ளது. 3 நபர்கள் கிறிஸ்துவே தெய்வம் என்று அறிக்கையிட்டனர். சக்டுபாரி கிராமத்தில் நடத்தப்பட்ட வாலிபர் கூடுகையில் 30 வாலிபர்கள் கலந்துகொண்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தீராத முதுகு வலியினால் அவதியுறுகிற புதிய விசுவாசி சுமன் குணமடைய; கிறிஸ்துவின் அன்பைவிட்டு பின்வாங்கிப்போன சங்கீதா குடும்பம், வேதனைகள் குடும்பத்தைச் சூழ்ந்ததால் மீண்டும் ஆலயம் வந்து ஜெபிக்கின்றனர். தேவன் அவர்களை பிரச்சினைகளிலிருந்து விடுவிக்க; மனநோயினால் பாதிக்கப்பட்டுள்ள கவிதா குணமடைய ஜெபிப்போம்.

## கர்நாடகா

### கோலார்:

### டேவிட் பெருமாள் & ஸ்டெல்லா

**துதிக்க:** 2 நபர்கள் கிறிஸ்துவின் மந்தைக்குள் வந்துள்ளனர். 3 வருடங்களாக செய்வினையின் பாதிப்பினால் குடும்பமாகக் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த பத்மா சகோதரி தொடர் ஜெபத்தின் மூலம் விடுதலை பெற்றார். கஸ்கட்டா திருச்சபை ஆரம்பித்து 20 வருடங்களான நிலையில் ஆலயத்திற்குத் தேவையான அனைத்து சாதனங்களையும் சபை மக்களே வாங்கி ஆலயத்தை புதுப்பித்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தேவனை விட்டுப் பின்வாங்கியுள்ள பேருந்து நடத்துனர் நாகராஜ் மீண்டும் தேவ ஐக்கியத்துள்ளாக வர; நாகேஷ்-சிந்து தம்பதியினர் குழந்தை பாக்கியத்தினால் ஆசீர்வதிக்கப்பட; கிருஷ்ணம்மாவின் இரண்டு மகன்கள் வெங்கடேஷ் மற்றும் நவீன் இரட்சிக்கப்பட்டு ஆலயம் வர; கடன் பிரச்சினையிலிருந்து அனிதா விடுதலை பெற ஜெபிப்போம்.

## எதிர்ப்பாளரையும் அரவணைக்கும் தேவ அன்பு

*ஜார்க்கண்ட் மாநிலம் லிட்டிபாடா பணித்தளத்தி லுள்ள கும்ஹார்பஜ்கா கிராமத்தைச் சேர்ந்தவர் லுயிஸ் ஹன்ஸ்தா. கிறிஸ்தவத்தை ஆரம்பத்திலிருந்தே எதிர்த்து வந்த இவர் ஆராதனைக்கு என்னவெல்லாம் இடையூறு செய்ய முடியுமோ அதனைச் செய்ததும் மட்டுமன்றி விசுவாசிகளுடன் தகராறு செய்வதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார். நமது விசுவாசிகள் பொறுமையுடன் இவருக்காக ஜெபித்து வந்தனர். திடீரென லுயிஸ் ஹன்ஸ்தா இறந்துவிடவே குடும்பம் திக்கற்று நின்றது. மேலும் அவர்களை ஒருவித பயம் மேற்கொண்டது. இயேசுவை விரோதித்ததினால்தான் வீட்டின் தலைவர் இறந்து விட்டார் என்று ஊரார் பேசினர். இந்நிலையில் நமது விசுவாசிகள் லுயிஸ் வீட்டிற்குச் சென்று ஆறுதல் கூறினதுமன்றி அவர்களுக்கு சுவிசேஷம் சொல்லி கிறிஸ்துவின் அன்பைப் பற்றி எடுத்துரைத்தனர். தங்களால் முடிந்த உதவிகளைச் செய்யவே லுயிஸ் குடும்பம் கண்கலங்கி நெகிழ்ந்துப் போய் ஆலயம் வர ஆரம்பித்தனர். தற்போது குடும்பமாக தேவனை ஏற்றுக்கொண்டுள்ளனர். தேவனுக்கே மகிமை.*




## ஹுப்ளி பிராந்தியம்:

### சுனில் தத்தகாரா & மீனாக்கி

**துதிக்க:** 10 நபர்கள் இயேசுவை அறிந்துகொண்டு, அறிக்கையிட்டனர். சமையல் வேலைக்குச் சென்றிருந்த பாரதி சகோதரி சமையல் எரிவாயு கசிந்து விபத்து நேரிட்டபோது சிறு காயத்துடன் தப்பினார். 6 வருடங்களாக மனஸ்தாபத்தினால் பிரிந்து வாழ்ந்து வந்த பிரவீன்-பாவனா தம்பதியினர் ஜெபத்தின் மூலம் சமாதானமாகி குடும்பமாக ஆலயம் வருகின்றனர். ஜெபித்து தங்களுடைய நிலத்தில் கிணறு வெட்ட ஆரம்பித்த சந்துலிங்காவின் நிலத்தில் நல்ல தண்ணீர் கிடைத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நிர்மலாவுக்கும் பவித்ராவிற்கும் தேவன் ஒரு நல்ல வேலையினை கொடுக்க; மஞ்சள்காமாலையினால் அவதியுறும் சித்தேஷ் மற்றும் வலிப்பு நோயினால் கஷ்டப்படும் கிருஷ்ணப்பா சுகம் பெற; தங்களுடைய 8 வயது குழந்தையைப் பக்கவாதத்தினால் இழக்கக்கொடுத்து, வேதனையுறும் பசவராஜ் - ராஜேஸ்வரி குடும்பம் வேதனையிலிருந்து நீங்கி ஆறுதலடைய; ஊழியரின் மகள் அரசாங்க போட்டித் தேர்வுகளில் வெற்றி பெற ஜெபிப்போம்.

## கஜேந்திரகடா:

### மஞ்ஜ்யா நாயக் & லமானி ரத்னா

**துதிக்க:** நற்செய்தி புதிதாக நான்கு கிராமங்களிலும், சுவிசேஷ பின்தொடர்பணி 30 வீடுகளிலும் நடத்த தேவன் கிருபை செய்தார். சிறு ஜெபக்குழுக்கள் எல்பெர்கா வில் ஒரு இடத்திலும் கடாவில் 3 மற்றும் குட்சகியில் 2 இடங்களிலும் ஆரம்பிக்கப் பட்டு சிறப்பாக நடைபெற்று வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குடித்துவிட்டு தன் குடும்பத்தினரை ஆராதனைக்கு போகவிடாமல் தடைசெய்யும் பீரப்பா மனந்திரும்ப; கால் வீங்கி நடக்கயியலாமல் கஷ்டப்படும் சுவர்னா விரைவில் சுகமடைய; இரானா குடும்பத்தில் நிலவும் சமாதானக் குறைச்சல் மறைந்துப்போக ஜெபிப்போம்.

## ஹலியால் (ஹுப்ளி):

### தாங்லால் ஸெள & நெம்ஸாவா

**துதிக்க:** கெர்வாடா, மெய்னாலி மற்றும் தாட்ஜெரா கிராமங்களில் நற்செய்தி பகிரப்பட்டது. நடத்தப்பட்ட முழுநாள் உபவாச ஜெபத்திற்கு அதிகளவில் விசுவாசிகள் வந்து பங்குபெற்று ஊக்கமாக ஜெபித்தனர். தீராத தலை வலியால் துன்புற்ற நாகராஜ் உபவாச ஜெபத்தில் கலந்துகொண்டு ஜெபித்தபின் சுகமடைந்தார். குடிப்பழக்கத்தினால் குடும்பங்களைக் கவனிக்காமலிருந்த நகேஷ் மற்றும் சிதப்பா ஆகியோரின் ஜெபத்தின் மூலம் தீயப்பழக்கத்திலிருந்து விடுபட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விபத்தில் சிக்கி தலை தவிர உடலின் பிற பாகங்கள் செயலற்ற நிலையிலிருந்த காக்கேரி கிராமத்தின் சுபாஷ் ஜெபத்தினால் சுகம் பெற்று வருகிறார். கால் வீக்கத்தினால் நடக்க கஷ்டப்படுகிற மரியம், சிறுநீரக நோய்த்தொற்றினால் அவதியுறும் மஞ்சப்பா, குடும்பம் முழுவதும் பலவித நோய்களினால் துன்புறும் பசப்பா குடும்பம் இவர்கள் விரைவில் சுகம்பெற; ஊழியத்தை எதிர்க்கும் ஹோசாகர்கல்லி கிராமத்தின் மஞ்சு, காலகட்டி கிராமத்தின் கிரிஷ் மனந்திரும்ப ஜெபிப்போம்.




### ஷிறஹட்டி: ஆஷாபிராப்தா பால் & தீனாகுமாரி பெபர்தா

**துதிக்க:** இருவர் கிறிஸ்துவே மெய்யான தேவன் என்று அறிக்கையிட்டனர். வாலிபர்களுக்கென மூன்று நாட்கள் சிறப்பு முகாம் நடத்தப்பட்டு அதில் அநேக வாலிபர்கள் உற்சாகத்துடன் கலந்துகொண்டனர். இரத்த வாந்தி எடுத்துக்கொண்டிருந்த பூமிகா சக விசுவாசிகள் ஜெபித்ததினால் அதிலிருந்து சுகம்பெற்றார். சகோதரி லக்ஷ்மி ஜெபத்தினால் குழந்தை பாக்கியம் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பக்கவாதத்தினால் நடக்க முடியாமல் கஷ்டப்படுகின்ற கிருஷ்ணப்பாவின் சுகத்திற்காக; பெற்றோரின் விருப்பத்திற்கு மாறாக நடந்து கெட்ட நண்பர்களின் சகவாசம் கொண்டிருக்கும் ரமேஷ் மனந்திரும்ப; பிரவீ–ஐஸ்வர்யா, சேக்கப்பா–ரேக்கா, மிட்டு–லலிதா, மாவி, லக்ஷியம்மா ஆகியோர் குழந்தை பாக்கியம் பெற; குடித்துவிட்டு மனைவியை ஆலயம் செல்ல தடுக்கும் ராஜு மனந்திரும்ப ஜெபிப்போம்.

## ஆந்திரப் பிரதேசம்

### தாமலச்செருவு:

### ஜாண் டேவிட்ராஜ் & ஞானசேகரி, அனில் மஹாலி & பிரசாந்தி

**துதிக்க:** நெல்லிமந்தபள்ளி கிராம விசுவாசி சுப்பிரமணி அறுவை சிகிச்சையின் போது ஆண்டவரின் கரம் அவரது தலையில் வைக்கப்பட்டு இருந்ததை உணர்ந்ததாக சாட்சிக் கூறி தேவனை மகிமைப்படுத்தினார். இதே கிராமத்தைச் சேர்ந்த சுகன்யா திருமணமாகி 10 வருடங்கள் கழித்து ஜெபத்தின் விளைவாக அழகான குழந்தையைப் பெற்றெடுத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கொத்தப்பேட்டா கிராமத்தின் ஜெயசந்திர ரெட்டி, பார்த்தசாரதி, கிரி ஆகியோர் ஆலயக்கட்டுமானப்பணியை ஆரம்பக்கட்டத்திலே தடுத்து நிறுத்தியுள்ளனர், இவர்கள் தேவனை அறிந்துகொள்ள; இந்தப் பகுதிகளில் இரவு நேரங்களில் கூட்டமாக வந்து விளைச்சலை அழிக்கும் யானைகள் கூட்டம் காட்டுப் பகுதிக்குள் விரட்டப்பட; உடன் ஊழியர் அனிலின் மனைவி பிரசாந்தியின் அண்ணன் புற்றுநோயினால் இறந்ததால் வேதனையிலிருக்கும் இவரது தாயின் ஆறுதலுக்காகவும், வயது சென்ற அவரின் பராமரிப்புக்கு பிரசாந்தியின் மற்றொரு அண்ணன் முன்வரவும் ஜெபிப்போம்.

### அக்கினி ஜுவாலையின் நடுவில்!

*உத்தரப் பிரதேசம், ஜின்ஜக் பணித்தளம். நாயின்பூர் கிராமத்திலுள்ள 4 வீடுகள் எரிந்து சாம்பலாயின. அதில் 3 வீடுகள் நமது விசுவாசிகளுடையது. இவ்விசுவாசக் குடும்பங்களிலுள்ள ஆண்கள் கூலி வியாபாரம் செய்பவர்களானதால், இச்சம்பவம் நடக்கும்போது தொழிலினிமித்தமாக அவர்கள் பிற இடங்களில் இருந்தனர். ஆயினும், தேவன் நடக்கவிருந்த பேராபத்திலிருந்து அவர்களது மனைவி, பிள்ளைகளை அற்புதமாகப் பாதுகாத்துள்ளார். தேவனுக்கே மகிமை! விரைவில் இவ்விசுவாசிகளின் வாழ்வாதாரத் தேவைகள் அரசாங்கத்தின் மூலம் நேர்த்தியாகச் சந்திக்கப்படவும், இவர்கள் தங்களது விசுவாசத்தில் உறுதியாகத் தரித்திருக்கவும் ஜெபிப்போம்.*




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஸ்ரீலதா ஸ்டீபன் ஜெயசீலன்
திரு. பிரதாப் ரஹாங்

### பலமநேர்:

**பால் குப்புசாமி & ஷைலா**

**துதிக்க:** சில்லாவாரிபள்ளியில் தேவ கிருபையினால் புதிதாக ஆராதனைக் குழுவொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இரத்தம் காரணமின்றி குறைந்துகொண்டே இருக்கும் விநோத வியாதினால் பீடிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த விஜய் சுகம் பெற்று வீடு திரும்பினார். அதீத உதிரப் போக்கினால் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த அனுஷ்யா உபவாச ஜெபத்தின் மூலம் சுகமடைந்து வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவை அறிக்கையிட தயாராக இருக்கும் பாலா மற்றும் மங்கம்மா குடும்பங்கள் தடைகள் நீங்கி கிறிஸ்துவின் ஐக்கியத்திற்குள் வர; பாவ்ஸ்ரி, மதுஸ்ரி, கௌதமி, புவனேஸ்வரி கணேஷ் மற்றும் கார்த்திக் ஆகியோருக்கு நல்ல இரட்சிக்கப்பட்ட வாழ்க்கைத்துணைகள் கிடைக்க; பசவராஜகண்ட்ரிகா மற்றும் சல்லாவாரிபள்ளி ஆராதனைக் குழுக்களுக்கு தினமும் புதிய ஆத்துமாக்கள் வர ஜெபிப்போம்.

## தமிழ்நாடு

### செங்கம்: கே.எஸ். ஜாஷ்வா

**துதிக்க:** வீட்டினருகே மின்னல் தாக்கி பெரிய மரம் எரிந்து விழுந்தபோது வீட்டிற்கோ, மனிதர்களுக்கோ எந்த சேதமும் வராமல் வீராசாமி குடும்பத்தை தேவன் பாதுகாத்தார். சபை மூப்பர்களுக்கு ஆத்தும ஆதாயப்பயிற்சி தர்மபுரி பகுதியில் மூன்று சபைகளிலும், திருவண்ணாமலை பகுதியில் 2 சபைகளிலும் கொடுக்கப்பட்டன. முழுநாள் உபவாச ஜெபக்கூட்டம் வாடிபட்டி சபையில் அநேக விசுவாசிகள் ஒன்று கூடி சிறப்பாக ஜெபிக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மோரப்பாளையம், குருரெட்டியூர், கன்னாய் மையங்களில் மூப்பர்களுக்கு நடத்த திட்டமிட்டிருக்கும் ஆத்தும ஆதாயப்பயிற்சி சிறப்பாக நடைபெற; அநேக மூப்பர்கள் பங்கு பெற்று ஆத்தும தரிசனம் அடைய; பரமானந்த் மற்றும் சாத்தனூர் சபைகளில் நடத்தவிருக்கும் முழுஇரவு உபவாசக் கூட்டங்கள் சிறப்பாக அமைய ஜெபிப்போம்.

### தேன்கனிக்கோட்டை:

**ஜெபராஜ் & எஸ்தர் தங்கம்**

**துதிக்க:** ஊழியத்திற்கு காட்டுவழியில் செல்லும்போது 2 முறை யானைகளிடமிருந்து தேவன் பாதுகாத்தார். சர்மிளாவிற்கு நல்ல வரனை தேவன் தந்தருளினார். முதல் தலைமுறை கிறிஸ்தவ பிள்ளைகளான சந்தோஷ் மற்றும் சரண்யா கல்லூரியில் சேர்ந்து படிக்க தேவன் வழிநடத்தினார். ஏரம்மா மற்றும் புஷ்பாவை தற்கொலை செய்யதூண்டும் தீய ஆவியின் பிடியிலிருந்து தேவன் விடுதலையாக்கினதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஆர்த்தி, முத்தம்மா, ராமப்பா, பக்தம்மாள், ரம்யா ஆகியோர் கிறிஸ்துவை அறிக்கையிட; தாயை இழந்து தவிக்கும் வித்யா மற்றும் சுவேதா ஆகியோரின் வாழ்க்கை பாதுகாப்பிற்காக; பால் லட்சுமணன் கண்ணில் நீர் வடிந்து கொண்டிருப்பது நிற்க; பாஸ்கர்– நதியா, பிலீப்– சித்ரா, அனிதா – மெர்வின் தம்பதியினருக்கு தேவன் குழந்தைச் செல்வம் அருள ஜெபிப்போம்.

**390 மிஷனரி ஆல்பம்**

திரு. சந்தோஷம் மற்றும் திருமதி. பொன்மணி தேவ இரக்கம் அவர்களுக்கு கடைசிப் பிள்ளையாக 21.09.1993 அன்று தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள கடாட்சபுரம் என்ற சிற்றூரில் திலக் பிறந்தார். கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்த காரணத்தினால் ஆலயம் போவது, கிறிஸ்தவ கூட்டங்களில் பங்கெடுப்பது போன்ற சராசரி கிறிஸ்தவ வாழ்க்கையை மேற்கொண்டிருந்தார். நாசரேத் ஊரில் ஐ.டி.ஐ. படிப்பை முடித்தவர் தன்னுடைய 23-வது வயதில் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு மூலமாக நடத்தப்பட்ட வாலிபர் முகாமில் கலந்துகொண்டு இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றார். 2017-ம் ஆண்டு ஊழிய அழைப்பைப் பெற்றவர் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் சென்னை தலைமை அலுவலகத்தில் 2 வருடங்கள் தன்னார்வலராகப் பணியாற்றி பின்னர் முழுநேரப் பணியாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு மிஷனரி ஊழியப் பயிற்சிக்கு ஜான்சி பயிற்சி மையத்திற்கு அனுப்பப்பட்டார். பயிற்சி முடித்து ஜீப் ஊழியத்தில் 2 வருடங்கள் பணியாற்றிய பின்னர் 2020-ம் ஆண்டு எமிமாள் என்ற சகோதரியுடன் திருமண பந்தத்தில் இணைந்தார்.

திரு. ஆபல் & திருமதி. தேவி என்பவர்களுக்கு மகளாக 1995-ம் ஆண்டு எமிமாள் பிறந்தார். இவரின் பெற்றோர் முதல் தலைமுறை கிறிஸ்தவர்களானதால் நல்ல கிறிஸ்தவ முறைமையின்படி வேதாகமத்தைக் கற்றுக்கொடுத்து வளர்த்தனர். ஆனால் பள்ளி படிப்பு முடிந்ததும் கிறிஸ்துவை விட்டு விலகி வெகுதூரம் சென்றுவிட்டார். இவரது பெற்றோர் இவரை இயேசு விடுவிக்கிறார் ஊழியப்பயிற்சி மையத்தில் சேர்த்தனர். அங்கு மீண்டுமாக கிறிஸ்துவின் ஐக்கியத்துக்குள்ளாக வந்தவர் ஊழிய அழைப்பைப் பெற்று 2014-ம் ஆண்டு நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் முழுநேரப் பணியாளராகச் சேர்ந்தார். மிஷனரி ஊழியப் பயிற்சியினை ஜான்சியில் முடித்தவர் உத்தரப்பிரதேசம், ராஜஸ்தான், மகாராஷ்டிரா மாநிலங்களில் பணியாற்றி, பின்னர் சகோ. திலக்கை மணமுடித்து, தற்போது மத்தியப் பிரதேசம் மோத் பணித்தளத்தில் குடும்பமாக பணியாற்றி வருகின்றனர். தேவன் இவர்களுக்கு 2022-ம் ஆண்டு ஒரு பெண் குழந்தையைக் கொடுத்து ஆசீர்வதித்துள்ளார். இந்தக் குடும்பத்தை நம் ஜெபத்தில் தாங்குவோம்.



**திரு. திலக் & திருமதி. எமிமாள் குடும்பம்**


## FMPB - மகளிர் மாநாடு - 2024

**அம்பத்தூர் பிராந்தியம்**

**நாள்:** 15.01.2024 - திங்கட்கிழமை

**நேரம்:** காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை

**இடம்:** அம்பத்தூர் - புதூர் இம்மானுவேல் மெதடிஸ்ட் ஆலய, சூசன்னா மண்டபம்.

**நாள்:** 16.01.2024 - செவ்வாய்க்கிழமை

**நேரம்:** காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை

**இடம்:** ரெட்ஹில்ஸ், செயின்ட் ஜோசப் மெட்ரிக் பள்ளி. **தொடர்பு:** 94449 44188

Regd. Newspaper for India No.17759/69

# Prayer For The New Year

Heavenly Father, we thank You for the year that has passed and the many blessings You have showered us in time.

We beg your pardon in our many failings and trespasses and we pray that the coming year be a more fruitful one.

We earnestly pray for the gift of the Holy Spirit and we call upon our Lord Jesus Christ for His intercessions, His guidance and His light to shine our path.

***Published by:*** S. John Berlin on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. John Berlin***